www.tamilarangam.net

# எரிமலை

ஜூலை 1997




## கரும்புலிகளும் ஒரு தசாப்தமும்

- சிறப்புக் கட்டுரை

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அக்கறைப் பூக்கள்

தோழமை நிறை எரிமலை
ஆசிரியர் குழுவிற்கு,

தமிழ்நிறை வணக்கமும், விடுதலை வாழ்த்துக்களும்.

97–மார்ச் எரிமலை இதழும் முந்தைய இதழ்களும் கிடைக்கப்பெற்றேன். நன்றி. அதன்பின் இதழ்கள் வந்துசேரவில்லை; தமிழீழப் போர்க்களச்செய்திகள் தற்போது "தென் செய்தி" ஒன்றின் வாயிலாக மட்டுமே அறியப் பெறுகிறோம். கடந்த மார்ச்–ஏப்பிரல் – மே – ஜூன் மாதங்களில் தமிழகத்தில் எமது அரசியல் கட்சியான தமிழ்நாடு மார்க்சிய இலெனினியக் கட்சியின் சார்பில் பிற தமிழீழ, தமிழ்த்தேச விடுதலை ஆதரவு அமைப்பினரை இணைத்துக் கொண்டு விரிவான முறையில் ஈழத்தமிழினப் பாதுகாப்புக் கருத்தரங்கு, மாநாடு, பொதுக் கூட்டம், கலந்துரையாடல் மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்ட செய்திகளை துண்டறிக்கைகள் வாயிலாக அறிந்திருப்பீர்கள் என நம்புகின்றேன்; இந் நிகழ்வுகளில் அண்மைக்காலங்களில் இடம்பெற்றிராத அளவில் தமிழன்பர்கள் – குமுகாய முன்னணியினர் பங்கு பற்றியிருந்தமையானது, தமிழீழ – தமிழ்த்தேச ஆதரவு நிலை வலிவுபெற்றுள்ளதையே எடுத்தியம்புகின்றன. அத்தோடு கடந்த ஜூன் 6–ம் நாளில் தமிழ்நாடு முழுமைக்குமான முழு அடைப்பு ஒன்றினைத் தமிழக மக்கள் 80 வீதம் வெற்றியோடு நிகழ்த்திக் காட்டியுள்ளனர்;

"இதோ..... ஒருவன் இங்கிருக்கின்றேன்.....
ஈழத்தமிழரை ஆதரிக்கின்றேன்.....
எனைச் சிறைச் செய்யினும் செய்க என்றன்
தலைக்கொய்யினும் கொய்க...."

என்று முழங்கிய விடுதலைப் பாவல் வேறு. பெருஞ்சித்தனார் அவர்களின் 2–ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் தமிழகமெங்கும், பரவலாக நடைபெற்றுள்ளன; இந்நிகழ்வுகளினூடாக எமது போர்க்குணத்தைக் கூர்தீட்டிக் கொள்ளும் வேளைகளில், பெரியமடு, தாண்டிக்குளம் பகுதிகளில் எமது தம்பி தங்கையரின் போர்த்திறனறிந்து எல்லையற்ற மகிழ்வுணர்வு பொங்கியது! 21 ஆண்டுகளுக்கு முன்னால் தம்பி பிரபாகரன் அவர்களால் தொடங்கப்பட்ட இயக்கம் இன்றைக்குப் பெற்றிருக்கும் மாபெரும் வளர்ச்சி கண்டு நெஞ்சகங்களில் பெருமிதம் நிரம்புகிறது! "யார் ஆதரித்தாலும், ஆதரிக்காவிட்டாலும் விடுதலைப் புலிகள் தமிழீழத்தை வென்றே தீருவார்கள்!" என அய்யா பழ. நெடுமாறன் அவர்கள் எங்கும் முழங்கிவரும் போதிலும், நாம் வாழா விருத்தல் இயலாது! சந்திரிகாவின் நேரடிப்பார்வையில் சென்னையில், இலங்கைத் துணைத்தூதராகச் செயல்பட்டுவரும் கௌதமதாசா எனும் சிங்களப் பேரினவாத நச்சுக்கிருமி, தமிழினத்தினூடாக கருங்காலிகளை உருவாக்கி எதிர்ப்பரப்புரையை முடுக்கிவிட்டு வருகிறான் – "புத்தர் விழாக்கள்" என்ற பெயரில் நச்சுவித்துக்களை ஊன்றி வருகிறான் – இன்னொரு புறம், இந்திய தேசிய வல்லாதிக்கத்தால் வீழ்ந்துகிடக்கும் தமிழ்மக்களிடையில் சாதியத்தீ மூட்டி தென் மாவட்டங்களெங்கும் சாதி ஆதிக்கத் தலைவர்கள் குளிர்காய்ந்து திரிகின்றனர்; இவற்றையெல்லாம் கணக்கிற்கொண்டு தமிழீழ விடுதலைக்காதரவாகவும், சாதியத் தடைகளைக் கடந்து தமிழ்த்தேசிய விடுதலைக்காகவும் எம்தமிழ்மக்களை அணிதிரட்டும் பெரும்பணி எம்முன் விரிந்து கிடக்கின்றது! இக்களப்பணிகளுக்கு உரமூட்டும் ஆற்றல், விடுதலைப் பெருநெருப்பைத் திக்கெட்டும் ஏந்திப் பரப்பி வரும் எரிமலை – ஒன்றிற்குத் தான் உண்டென்பது மாறுபாடற்ற உண்மையாகும்!

எனவே, எமது முகவரிக்கு திங்கள் தோறும் இரண்டு எரிமலை இதழ்களைத் தவறாது அனுப்பித் தாருங்கள் எனத் தோழமையன்புடன் வேண்டிக் கொள்கிறேன்! எரிமலையோடு, பிற வெளியீடுகளையும் இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்; இவ்வாண்டின் தமிழ்நாட்காட்டி எமக்கு அனுப்பப்படவில்லை என்பதைத் தோழமையோடு நினைவூட்டி, அனுப்பி ஆவன செய்யுமாறும் கோருகிறேன்

எமது தாகம்.......தமிழீழ, தமிழ்த் தேசத் தாயகம்!

வெல்லட்டும்....... தேசிய விடுதலை புரட்சிகள்!!

விடுதலை வாழ்த்துக்களுடன்,

தோழர். இரா.வே. பகவதிராசு.
தூக்கநாயக்கன் பாளையம்
பெரியார் மாவட்டம் - தமிழ்நாடு.

***

மதிப்பிற்குரிய எரிமலை
ஆசிரியர் குழுவிற்கு,

வணக்கம்! தங்களின் "எரிமலை" மாத இதழின் ஜனவரி 97 பிரதியை நான் தற்செயலாக ஓர் நண்பர் மூலம் படிக்க நேர்ந்தது. நானும் என் குடும்பத்தினரும் இயல்பாகவே மிக்க தமிழ் பற்றும் இனப்பற்றும் கொண்ட நெஞ்சினர்.

இங்கு ஈழத்து செய்திகள் மிகவும் மூடி மறைக்கப்படுகின்றன; ஈழத்தமிழர்களுக்கு எதிரான செய்திகளும் சிங்களப் பேரினவாதத்திற்கு ஆதரவான செய்திகளும் மட்டுமே பெரிது படுத்தப்படுகின்றன.

தங்கள் இதழில் எழுதப்பட்டுள்ள தலையங்கம் இன்ன பிற கட்டுரைகள் எல்லாம் வெகு சிறப்பாக உள்ளது. அவற்றை விவரிக்க இச்சிறு கடிதம் போதாது. இனி எனது வேண்டுகோள் என்னவெனின் தங்கள் இதழை மாதந் தோறும் பெற்று படிக்க விரும்புகின்றேன், ஆகவே எரிமலை இதழ் தொடர்ந்து எனக்கு கிடைக்கக்கூடிய தாக அனுப்பி வைக்கவும்.

எவ்வளவு சோதனைகள் வந்தாலும் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் வெற்றிபெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வெல்க தமிழீழ
விடுதலைப் போர்!

கோ.ச. கற்பகசுந்தரம்
இலக்குமிபுரம் குரோம்பேட்டை,
சென்னை

***



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...


★ இராணுவ ஆக்கிரமிப்பும் உணவு விநியோகமும் – பக்கம்.....18

★ திறந்த மடல் – பக்கம்....20

★ சிங்களக் குடியேற்றங்கள் – பக்கம்....24

★ ஜனசக்தியின் அபவாதம் – பக்கம்....30

★ தெளிவாகத் தெரியும் மாற்றங்கள் – பக்கம்....38

★ கணக்குத் தீர்க்கும் காலம் – பக்கம்....40

★ ஓவியக் கலை – பக்கம்....42

★ இயற்கையின் மீறல் – பக்கம்....44

★ வைகறையின் வசந்தம் – பக்கம்....46

★ உறுதி – பக்கம்....48



கரும்புலிகளும் ஒரு தசாப்தமும் - பக்கம் 05



நாட்டுரிமைக்கான தமிழர்களின் போர் - பக்கம் 14



போரும் வாழ்வும் - பக்கம் 33

தமிழ் படும்பாடு - பக்கம் 22





'அம்மான்' இலட்சிய நாயகன் - பக்கம் 11

இந்திய தமிழீழ உறவுகள் - பக்கம் 26






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரும்புலிகள்

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள், அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

ஒரு கரும்புலி வீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக்கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான்.

'கரும்புலிகள்' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத ஊடகமான, இரகசியமான தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும்.

முகத்தை மறைத்து, பெயரையும் புகழையும் வெறுத்து, இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்துவிட்ட இந்த சரித்திர நாயகர்களை நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

**தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

ஜூலை 1997

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

# தீர்வுப் பொதி - தீராத பொறிகள்

தனக்கே உரிய பிரச்சார உத்திகளுடனும், வார்த்தை வர்ண னைகளுடனும் சிங்கள அரசு பிரேரித்த தீர்வுப் பொதி, இவ் வருட இறுதிக்குள் சிங்கள பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படும் என மீள ஒரு வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. பிரதேசங்களின் கூட்டமைவு (Union of Regions) எனப் பெயரிடப்பட்டு இலங்கைத் தீவை சிறுசிறு மாநில அரசுகளாகக் கூறுபோட்டு, அவற்றிற்கு அதிகாரங்களை வழங்கும் சந்திரிகா அரசின் தீர்வுப் பொதி, சிங்கள அரசியல் கட்சி களினதும், கொழும்பு வாழ் தமிழ் துரோகக் கூலிக் குழுக்களினதும் 'பார்வைக்காக' சமர்ப்பிக்கப்பட்டு, பாராளுமன்ற ஆய்வுக் குழுக்கள் இவற்றை ஆராய்ந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தீர்வுத் திட்டம் பற்றிய பிரமிப்பு, திட்டமிடப்பட்ட முறையில் சர்வதேச சமூகத்தின் முன் அழகாகக் கட்டி எழுப்பப்பட்டு வருகின்றது. தமிழர்களின் தேசிய எழுச்சிக்கான காரணங்களைப் புரிந்து கொண்ட[?] சந்திரிகா அரசு தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கும் கூட் டாட்சி முறையை வழங்க உள்ளதாக கொழும்பு தகவல் தொடர்பு சாதனங்கள் ஊடாக மாயை கட்டி எழுப்பப்படுகின்றது.

ஆயினும், இத் தீர்வுத்பொதி தமிழர்களுக்கு வழங்கப்படவுள்ள நீதியான — பாதுகாப்பான எதிர்காலத்திற்கும் வளர்ச்சிக்குமான தீர்வுத் திட்டமா அல்லது தமிழர்களின் சுதந்திர எழுச்சியை நசுக்குவதற்கான சிங்கள இனவாத அரசின் இராணுவ — அரசியல் சதித்திட்ட பொறியா?

இப் பிரதேசங்களின் கூட்டமைவு (Union of Regions) வடக்கு — கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகம் என இந்திய — இலங்கை ஒப்பந்தத்தில் 'எல்லைகளாக' வரையறை செய்த பிரதேச பிரிவுக ளைக் கூட ஒன்றிணைப்பதாய் அமையவில்லை. மாறாக சிறீலங்கா சட்ட அமைச்சர், வடக்கு — கிழக்கு முழுமையாக ஒன்றிணைக்கப்பட மாட்டாது என திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இக் கூட்டமைப்பு தமிழர்களின் தாயகம் — சிங்களவர்களின் தாய கம் என்ற தேசிய இனங்களுக்கான வரையறையைத் தூக்கி எறிந்து விட்டு காலி, மாத்தறை போன்ற பிரதேசங்களின் வரிசையில் தமிழர்களின் தாயகத்தையும் சமப்படுத்த முனைகின்றது. ஆயினும் முஸ்லீம் மக்களுக்கான உப அரசை உருவாக்கி, வடக்கு — கிழக்கை இன அடிப்படையில் பிரிப்பதற்கான அடிகோல் இடப்பட்டுவிட்டது.

இவ்விரு வெளிப்படுத்தப்பட்ட தீர்வுத் திட்டம் தொடர்பான அடிப் படை முரண்பாடுகள், தமிழர்களின் பிரதான கோரிக்கையான தமிழர் கள் ஒரு தேசிய இனம்; அவர்களுக்கு என வரையறை செய்யப்பட்ட தாயகம் உள்ளது; அவர்களுக்கு பிரிந்துபோகும் உரிமையுடன்கூடிய சுயநிர்ணய உரிமை உண்டு என்ற விடயத்தை நிராகரிக்கின்றது. மேற்கூறிய விடயங்களுக்கான பிரேரிப்பு, சிங்கள இனவாதம் தன்னை நவீனமயப்படுத்தி அடக்குமுறைக்கு வேறு ஒரு வடிவம் கொடுக்கவே திட்டங்களைத் தீட்டுகின்றது என்பதற்கான வெளிப்பாடா கும்.

தமிழர்கள் இவ் ஏமாற்றுகரமான — அவர்களது இருப்புக்கும் எதிர்காலத்திற்கும் வழிசமைக்காத — பொறிக்குள் அகப்படாது சிங்கள இராணுவம் முற்றாக விரட்டப்பட்ட, சுயமாக தமது விதியை நிர்ணயிக் கும் அனைத்து மக்கள் சமூகங்களுக்கும் உள்ள உரிமை நிலை நிறுத்தப்பட்ட ஒரு தீர்வுக்காகப் போராடுவதே, இதுவரை நாம் அடைந் துள்ள வெற்றியையும், அங்கீகாரத்தையும் பாதுகாத்து உறுதியான, நேர்மையான, நீடித்து நிற்கக்கூடிய தீர்வுக்கு வழிசமைக்கும்.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பகை வீழ விழிதிற!

புதுவை இரத்தினதுரை



பகை நுழைந்து எம் தாயின் மடியிலேறிப்
பாய்ந்துவரு கின்றதென அறிந்த பின்பும்
நகையுனது முகத்தினிலே பூத்திருத்தல்
நல்லதல்ல....; இந்தா பார் தமிழன் வாழும்
திசைமுகத்தைத் தின்றொழிப்பேன் எனவுரைத்து
தெற்கிருந்தெம்; தெருவழியே எதிரி சேனை
அசைகிறதாம்; அடதமிழா! இனியும் தூங்கி
அசையாமற் கிடப்பதற்கா பிறந்தாய்? வெட்கம்!

பூமலர்ந்த காவினிலே...... கள்ளை உண்டு
பொன்வண்டு தள்ளாடும், வயல்களெங்கும்
வாய்மலர்ந்து புன்னகைக்க வரப்பி னோரம்
வளை நண்டு சதிராடும், மரங்க ளெங்கும்
காயுதிரக், கனியுதிரக் கவிகள் கூடிக்
காதலுடன் உறவாடும் மடியி லேறித்
தாய்நிலத்தைக் கீறிவரும் பகைவன் மேனி
தணலிடையே வெந்தழிந்து சாம்ப லாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்னிமண் எவருக்கும் வணங்கி நின்ற
வரலாறு கிடையாதே; அடங்காப்பற்று
அந்நியர்க்குத் தொடைநடுங்கிப் பணிந்து என்றும்
அடங்கியது கிடையாதே, நெடுநா ளெங்கள்
மண்ணினிலே பகையிருந்து அரசு செய்த
பழங்கதைகள் கிடையாதே அந்தோ, அங்கே
என்னவது போர்முரசம்? தமிழர் தேசம்
எலிவளையா? இல்லையிது இரும்புக் கோட்டை!

தாய்மடியை விட்டிறங்கித் தொட்ட மண்ணை
தமிழ்படிக்க முதலெழுத்தை ஆனா என்று
வாய்படிக்கக் கைவிரலால் எழுதி உன்னை
வளர்த்த மண்ணை, வன்னியென்ற வீரமண்ணை
பேய் பிடிக்க விட்டுவிட்டுப் போனாயென்றால்
பிறகுனக்கு அரையினிலே உடுப்பெதற்கு?
தேய்கின்ற நிலவதுவும் உன்னைப் பார்த்துச்
சிரிக்குமடா உனக்கிந்த இழிவு வேண்டாம்.

காற்று வந்து தாலாட்டக் கண்கள் மூடிக்
களிப்பதற்கு இதுவல்ல நேரம், உண்ணும்
சோற்றினிலே நாக்கை நனைத் திருந்து எச்சில்
சொரிவதற்கும் இதுவல்ல நேரம், இன்பச்
சேற்றினிலே கால்புதைய மாதர் தம்மைச்
சேர்வதற்கும் இதுவல்ல நேரம், வந்த
கூற்றுவரை எதிர்கொள்ளும் நேரம், நெஞ்சைக்
கொதிநிலைக்கு ளாக்கின்ற நேரம் தம்பி.

விழிகளுக்கு மையெழுதி தலையைச் சீவி
விடுவதற்கு இதுவல்ல நேரம், காதல்
மொழிக்குள் கசிந்துருகிக் கையணைப்பில்
கரைவதற்கு இதுவல்ல நேரம், உப்புப்
புளியுடனே பெருங்காயக் கணக்குப் பார்த்துப்
பொரிப்பதற்கும் இதுவல்ல நேரம், எங்கள்
வழிதெருவில் வருகின்ற பகையை வெல்ல
வாசலிலே நிற்கின்ற நேரம் தங்காய்.

எழுதமிழா! எழுதமிழா!! பகைவன் உந்தன்
எல்லையிலே வருவதற்குள் எழுவாய்; நாளும்
தொழுவதுவும் அழுவதுமாய் கிடந்து நாறித்
தொலைவதுதான் வாழ்வென்றா நினைத்தாய்? போரின்
பளுசுமந்து ஊர்வருமெம் பகையை வீழ்த்தப்
பாயைவிட்டு நீயெழுவாய்; தமிழன் வீரம்
விழுவதில்லை, எதிரிபடை வென்று நிற்க
விடுவதில்லை, எனவிழியில் நெருப்பை மூட்டு.



வருகின்றாய், வருகின்றாய் அகலக் காலை
வைத்தெங்கள் மண்ணீது வருகின்றாயே
வருகின்றாய் உயிர் மீது பகையே ஏறி
வருகின்றாய் வந்தெங்கே தங்கப் போறாய்?
வருகின்றாய் உனக்கான குழியைத் தேடி
வருகின்றாய், உள்ளேவா நாளை யிந்தத்
தெருவெங்கும் சிதறிப்போய் கிடப்பதற்கே.
செருக்கோடு வருகின்றாய் வாவா உள்ளே!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# கரும்புலிகளும் ஒரு தசாப்தமும்

ஓர் போராட்டம் தனது கால்களை முன்னோக்கிப் பதித்து, வெற்றித் தடத்தில் பயணம் செய்வதை எடைபோட வேண்டுமானால், ஒடுக்குமுறையாளர் அப் போராட்டத்தைச் சீர்குலைக்க எவ்வளவு ஆக்ரோஷமாக முயற்சி செய்துள்ளார்கள் என்பதும் முக்கிய அளவீடாகும். தற்போது இரு பத்தோராவது அகவையில் நிற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நோக்கி சிறீலங்கா அரசு முன்னெடுத்துள்ள சூரியக் கதிர், வெற்றி நிச்சயம் போன்ற சமீபத்தய கடும் போர் நடவடிக்கைகளைப் பார்த்தால் தமிழீழ விடுதலைப் போரையும் அதன் வெற்



றித் தன்மையையும் சிறீலங்கா அரசு எவ்வாறாக எடைபோட்டுள்ளது என்பதைப் புரிதல் எவர்க்கும் கடிமான பணியல்ல. இந்தத் தீவிரத் தன்மைகளை எதிர்கொள்ளும் முதல் விசையாகி போரிட்டோரின் செயற்பாடுகளே கடந்த பத்தாண்டுகால கரும்புலிகள் வரலாறாகும்.

உலகின் பல பாகங்களில் தற்போது விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கெல்லாம், இத்தகைய அற்புதமான தியாக தூண்களாக கரும்புலிகள் அணி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மட்டும் உருப்பெற வேண்டிய தேவை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யென்ன?

இதற்குரிய விடை, ஈழத் தமிழினம் அனுபவித்துவரும் திட்டமிட்ட ஒடுக்குமுறைசார் வரலாற்றோடு தொடர்புடையது. சிறீலங்கா அரசின் நவீனமயப் படுத்தப்பட்ட இராணுவ, கனரக தளபாடங்களுடன் கூடிய பெருமெடுப்பிலான முப்படைகளுடனும், விடுதலைப் புலிகள் அணியினர் எவ்வாறு சமபலம் பெற்றார்கள் என்பதற்கான விடையை தம் ஈகத்தால் அடையாளப் படுத்தியவர்கள் கரும்புலிகள். அதே வேளை விடுதலைப்புலிகள் என்ற பிரவாகத்திற்கு எழுச்சி ஊட்டிய இன்னொரு கிளை நதி எனவும் இவர்களைக் கூறலாம். இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் உள்ள உலகம் மாற்றமின்றி வைத்திருக்கும் தரை, வான், கடல் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் முப்படைகள் சார் வடிவத்தில்





கரும்புலிகள் அணி வித்தியாசமானது. சிறிய பத்தாண்டுகால வரலாற்றைக் கொண்டிருந்தாலும் உலகத்தையே கணத்திற்குக் கணம் நிறுத்தி வைக்க கூடிய சாதனைக் கற்களால் கட்டப்பட்டதே அவர்களின் வீர வரலாறு. மறுபக்கமாக ஓர் இனம் மாற்று வழிகளற்று உயிராயுதத்தையே கையில் எடுக்கவேண்டிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பதை கடந்த பத்தாண்டுகளாக தம் தியாகத்தால் மட்டும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பவர்களே கரும்புலிகள் என்றும் பல கோணங்களில் அவர்களின் சாதனைகளை மதிப்பிடலாம்.

கரும்புலிகளின் ஒரு தசாப்தத்தை மதிப்பிட முயலும் எவரும், இலங்கையின் சுதந்திரத்திலிருந்தே அதற்கான தேவையானது நாளும் பொழுதுமாகக் கனிந்து வந்திருப்பதை நோக்க வேண்டும். கண்டுபிடித்த காலத்திலிருந்தே எந்தவித மாற்றமும் செய்யப்படாத கட்டை வண்டியாக ஓடிக்கொண்டிருக்கும் பேரினவாதத்தையும், அதன் முகத்தடியையும் சுமந்து நடக்கமுடியாத கிளட்டுப் பாதைகளில் பயணித்து தமிழ் மக்களே சீரழியவேண்டும் என்ற ஆசையிலுள்ள அநீதியை உணர்ந்தால்; கரும்புலிகளின் உருவாக்கத்திலுள்ள தார்மீக நியாயத்தையும் உணர்ந்து கொள்ளலாம். எனவேதான், "நாம் இனஅழிவை எதிர் கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம் பலம்வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கின்றார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து வருகிறது. எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து ஒரு தற்பாதுகாப்புப் போரை நிகழ்த்த வேண்டும். இல்லாவிட்டால் நாம் இன ரீதியாக அழிந்து போவதைத் தவிர்க்கவே முடியாது!" என்று கரும்புலிகள் உருவாக்கத்திற்கான காரணத்தை எடுத்துரைத்தார் தமிழீழத் தேசியத் தலைவர். இதுபோல, "இப்பூமியில் நாம் அழிக்கப்படாது நிலைத்திருக்க வேண்டுமானால் தேவைக்கேற்ப நாம் நம்மை மாற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை" என அண்மையில் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயரும் கூறுனார். இவ்விரு கருத்துக்களும் இருவேறு பொருள் கொண்டனவல்ல; ஒவ்வொரு இனமும் தம்மைக் காக்க எடுக்கும் நியாயமான முன்னெடுப்புக்களே.

சதந்திரம் கிடைப்பதற்கு முன்னரே தமிழரை அடிமைச் சேற்றில் தள்ள சிங்களத் தலைமைகள் ஆதிக்க சக்திகளுடன் ரகசியத் திட்டங்களை எழுதிக் கொண்டன. ஆனால் அவர்கள்கூட தமது வாழ்வுக்கான ஆதார சக்தியை அதே ஆதிக்க சக்திகளிடம் இழந்திருக்கும் உண்மையை எப்படியோ யார் தலையில் போட்டோ மறைக்கவேண்டியிருந்தது. இதற்காகப் பலி கொடுக்க அவர்கள் தமிழ் பேசும் மக்களைப் பயன்படுத்திக் கொண்டனர். இந்தத் தீய பழக்கம் ஆரம்பத்தில் அவர்களிலிருந்து யாத்திரீகன் போலத் தோன்றியது. பின் விருதாளியாகி கடைசியில் அவர்களை ஆட்கொண்ட சர்வ வல்லமை படைத்த முதலாளியும் ஆகியது. இதைத்தான் சிறீலங்காவின் இன ஒழிப்பு வன்முறை 1958–ல் இருந்து 1983–வரையான காலப்பகுதியில் ஒருவிதமாகவும் 1983–ல் இருந்து 1987–வரை இன்னொரு விதமாகவும் 1987–க்குப் பின் முற்றிலும் வேறுபட்ட விதமாகவும் அமைந்ததென ஆய்வாளர் கூறுவர். முதல் கட்டத்தில் தமிழர்களை கீழ்மைப்பட்ட அடிமைகளாகவே கணித்து தாக்குதலை நடத்தினர். 1983 ஜூலைக் கலவரத்தின் பின்னர் அவர்களே தமிழர்களைப் புலிகள் என ஒப்புக் கொள்கிறார்கள். சிங்களத்தின் ஆட்சித் தலைவர் ஜெயவர்த்தனா பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நோக்கி "தமிழர்களின் எத்தகைய அபிப்பிராயத்தைப் பற்றியும் எனக்குக் கவலை இல்லை. அவைகளைப் பற்றி இப்போது நாங்கள் சிந்திக்கமுடியாது. அவர்களின் உயிர்களைப் பற்றியும் எங்களுக்குக் கவலை





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லை” என்று கூறினார். அதன் பின்னர் இன அழிப்பு மோசமடைந்து 1987–ல் வடமராட்சித் தாக்குதலின் போது உக்கிரமடைந்தது. இதற்கான பதில் மாற்று வழியின்றிக் கரும்புலிகள் அணியாக உருவெடுத்தது. அதே ஆண்டு ஜூலை 5–ம் திகதி நடைபெற்ற கப்டன் மில்லரின் தாக்குதல் சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளை முறியடித்தது. அதன்பின் இந்திய அரசு மீதிப்போரைத் தத்தெடுக்கவேண்டி வந்தது. தராசுத் தட்டில் போட்டுப் பார்த்தால் ஒரு மில்லரின் தாக்குதலுக்கு சமபலமாக இந்திய வல்லரசின் படையணியே நகரவேண்டி ஏற்பட்ட உண்மை தெரியவரும். இதுவே



கரும்புலிகளின் பொன்னான ஆரம்ப புள்ளியாகும்.

மில்லரில் ஆரம்பித்த கரும்புலிகள் அணியில் இன்றுவரை 105 கரும்புலிகள் தம்மை உயிராயுதமாக்கி ஈகம் புரிந்தனர். பல கரும்புலிகள் பெயரே கூறப்படாமல் தமது வரலாற்றை எழுதி முடித்திருக்கின்றனர். இது துறவறத்தின் புதிய பரிமாணமாகும். இதுவரை காலமும் சகலதையும் துறந்தோர் துறவிகள் என வரையறை செய்யப்பட்டிருந்தனர். எல்லாத் துறவிகளுக்கும் ஏதோ ஒரு பெயர் இருந்தது. அவர்கள் மோட்சத்தில் தமக்கென ஓர் இடத்தை நாடியவர்கள் என்பதும் தெரிந்தது. ஆனால் கரும்புலிகள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. எங்கும் எதிலும் தமக்கொரு இடத்தை நாடியவர்கள் அல்ல. மற்றவர்களின் வாழ்வின் நலத்திற்காக உயிரையும் சேர்த்து பிரபஞ்சத்தில் கரைந்து போனார்கள். சங்ககாலத்தில் சில புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பெறுமதிமிக்க பாடல்கள் பலதைப் பாடியிருக்கிறார்கள். ஆனால் இவர்களின் பெயர் தெரியவில்லை. எனினும் இவர்தம் பாடல் வரிகளை அடிப்படையாகக் கொண்டு அணிலாடுமுன்றிலார், தேயபுரி பழங்கயிறனார் என்றெல்லாம் பெயர்கள் இடப்பட்டிருக்கிறது. ஆனால் எவ்வகையிலும் பெயர் சூட்டப்படாமலே போனவர்கள் பல கரும்புலிகள். உண்மையில் பிரபஞ்சம் என்பதே ஓர் அரிய சாதனைதான். அதிலுள்ள பொருட்கள் எதற்குமே பெயர்கள் கிடையாது. அனைத்துப் பெயர்களுமே மனிதன் தன் அறிவுக்குள்ளாக சூட்டிக் கொண்ட பெயர்களே. ஆனால் கரும்புலிகளின் ஈகத்திற்கும் பெயர் சூட்டி வரையறை செய்ய மனித அறிவிற்குள் ஓர் அளவீட்டை தேடமுடியாது இருப்பதே கரும்புலிகளின் மேன்மைக்கு எடுத்துக் காட்டாகும்.

மேலும் ஒவ்வொரு கரும்புலியும்



என்ன காரியத்தைச் செய்திருக்கிறார்கள். தமது மக்களை எவ்விதம் நேசித்திருக்கிறார்கள் என்பதை கிடைக்கக்கூடிய கரும்புலிகளின் வாழ்க்கைச் செய்திகளிலிருந்து ஓரளவு புரிந்து கொள்ள முடியும். பொதுவான புள்ளிகளாக தலைவர் மீது கொண்டுள்ள உயர்ந்த நேசம், பெற்றோரை நேசித்து கடைசிப் பொழுதுகளிலும் அவர்களைத் தேடிச் செல்வது, தான் வாழ்ந்த சூழலின் மீது தளராத நேசம் கொள்ளல், எதிர்காலச் சந்ததியினரை ஒரு படி மேலாக நேசித்தல், அவர்களுக்காகவே திரும்ப வராத தமது பயணம் நடைபெறுகிறது என்பதை மௌன மொழிகளால் எடுத்துரைப்பது, மிக ஆபத்தான, கடினமான காரியங்களையும் துச்சமென மதித்தல், மறுபுறமோ பிறர் துன்பங்களைக் கண்டு கசிந்து போகும் பாசத்தால் நெகிழ்ந்த குழந்தை உள்ளம். ஆகிய பொது நெறிகளை அவர்களிடம் அவதானிக்கமுடிகிறது. இத்தகைய பேயராற்றல்களையெல்லாம் சின்னஞ்சிறிய வயதிலேயே எப்படிப் பெற்றுக் கொண்டார்கள் என்பது எவருக்குமே அதிசயம் தரவல்ல கேள்விகள் ஆகும். இந்திய சுதந்திரப் போரில் பங்கெடுத்த 19– வயதுடைய குடிராம் போஸ் என்ற வங்க இளைஞன் 1908–ம் ஆண்டு ஆகஸ்ட் 11–ம் திகதி முஸாபர்பூர் சிறையில் வைத்து தூக்கிலிடப்பட்டான். இந்த வீரனை எரித்த சாம்பலை வங்கத் தாய்மார் தங்கம் அள்ளுவதைப் போல அள்ளி தங்கள் குழந்தைகளுக்கு ஊட்டிய பாலோடு கலந்து ஊட்டினார்கள் என்பதை போராட்டக் குறிப்புரைகளிலிருந்து காணமுடிகிறது. இந்த உன்னத சம்பவத்தோடு கரும்புலிகளின் சாதனைகளை ஒப்பிட்டால் அவர்கள் சாம்பலும் இல்லாதுபோன சரித்திர நாயகர்கள் என்ற உண்மை புலப்படும்.

தரையில் மில்லரால் ஆரம்பிக்கப்பட்ட கரும்புலிகள் நடவடிக்கை காந்தரூபன், விநோத், கொலின்ஸ் ஆகியோரோடு கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கிறது. இந்திய நிலப்பரப்பிற்கும் இலங்கைத் தீவிற்கும் இடையில் பிரிவுக் கோடு போட்ட பாக்கு நீரினை விடுதலைப் போராட்டத்தில் அன்றுமுதல் இன்றுவரை தாய்த்தளமாகவே பங்காற்றி வருகிறது. இந்திய ஒருமைப் பாட்டிற்குப் பங்கம் விளைவிக்காமலேயே ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்கான நிலப்பரப்பை கூறுபோட்டுக் கொடுத்த அதே பாக்கு நீரினைக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கரையோரத்தில் யாருமற்ற அநாதையாகக் கண்டெடுக்கப்படுகிறான் கோணஸ்வரன் என்ற இயற் பெயர் கொண்ட காந்தரூபன். இவன் பெரியவனாக வளர்ந்ததும் கடற்கரும்புலிகளின் தாக்குதலுக்காக வரலாறு அவனையே அனுப்பி வைத்திருந்தது என்று சொல்லக்கூடியளவிற்கு சம்பவங்கள் நடைபெற்றன. எந்த இடத்தில் வைத்து அநாதையாகக் கண்டெடுக்கப்பட்டானோ அந்த இடத்திலேயே எடுத்து வளர்த்த தந்தையிடமிருந்து விடைபெற்று முதலாவது கடற்கரும்புலியானான். அவனைத் தன்னுள் ஏற்றுப் பெருமையோடு அணைத்து அலையாக அடித்தது பாக்கு நீரினை. தன்னைப் போல் ஒரு சிறுவன் இந்த மண்ணில் அநாதையாக நிற்கக்கூடாதென்ற அவனுடைய தளராத விருப்பத்தால் உருவாக்கம் பெற்றதே காந்தரூபன் அறிவுச் சோலை ஆகும்.

இலங்கைத் தீவில் தாக்குதல் எந்த மூலையில் நடைபெற்றாலும் அதில் பிரதான பாத்திரம் வகித்திருப்பது பெண் புலிகளே என்று பேசப்படுவது இன்று வழமையாகி விட்டது. பெண் விடுதலை சம்பந்தமான போராட்டங்களை எப்போதும் புரட்சிக்குப் பின் எடுத்துச் செல்ல முடியாது. அவை புரட்சித் திட்டத்தோடு பிரிக்கப்பட முடியாத உறவு கொண்டவை என்னும் வாசகத்திற்கு அமைவாகவே விடுதலையின் சகல பரிமாணங்களிலும் பெண் புலிகள் அணியின் பங்களிப்பு இருந்து வருகிறது. இதற்கு கரும்புலிகள் அணியும் விதிவிலக்கல்ல. எதிர்ப்பைப் பற்றிப் பயம் இருந்தால் முன்னேற்றம் என்பது சாத்தியம் இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து விடுதலை வேள்வியில் இணைந்துள்ள தமிழீழப் பெண்கள் மகத்துவமானவர்கள். அவர்களிலிருந்து புறப்பட்டிருப்பது பெண்கள் கரும்புலிகள் அணி. நீரடியில் சென்று கடற்படைக் கப்பலையே தகர்த்து சாதனை புரிந்தது அங்கையற்கண்ணி என்ற பெண் கரும்புலியென்றால் இந்த நூற்றாண்டில் எவராலும் நம்பக்கூடிய விடயமல்ல; ஆனால் உண்மையின் வேகம் தமிழீழத்தில் அப்படியாகவே இருந்து வருகிறது. 'முன்னேற்றமென்பது ஆண்களிலிருந்து மட்டுமல்ல, அது ஆண்களிலிருந்தும், பெண்களிலிருந்தும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எமது தோழர்கள் ஆற்றியுள்ள கூட்டுப் பணியின் விளைவே' என நெல்சன் மண்டேலா குறிப்பிட்டதுபோல விடுதலைக்கான



*உயிராயுதத்தை பத்தாண்டு காலமாக தொடர்ந்து பாவிக்க வேண்டிய நெருக்கடிக்குள் ஒரு சிறிய தேசிய இனத்தை சிக்கவைத்துள்ள ஆக்கிரமிப்புப் போர் பற்றியும்; அது குறித்துப் பணியாற்ற தனக்குள்ள கடமை பற்றியும் எண்ணாது பத்தாண்டு காலமாக உலகம் மௌனித்துக் கிடப்பதும் கொடுமையான செயல் என்பதையும் யாரும் மறுக்கமுடியாது.*

பெண்களின் பணியை கரும்புலிகளான பெண்களும் கடுகளவும் தவறவிடவில்லையென்பது நினைந்து போற்றுதற்குரியதாகும்.

மத்தியகாலத்து ஸ்பானிய ஒரு நூற்றாண்டுகாலம் பொற்காலத்தைக் கொண்டாட உறுதுணையாக இருந்தது. 'ஆர்மடா' என்ற அவர்களது கடற்படையாகும். இப்படையணி மிகவும் பிரமாண்டமானது. கடலில் செல்லும் தரைப் படையணி என்றே வர்ணிக்கப்பட்டது. ஸ்பானியரின் நூற்றாண்டு கால வெற்றிக்கு ஆதாரமாக அமைந்திருந்தது. இத்தைக படையணியை சின்னஞ்சிறு கப்பல்களைக் கொண்ட குறும் படையணிகளால் தாக்கி மின்னல் வேகத்தில் மறையும் உத்தியைக் கடைப்பிடித்து, ஸ்பானியரின் பொற்காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் ஆங்கிலேயர்கள். இந்தப் போர்த் தந்திரம் ஆங்கிலேயருடைய மூளைக்குச் சொந்தமானதல்ல; ஆதிகால இராட்சத விலங்குகளான டைனஸோர்கள் சிறு சிறு விலங்குகளால் அழிக்கப்பட்ட போர் விதியிலிருந்து சேகரிக்கப்பட்டதாகும். வடமாராட்சித் தாக்குதலிலும் சூரியக் கதிரிலும் செயற்பட்டுள்ள சிறீலங்காப் படையணியின் மாதிரி வடிவம் 'ஆர்மடா' கடற்படை போன்று பிரமாண்டமானது. மையத்திலிருந்து வட்டமாகச் சுழலும் சக்தியற்றது. இன்னொரு பிரமாண்டத்துடன் மோதுவதற்கே பயன்படக்கூடியது. எனவேதான் பிரமாண்டமான படையணியினருடன் மோதுவதற்குரிய கரும்புலிகள் அணிகளாக விடுதலைப் புலிகள் கூர்ப் படைய நேர்ந்ததென்றும் கூறமுடியும். 1987–ம் ஆண்டு பெரும் படையணியை மில்லர் சந்தித்த முறையிலிருந்து இதை விளங்கிக் கொள்ளமுடிகிறது. எனினும் கரும்புலிகளின் நடவடிக்கை 10– ஆண்டுகளிலும் ஒரேமாதிரியாக இருந்திருக்கவில்லை. முதல் ஐந்தாண்டுகளில் ஒருவர் அல்லது இருவராக நடைபெற்றது. பின் சிறுசிறு படையணியாகவே மாற்றம் அடைந்தது இதற்கு உதாரணமாக பலாலிக் கூட்டுப் படைத் தளம் மீதான தாக்குதல், கொழும்புத் துறைமுகத் தாக்குதல் போன்றவற்றைக் கூறலாம். அதே வேளை விடுதலைப் புலிகள் படையணியில் முன்னணி அரணாக அவர்கள் செயற்படுவதும் தொடர்ந்தது. பாம்பு வடிவில் அமைந்த வெற்றி நிச்சயம் இராணுவ நடவடிக்கையை இரு இடங்களில் துண்டித்தபோது முன்னணிப் படையாக இருந்தவர்களும் கரும்புலிகளே.



கரும்புலிகளின் தசாப்தத்தை இவ்வாறு மதிப்பிடினும் உண்மையில் ஒவ்வொரு கரும்புலியின் இழப்பின் போதும் வாழவேண்டிய ஆன்மபலம் மிக்க மாமனிதர்களின் இழப்பும் கூடவே நடந்துவருகிறது. கரும்புலிகளைத் தவிர்த்து தாக்குதல்களை நடத்துவதற்கு வேண்டிய பெரும் நிதிவளத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டிருக்கவில்லை, எனவேதான் மாற்று வழியற்ற நிலையில் கரும்புலிகள் தாக்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தல்கள் நடாத்தப்பட்டுவதாகவும் எண்ண முடியும். மறுபக்கமாக உயிராயுதத்தை பத்தாண்டு காலமாக தொடர்ந்து பாவிக்க வேண்டிய நெருக்கடிக்குள் ஒரு சிறிய தேசிய இனத்தை சிக்கவைத் துள்ள ஆக்கிரமிப்புப் போர் பற்றியும்; அது குறித்துப் பணியாற்ற தனக்குள்ள கடமை பற்றியும் எண்ணாது பத்தாண்டு காலமாக உலகம் மௌனித்துக் கிடப் பதும் கொடுமையான செயல் என்ப தையும் யாரும் மறுக்கமுடியாது. எனி னும் வணக்கத்திற்குரிய அந்த மாமனி தர்கள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்க ளுக்கு மட்டுமல்ல முழு உலகத்திற் குமே உரிய பொதுவான செய்திகளை மௌனமொழியில் உரைத்துச் சென் றுள்ளனர். அந்த மொழி உலகத்திற்கு



சில தேவைகளை உணர்த்துவதாயுள்ளது. உலகம் முழுவதும் உயிரோடு போராடி, தமது உரிமைக்காக குரல் கொடுக்கும் சிறு சிறு தேசிய இனங்களின் உரிமை கள் பற்றி இனியாவது பொறுப்புடன் சிந்திக்கப்பட வேண்டும். தேசிய இனங் கள் தொடர்பாக உலகம் எழுதிவைத் திருக்கும் மரபுகளை மாற்றி புதிதாகச் சிந்திக்க வேண்டும். ஏற்கனவே உள்ள நாடுகள் தொடர்பான கட்டமைவுகள் பெரும் குறைபாடுடையவை அவற் றைச் சீர்படுத்தவேண்டும். மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்தது போல, மின்சாரத்தைக் கண்டுபிடித்ததுபோல, காசநோய்க்கு மருந்து கண்டுபிடித்தது போல தற்போது இறுக்கமடைந்திருக் கும் இனப் போர்களின் நெருக்கடிக ளுக்கும் புதிய புள்ளியொன்றில் தீர்வு தேடவேண்டியிருக்கிறது. இந்தக் கட மையை காலம் தாழ்த்துவது இனியும் உலகில் ஏற்புடைய காரியமல்ல. கரும் புலிகள் தசாப்தத்தில் தமிழர்கள் மட்டு மல்ல முழு உலகமும் சிந்திக்கவேண் டிய அரிய பாடம் இதுவாகும்.

# போற்றுதலுக்கு உரியோர்

ஜூலை 5 கரும்புலிகள் நாள். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு பூகம்பத்தை நிகழ்த்திய நாள். 1987- இல் இன்றைய தினத்தில் தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கரும்புலித் தாக்குதல் எனும் ஒரு புதிய போர் வடிவம் அறிமுகம் செய்யப்பட்டது. அன்று தான் 'ஒப்பரேசன் லிபரேசன்' மூலம் வடமராட்சியை ஆக்கிரமித்த சிறீலங்கா இராணுவத்தினர் அமைந்திருந்த நெல்லியடி இராணுவ முகாமை கப்டன் மில்லர் தற்கொலைப் படையாளியாகச் சென்று தகர்த்தெறிந்தான். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புலித் தாக்குதல் எனும் போர் வடிவமானது ஒரு வரப்பிரசாதமாக இன்று மாறியுள்ளது. தரையிலும் கடலிலும் சிறீலங்கா ஆயுதப்படையையும் அரசையும் கதி கலங்கச் செய்யும் ஒரு ஆயுதமாக அது தோன்றியுள்ளது. இதன் வடிவமானது புதிய பரிணாமத்துடன் வலுமிக்கதாக உருவாகியுள்ளமையானது தமிழீழ விடுதலைப் போராட்டம் சில மைல்கள் எண்ண வைப்பதாகவும் இருந்தது. சிறீ லங்கா அரசுடனான இராணுவ அரசியல் சமத்துவம் செய்யவும் பயன்பட்டது. ஒட்டுமொத்தமாகவே விடுதலைப் புலிகள் அர்ப்பணிப்புமிக்க போராளிகள் தான். இதனை சர்வதேச உலகமும் நன்கு அறியும். புலிகளின் அர்ப்பணிப்பு, இலட்சியப் பற்று, உறுதி என்பவை குறித்து எதிர்த்தரப்பினரே பலதடவை வியந்துள்ளனர். இந்த நிலையிலும் கரும்புலிகள் இவர்களில் இருந்து வேறு பட்டவர்களாகவே இருந்தனர். ஏனெனில் இவர்களின் வீரமானது ஏனைய போராளிகளில் இருந்தும் வேறுபட்டதாக உள்ளது. கரும்புலிகளின் செயல்க ளைச் சாதாரண மனிதர்கள் செய்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஏனெ னில் தனிமனித அபிலாசைகள் இதற்கு இடமளிக்கமாட்டாது. அத்தோடு இதற்கு தனியாக வாழ்க்கை அபிலாசைகளை மட்டும் துறந்தால் போதாது. மரணத்தை மிஞ்சியதான ஆன்மீக பலமும், மனோதிடமும் தேவையாகும். அத்துடன் மிக நுட்பமான போரில் அறிவும் மிக முக்கியமானதாகும். இது மரணத்தை விட்டு தனது குறிக்கோளை அடைய முனையும் ஒரு செயல் வீரனின் வரலாறு ஆகும். அதாவது இந்தப் போராளி மரணத்தின் நேரத்தையும், இடத்தையும் ஏற்கனவே அறிந்து கொள்கிறான். ஆனால் அதனைப் பொருட்படுத்தாது தனது இலக்கி னைச் சென்றடைவதையே குறியாகக் கொள்கிறான். இது மரணத்தை மிஞ்சும் செயல் என்பதில் எதுவித ஐயத்துக்கும் இடமில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கரும்புலிகள் புரிந்த சாதனைகள் மகத்தானவை. இவை சிறீலங்கா இராணுவ இயக்கத்தைப் பலதடவைகள் ஸ்தம்பிக்கச் செய்துள் என. இவை சிறீலங்கா அரசியல் வரலாற்றை சிதைவுக்குள்ளாக்கியது. இதனால் சிறீலங்கா இராணுவ அரசியல் பெரும் மாற்றத்திற்குள்ளாகியுள்ளது. அதேவேளை சிறீலங்கா வெளியுறவுக் கொள்கையைக் கூட மாற்றியமைத்துள் ளது. இவ்வாறான மாற்றங்களுக்குக் காரணமாக விளங்கியுள்ள இந்தக் கரும்புலிகளின் அர்ப்பணிப்புகள் எதிரிகள் எவராலும் புரிந்து கொள்ள முடியா தவை. அது முன்னுதாரணத்துடன் தமிழீழ மண்ணுக்கேயுரிய சிறப்பான தனித் துவமாகும். ஆகையினால் இது இம்மண்ணில் உள்ளவர்களுக்கே விளங்கிக் கொள்ளக் கூடியதொன்றாகும். ஆனால் இந்தக் கரும்புலிகள் வேறு எந்தக் குறிக்கோளும் இன்றி தமது மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் தமது தாக்குதலை நடத்திச் செல்லும் உன்னத புருஷர்கள் என்பதை மட்டும் உலகம் புரிந்து கொள்ளவேண்டும். தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்டது போல கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக்கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் ஆயுத பலத்தை மனோபலத்தால் உடைத்தெறிபவர்கள். இந்த வகையிலேயே இந்த மாவீரர்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உறுதியாக் கியவர்கள். இவ்வாறாக மரணத்தை வென்ற மாவீரர்கள் தமிழ் மக்களின் வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள். இவர்களின் அர்ப்பணிப்பும் தியாகங்களும் மக்களின் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளப்பட வேண்டி யவை. அப்பொழுது தான் அவர்களின் அர்ப்பணிப்பு அர்த்தம் பெறும். இலட் சியம் ஈடேறும். தமிழீழம் மலரும் வாய்ப்பு உருவாகும். தமிழரின் சுதந்திரம் உறுதியாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்மான்-
# இலட்சிய நாயகன்

செல்வக்கிளி
அம்மான்
சந்திரன்



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த லெப்டினண்ட் செல்வநாயகத்துக்கு இயக்கம் சூட்டிய பெயர்கள் இவை. கல்வியங்காடு என்ற இடத்தில் ஏழை விவசாயக் குடும்பத்திலே பிறந்து ஆரம்பக் கல்வியைக் கூடத் தொடர முடியாத நிலையில் கல்வியைக் கைவிட்ட செல்லக்கிளி, ஆரம்பத்தில் அண்ணா கோப்பி விற்பனை வானில் சாரதியாக வேலை பார்த்தான். செல்லக்கிளி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு அறிமுகமான காலத்தில் இருந்தே இயக்க நடவடிக்கைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவன். எந்த வாகனத்தையும் மிகத் திறமையாக ஓட்டும் பயிற்சியைப் பெற்றிருந்த செல்லக்கிளி, ஆயுதங்களாகட்டும், மோட்டார் இயந்திரங்களாகட்டும் பழுதடைந்தால் தானே திருத்தி இயக்கக் கூடிய மிகச் சிறந்த தொழில் நுட்ப அறிவையும் பெற்றிருந்தான். காட்டுப் பாதைகளை அறிவதில் அதிசயிக்கத்தக்க ஆற்றலைக் கொண்டிருந்த செல்லக்கிளி தனது வாழ்க்கையை தான் வாழ்ந்த சூழ்நிலையை ஒரு கெரில்லாப் பயிற்சிக்களமாக ஆக்கிக்கொண்டிருந்தான். ஒரு தடவை உடையார்கட்டுக் குடியேற்றத் திட்டத்தில் காட்டுமரங்களை வெட்டி விவசாயத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் எதிர்பாராமல் வந்த இரண்டு பெரிய கரடிகளில் ஒன்றைக் கோடரியால் வெட்டிக் கொன்றான். மற்றக்கரடி, கூட இருந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது.

ஓய்வு நேரங்களில் காட்டுப்பகுதிகளில் கட்டுத் துவக்குக் கட்டி மிருகங்களை வேட்டையாடுவது அவனது பொழுது போக்காகும். ஆரம்ப காலங்களில் காடுகளில் இயக்கத்திற்கான முகாம்களைஅமைக்கும் வேலை நடைபெறும் போதெல்லாம் முகாம்களுக்குத் தேவையான அமைப்புக்களைக் கொண்ட மரங்களைத் தேடிக்கண்டு பிடித்து வெட்டுவது, கொட்டில் போடுவது, கூரை வேய்வது போன்ற செயல்கள் அவன் தலைமையில் அவன் மேற்பார்வையில் தான் நடைபெறுவது வழக்கம்.

சிறுவயதில் இருந்தே தனது பெரிய தாயாரின் வீட்டில் வாழ்ந்து வந்தவன் செல்லக்கிளி. அவனது பெரிய தாயாரின் மகன் செட்டி என்ற தனபாலசிங்கம் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் போராளியாக இருந்த போதிலும் பின் முழுமையான சுயநலவாதியாகவே மாறினான். அவனது துரோகத்தைக் கண்டு கொதித்த செல்லக்கிளி அவனை அண்ணன் என்றும் பாராது, “அரசியலைத் துற அல்லது என் கையாலேயே நீ சாவாய்'' என்று எச்சரித்தான். ஆனால் அவன் திருந்தவில்லை. செட்டியின் செயல் எல்லை மீறவே இயக்த்தின் தலைவர் பிரபாகரனால் செட்டி சுடப்படுகிறான். செட்டி சுடப்பட்டதற்குப் பின்பும் இயக்கத்திற்கும் பிரபாகரனுக்கும் விசுவாசமாக முழுமையாக தன் உயிரையே தருகிற அளவிற்குச் செயலாற்றினான் செல்லக்கிளி. “செட்டியின் குடும்பத்தைக் காப்பாற்றுவது எனது கடமை தான். அதைவிட இயக்கத்திற்கு நான் ஆற்ற வேண்டிய கடமை பெரிது'' இது செல்லக்கிளி உறுதியாக உதிர்த்த வார்த்தைகள்.

இயக்கத்தையும் அவனையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு அவனது பணி இயக்கத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் இருந்தே இயக்கம் நடத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் பங்கு பற்றியவன் செல்லக்கிளி. முதல் முதலில் இயக்கம் உளவுப்

**இயக்த்தையும் அவனையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு அவனது பணி இயக்கத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இயக்கத்தின் ஆரம்பகாலத்தில் இருந்தே இயக்கம் நடத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் பங்கு பற்றியவன் செல்லக்கிளி.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படை போலீஸ் அதிகாரியான கருணா நிதியை அழித்த நிகழ்ச்சி, போலீஸ் உளவுப்படை தலைமையகத்தைச் சேர்ந்த பஸ்தியாம்பிள்ளை குழுவினர் மீதான தாக்குதல், உமையாள்புரம் இராணுவத்தின் மீதான தாக்குதல், பருத்தித்துறை போலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீதான தாக்குதல், கந்தர்மடம் வாக்குச் சாவடியில் நடந்த இராணுவத்தினர் மீதான தாக்குதல் என்று இயக்கம் நடத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் ஈடுபட்டுத் தன் தனி முத்திரையைப் பதித்தான் செல்லக்கிளி.

பருத்தித்துறைப் போலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜயவர்த்தனாவைச் சுட்டுவிட்டு அவனிடமிருந்து எடுத்த ஜீப் வண்டியை குன்றும் குழியுமாயிருந்த வீதிகளினூடாக 15 — மைல் தூரத்தை 9 நிமிடத்தில் ஓட்டிச் சென்று அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இயக்க வீரர்களை இராணுவ முற்றுகைக்குட்படாது வெளிக் கொண்டு வந்த செயல் செல்லக்கிளியின் சாரதியத் திறமைக்கு எடுத்துக்காட்டாகும். அவன் தலைமையேற்றுச் சிறப்புற நடத்திய இன்னுமொரு தாக்குதல் இரகசியப் போலீஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவின் மீதான தாக்குதலாகும்.

7.4.78 அன்று அதிகாலை 5.30 மணியளவில் முருங்கன் மடு வீதியின் உட்புறமுள்ள காட்டுக்குள் அமைந்திருந்த மரமுந்திரிகைத் தோட்டத்துக்குள் இருந்த விடுதலைப் புலிகளின் இருப்பிடத்தை முற்றுகையிட்ட உளவுப் படை போலீஸ் அதிகாரி பஸ்தியாம் பிள்ளை குழுவினர் நிராயுதபாணிகளாக இருந்த விடுதலைப் புலி இளைஞர்களைச் சுற்றி வளைத்தனர். இயந்திரத் துப்பாக்கி, கைத்துப்பாக்கிகள் சகிதம் வந்திருந்த போலீசாரிடம் பேச்சுக் கொடுத்து தன் புத்தி சாதுரியத்தால் அவர்களின் கவனத்தை திசை திருப்புகிறான் செல்லக்கிளி. போலீஸார் சற்று ஏமாந்திருந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் அனைவரும் ஒன்றாகப் பாய்கிறார்கள் போலீஸாரின் மேல். அடுத்த கணம் போலீசாரிடமிருந்த சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் கைகளுக்கு மாறுகின்றன. முதன்முதலாக அன்று தான் கையிலெடுத்த எஸ்.எம்.ஜி. செல்லக்கிளியின் கைகளில் வேகமாக இயங்குகிறது. சில நிமிடங்கள் வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. புலிகளை வேட்டையாடவென வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை, சப் இன்ஸ்பெக்டர் பேரம்பலம், சார்ஜன்ட் பாலசிங்கம், கான்ஸ்டபிள் சிறிவர்த்தனா என ஒவ்வொருவராகச் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இறுதியாக போலீஸார் கொண்டு வந்த ஆயுதங்களாலேயே அவர்கள் சுடப்பட்டதுடன் அவர்கள் வந்த காரையே எடுத்துக் கொண்டு விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றனர். மூன்று நாட்களின் பின்னர்தான் பஸ்தியாம் பிள்ளை கோஷ்டியினரின் முடிவு பற்றிய செய்தி வெளியே தெரிய வந்தது. செல்லக்கிளி தலைமையிலான இந்தத் தாக்குதல் நிகழ்ச்சியானது தமிழ்ப் போராளிகள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆபத்து வரும் வேளைகளில் நிதானமாகச் சிந்தித்து வேகமாகச் செயற்படும் தன்மை செல்லக்கிளிக்கு கூடவே பிறந்ததாகும். முன்பொரு தடவை செல்லக்கிளி இருந்த கிராமமான உடையார்கட்டுக்கு செல்லக்கிளியைத் தேடி சப் இன்ஸ்பெக்டர் தாமோதரம் பிள்ளை சென்ற போது செல்லக்கிளியின் வீட்டிற்கு அண்மையில் செல்லக்கிளியிடம செல்லக்கிளியைப் பற்றி விசாரித்தான். செல்லக்கிளியோ நிலைமையை உணர்ந்து சற்றும் தடுமாறாது “வாங்கோ ஐயா செல்லக்கிளியின் வீடு பக்கத்திலேதான் இருக்குது கூட்டிக் கொண்டு போய்க் காட்டுறன்” என்று தன் வீட்டுக்கே சப் இன்ஸ்பெக்டரை அழைத்துச் சென்று காட்டிவிட்டு வேகமாக மறைந்துவிட்டான். அதன் பின்புதான் சப் இன்ஸ்பெக்டர் செல்லக்கிளி தன்னை ஏமாற்றி விட்டு தப்பிச் சென்றதைத் தெரிந்து ஆத்திரப்பட்டான்.

தனக்குச் சரி எனப்பட்டதை உதாரணங்கள், பழமொழிகளோடு விளக்கி வாதிடுவது செல்லக்கிளிக்கு கைவந்த கலை. சட்டம் படித்துவிட்டு தமிழினத்தையே ஏமாற்றிக் கொண்டிருந்த கூட்டணி எம்பிக்கள் மத்தியில் நின்று பள்ளிப் படிப்பையே முடிக்காத செல்லக்கிளி “ஆறு ஆண்டுகளாக நாம் காடு மேடு என்று அலைகிறோம். நீங்கள் முப்பது ஆண்டுகளாக என்ன செய்தீர்கள்?” என்று அவர்களின் பொது மேடையிலேயே ஏறி வினா எழுப்பினான். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க என தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் கூட்டம் கூட்டப்பட்ட இடத்திற்குச் சென்று தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி வாதிட்டான் செல்லக்கிளி. சுயநலமிகள் அவன் வார்த்தையை ஏற்கவில்லை. ஆனால் தமிழீழ மக்கள் செல்லக்கிளியின் கருத்தை உள்ளூராட்சித் தேர்தலை முற்று முழுதாகப் பகிஷ்கரித்ததன் மூலம் முழுதாக ஏற்றுக் கொண்டனர்.

1983–ம் ஆண்டு ஜூன் மாதம் 23–ம் நாள் வடமாகாணத்தின் மிகப் பெரிய இராணுவ முகாமான பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்குச் செல்லும் வீதியில் திருநெல்வேலி என்ற இடத்தில் ரோந்து வந்து கொண்டிருந்த இராணுவ வண்டிகள் இரண்டின் மீது செல்லக்கிளி தலைமையிலான பதின்நான்கு விடுதலைப் புலிகள் கொண்ட கெரில்லா அணுகி தனது தாக்குதலை ஆரம்பிக்கின்றது. வேகமாக வந்த ஜீப் வண்டி, விடுதலைப் புலிகள் வைத்த கண்ணி வெடி சரியான நேரத்தில் வெடித்ததால் மேலே தூக்கி எறியப்பட்டு கீழே வந்து விழுகிறது. அதில் வந்த சிங்கள





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவத்தினர் கீழே குதித்து தாம் வைத்திருந்த துப்பாக்கிகளைத் தூக்கிய படி ஓட முயல்கின்றனர். பின்னால் வந்த இராணுவ ட்ரக் வண்டியிலிருந்த இராணுவத்தினர் பீதியினால் ட்ரக் வண்டிக்குள்ளேயே பதுங்குகின்றனர். விடுதலைப் புலிகளின் துப்பாக்கித் தோட்டாக்களும் வெடிகுண்டுகளும் ட்ரக்கை விட்டு எழமுயன்ற இராணு வத்தினரின் உடல்களைச் சல்லடை யாக்குகின்றன. தமிழீழத்தில் முதல் தட வையாக அதிக அளவு சிங்கள இரா ணுவத்தினர் கொல்லப்படுகின்றனர். இதைக் கண்டு உற்சாக மிகுதியினால் வெற்றிக் களிப்புடன் மறைவிடத்திலி ருந்து தான் வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கியை இராணுவ வண்டியை நோக்கி இயக்கியபடியே எழுந்து நின்று சுடத் தொடங்குகிறான் செல்லக்கிளி. அதேநேரம் ஜீப் வண்டிக்குள் இருந்த சிங்களச் சிப்பாய் ஒருவன் சுட குண்டு நேராகச் செல்லக்கிளியின் இதயத்தை ஊடுருவிச் செல்கிறது. சப்தமெதுவுமின் றிக் கீழே விழுகிறான் செல்லக்கிளி.

13 இராணுவத்தினரை வீழ்த்தி ஏராளமான ஆயுதங்களை எடுத்த உற்சாகத்தில் திளைத்த விடுதலைப் புலிகள் செல்லக்கிளியின் மறைவுச் செய்தியை அறிந்ததும் அதிர்ச்சிய டைந்து சோகத்தில் ஆழ்கின்றனர். முதல் வாரத்தில் இரண்டு முன்னோடி வீரர்களை இழந்த விடுதலைப்புலிகள் களத்தில் செல்லக்கிளியையும் இழந்த தால் வெற்றிக்கான எக்களிப்பு சிறிது மின்றி சோகமே உருவாகத் தம் இருப் பிடம் திரும்புகின்றனர். இயக்கம் வளர்ந்து வரும் நிலையில் இயக்க முன்னோடி வீரர்களுக்கு பொறுப்புக்க ளைக் கொடுத்து அவர்களுக்கு அனுப வப் பயிற்சியைக் கொடுக்கும் வகை யில் அந்தத் தாக்குதலுக்கான தலை மையைச் செல்லக்கிளியிடம் ஒப்ப டைத்துவிட்டு தானும் ஒரு வீரனாகத் தாக்குதலில் கலந்து கொண்ட இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு செல்லக்கிளி யின் மறைவு பேரதிர்ச்சியைக் கொடுக் கின்றது. எதிர்காலத்தில் செல்லக்கிளி யிடம் ஒப்படைக்கக்கூடிய பொறுப்புக் களைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டி ருந்த பிரபாகரனுக்கு செல்லக்கிளியின் மரணம் இயக்கத்தில் ஒரு பெரிய தேக்கமாகப்படுகிறது. ஆம்! இயக்கத் துக்கு அவன் ஆற்றிய பணிகளைப் பற்றியும் அவனின் ஆற்றலைப் பற்றி யும் பிரபாகரனைவிட வேறு யாருக்கும் முழுமையாகத் தெரிந்திருக்க நியாய மில்லை.

இயக்கம் தொடங்கிய காலத்தில் சுழல் துப்பாக்கி ரவைகளை ஈயத்தை உருக்கித் தயார் செய்த காலத்தில் கூட இருந்து உதவியதுடன் பின்னர் இயக்க வீரர்களுக்கு தானியங்கித் துப்பாக்கி களை வைத்துப் பயிற்சி கொடுக்க வெளியில் இரவு பகலாக அலைந்து குறைந்த விலையில் ஏராளமான ஒரி ஜினல் துப்பாக்கி ரவைகளை வாங்கி வந்து சேர்த்தது, இவையெல்லாம் செல்லக்கிளி இயக்கத்துக்குச் செய்த மறக்கமுடியாத சேவைகளாகும். அன்று செல்லக்கிளி வாங்கி வந்து குவித்த துப்பாக்கி ரவைகளை வைத்தே இயக் கத்தின் முன்னணி வீரர்கள் எல்லாம் சுட்டுப் பயிற்சி எடுக்க முடிந்தது. ஏன் இயக்கத்துக்கென வாங்கப்பட்ட முதல் துப்பாக்கிகூட செல்லக்கிளிக்குச் சொந்தமான இரண்டு மாடுகளை விற் றுக்கிடைத்த பணத்தில் வாங்கப்பட் டதுதான்.

படித்தவர்கள் குழம்பிய காலத்தி லும் தான் குழம்பாது இருந்துவந்த செல்லக்கிளியின் கிராம வாசனை தொனித்த வயதுக்கு மீறிய வாதங்க ளையும், வார்த்தைப் பிரயோகங்களை யும் கேட்ட இயக்க வீரர்கள் அவனை "அம்மான்" என்று அன்புடன் அழைத்து வந்தார்கள். அவனது திறமையான மதிநுட்பமான செயலாற்றல்கள் பல விடுதலைக்குப் பின் சரித்திரத்தில் மட்டுமே வெளிவர வேண்டிய செய்தி கள். அவனது இறுதிக்காலமானது தமிழீழ விடுதலைப் போராட்ட வர லாற்றில் ஓர் திருப்புமுனை ஆம்! சரித் திரம் படைத்த செல்லக்கிளி சரித்திர மாகிய நாள், தமிழீழ விடுதலைக்கான அகிம்சைப் போராட்டமானது ஆணி வேரோடு பிடுங்கி எறியப்பட்டு ஆயு தப் போராட்ட சகாப்தம் உருவான நாள்.

★★★

## சொந்த நாடு இல்லாததாலேயே காடுகாடாய் அலைகின்றோம்!

### போராட்டத்தில் இணைந்த இளைஞன்

"சூரியக் கதிர்' நடவடிக்கைக்கு முன்னரே இடம்பெயர்ந்த அனுபவம் எமக்குண்டு. 'யாழ்தேவி' நடவடிக்கையின் போதே நாம் இடம் பெயர்ந்துள்ளோம். 'சூரியக்கதிர் 2' நடவடிக்கையின் போது கச்சாய்க்கு இராணுவம் முன்னேறியதும் நாம் கூரை விரிப்புடன் வன்னிக்குப் பயணமானோம். இன்றும் கூரை விரிப்பின் கீழேயே வாழ்ந்து வருகின்றோம். 'யாழ்தேவி' நடவடிக்கையின் போதும் 'சூரியக்கதிர்' நடவடிக்கையின் போதும் ஓடுவதும் ஒதுங்குவதுமான நிலைதான். எமக்கென்று சொந்த நாடொன்று இல்லாதபடியால் தான் நாம் கூரை விரிப்புடன் கடலிலும், காடுகளிலும் உயிரைக் காக்க பிரயாணம் செய்கிறோம். இந்த நிலையை மாற்ற வேண்டும். இதற்காகவே நான் போராட்டத்தில் இணைந்து கொண்டேன்." இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டுள்ள கிளாலியைச் சேர்ந்த வடிவேலு லோகேஸ்வரன் (வயது–16) என்னும் இளைஞர். இவர் தொடர்ந்து கூறுகையில், எமது அப்பா நோயினால் மரணமாகி விட்டார், சந்திரநாயகி என்ற பெயரில் போராளியாக இருந்த எனது அக்கா சிவமலர் 1991–ம் ஆண்டு நடைபெற்ற ஆகாய கடல் வெளி சமரில் வீரச்சாவெய்திவிட்டார். திருமணமான எனது அண்ணா நடாத்தும் சிறு வியாபாரத்துக்கு எனது மற்றொரு அண்ணா உதவி புரிகிறார். இவருக்கு கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே எமது குடும்பத்தினர் காலத்தைக் கழிக்கின்றனர். எமது சொந்த இடத்திலேயே இருந்திருந்தால் ஏதோ எமது குடும்பம் இவ்வாறு கஷ்டநிலையை எதிர்நோக்க வேண்டியிருந்திருக்காது. எமது தொழில்கள், உடமைகள் அனைத்தையும் கைவிட்டதுடன் தறப்பாளுடன் திரிய வேண்டிய நிலையையும் சிறீலங்கா அரசு எமக்கு உருவாக்கிவிட்டது. எமது சொந்த இடத்தில் நாம் சுதந்திரமாக வாழவும், தொழில் செய்யவும் போராட வேண்டியது அவசியமாகும். எனவேதான் நான் போராட்டத்தில் இணைந்து கொண்டேன் எனத் தெரிவித்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாட்டுரிமைக்கான தமிழர்களின் போர்

வரலாற்றுக்கு முற்பட்ட காலந் தொட்டு இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் வாழ்வுரிமையை சுதந்திரம் அடைந்த சிறீலங்காவின் சிங்களத் தேசிய இனம் நிராகரித்துவிட்டது. *1956* உத்தியோகமொழிச் சட்டம் பிரிவு *33*–ன் கீழ் சிங்களம், அரச மொழியாக்கப்பட்டு தமிழர்களின் வேலை வாய்ப்பு உரிமை மட்டம் தட்டப்பட்டது. சிறீலங்கா அறிமுகப் படுத்திய தரப்படுத்தல் சிங்களத் தேசத்திற்கு அதீத அதிகாரங்களை வழங்கி தமிழர்களின் உயர் கல்வி வாய்ப்பை தட்டிப் பறித்தது. *1972*–ம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் பௌத்த மதத்தை விஷேட தரத்திற்கு உயர்த்தியது. மேலும் சோல்பரி அரசமைப்புச் சட்டத்தினால் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட பிரிவு *29*–ன் கீழான பாதுகாப்பு நீக்கப்படடது.

*1978* அரசமைப்புச் சட்டம் சிங்கள பௌத்த மேலாண்மையை பாதுகாத்த அதே வேளை தமிழர்களின் நிலைக்கு எதுவித முன்னேற்றத்தையும் கொடுக்கவில்லை. அதனது ஆறாவது சட்டத்திருத்தம் தமிழர்களுடைய வெளிப்பாட்டு உரிமைக்கு தடைவிதித்தது. *1979*–ம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட பயங்கரவாதச் சட்டம் பிரிவு–*48* தமிழர்களுக்கான பாரபட்சமற்ற நீதி பெறுவதற்கான உரிமையை (Due Process) நிராகரித்தது. இதன் மூலம் சட்ட விரோத படுகொலைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. *1983*–முதல் சிறீலங்கா ஐ.நா மனித உரிமைக் கமிஷன் மற்றும் உப கமிஷனின் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும் 'குழப்படிகார' நாடாகக் கருதப் படுகின்றது. அரச சார்பற்ற நிறுவனங்கள் சிறீலங்காவானது திட்டமிடப்பட்ட பெருமளவிலான மனித உரிமை மீறல் குற்றங்களைப் புரிந்துள்ளதாக இனம் கண்டுள்ளது. தமிழ் மக்களுடைய பாரம்பரிய தாயகம் சிங்களக் குடியேற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு தமிழர்களது பாதுகாப்பிற்கும் ஜனநாயக ரீதியான தேர்வு முறைக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இவை அனைத்திலும் மேலாக *1956*–இல் இருந்து தமிழர்கள் திட்டமிடப்பட்ட தொடர்ச்சியான இன அழிப்புக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

சிறீலங்காவின் வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் பொதுவான மொழி ஒன்றின் மூலம் ஒன்றுபட்டு சுதந்திரத்தை நோக்கிய ஆதரவை வெளிக் காட்டிய போது அவர்கள் ஒரு மக்கள் சமூகம் என உருவாகியதுடன் அவர்கள் தமது இறையாண்மைக்கு உரித்துடையாவர்களாகின்றார்கள். *1977*– பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமது பிரிக்கமுடியாத உரிமையான தேசிய



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுய நிர்ணய உரிமைக்கான தமது விருப்பத்தை ஒரு சுதந்திரமான தனி நாட்டைப் பெறுவதற்கு அங்கீகாரத்தை வழங்கியதன் மூலம் வெளிக்காட்டியுள்ளனர். அன்றிலிருந்து தமது நாளாந்த நடவடிக்கையின் மூலம் அதாவது தமிழர்களுடைய தேசிய சுயநிர்ணய உரிமைக்காக போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரிப்பதன் மூலம் நாட்டு உரிமைக்கான தமது விருப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். ஒரு சாத்வீகப் போராட்டம் அரச பயங்கரவாதம் காரணமாக கெரில்லாப் போராட்டமாக மக்கள் ஆதரவுடன் முன்னேற்றம் அடைந்து இன்று தமிழ் மக்கள் ஒரு மரபு ரீதியான போரை விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் நடாத்துகின்றனர்.



தமிழர்களின் நாட்டு உரிமைக்கான போராட்டமானது சோவியத் யூனியன் மற்றும் யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மாற்றங்களுக்கான சமாந்தரத்தைக் கொண்டுள்ளது. இது ஸ்லோவேனியா *(Slovenia)* மற்றும் குரூட்டியன் *(Croatia)* போன்ற நாடுகளில் மத்திய அரசின் அடக்குமுறைக்கும் புறக்கணிப்புக்கும் எதிரான சுதந்திரப் போரை ஒத்தது. யூகோஸ்லாவியாவின் இவாணுவமானது செருபியன் இன மக்களையே பிரதிபலிப்பது போல் சிறீலங்கா இராணுவமானது சிங்கள அதிகாரிகளையும், துருப்பினரையும் கொண்டதாகும். செருபியா அல்பீனியர்களை (கொசோவாப் பகுதியைச் சேர்ந்தவர்கள்) தமது ஆளுமைக்கு உட்படுமாறு சத்தியப்பிரமாணம் எடுக்க பலவந்தப்படுத்தியதைப் போல் தமிழர்களை சிங்கள அரசானது தமது ஆறாவது சட்டதிட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்துகிறது. சிறீலங்கா மத்திய அரசு தமிழர்களின் தாயகத்தில் சிங்களவர்களைக் குடியேற்றி அதன் மூலமான பிரதேச விரிவாக்கத்தை நடாத்துவதானது குரூட்டியாவில் இடம்பெறும் சம்பவங்களை ஒத்ததாகும். சோவியத் யூனியனில் தென் ஒசான்ரியன் மக்களின் விருப்பு வெறுப்புக்களை திரிவுபடுத்தும் செயலைப்போல் சிறீலங்கா அரசானது தமிழர்களின் நாட்டுரிமைக்கான போராட்டத்தை பவீனப்படுத்துவதற்கு தமிழ் முஸ்லீம் உறவைப் பிரிவுபடுத்துகிறது.

இதைப்போல் ஏராளமான ஒருமைப்பாடுகள் அண்மைக்கால சரித்திர நிகழ்வுகளுடன் தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு உள்ளதுபோல பல வேறுபாடுகளும் காணப்படுகின்றன. சிறீலங்காவில் இடம்பெறும் மனித பாதிப்புக்கள் ஒப்பீட்டளவில் பிறதேசங்ளில் பாதிப்புகளிலும் பார்க்க அதிகமானதாகும். சொலவெனியாவும், குருட்டியாவும் யூகோஸ்லாவிய ஆளுமையின் கீழ் குறிப்பிடத்தக்க சுய ஆட்சியை அனுபவித்த போதிலும் தமிழர்கள் அவ்வாறான அனுபவத்தைப் பெறவே இல்லை. ஆறுமாத கால பிரச்சினையின் உச்சத்திலேயே யூகோஸ்லாவியா மீது இராணுவ வழங்களுக்கான தடை உத்தரவு சர்வதேச சமூகத்தால் பிறப்பிக்கப்பட்டது. மேலும் ஐ. நா சமாதானப்படை அங்கு அனுப்பப்பட்டு அரசியல் தீர்வு காணப்பட்டு சொலவெனியாவிற்கும், குருட்யாரிற்கும் இராஜதந்திர அங்கீகாரம் வழங்கப்பட்டுது. ஆனால் 15 வருட கால சிறீலங்காப் பிரச்சினைகளின் போதும் பாரியளவிலான சர்வதேச உதவிகள் சிறீலங்கா அரசின் கைகளுக்கு வழங்கப்பட்டு தமிழர்களின் சுதந்திரத்திற்கான குரல் கேட்கப்படாமல் போய் விட்டது.

பல்வேறு இன மக்களை திருப்திப்படுத்த முடியாத திறமையற்ற தேசமானது கண்டனத்திற்குரியது. ஒரு திருமண வாழ்வு குழப்பமடையும் போதே விவாகரத்தானது இரு தரப்பினரும் 'புதிய வாழ்வை' ஆரம்பிப்பதற்கான வழிமுறையாகும் இதே விதமாக ஒரு தேசம் 'புதிய வாழ்வை' ஆரம்பிப்பதற்கான விருப்பமே அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திற்கான காரணமாகும். இயற்கையின் சட்ட நியதியும் இயற்கை தேவன் வழங்கிய நியதியும் சமத்துவமானது என்கிற விடயத்தைத் தாண்டி உலகிலுள்ள அனைத்து அதிகாரங்களையும் கைகளில் எடுத்த முன்னைய அரசியல் வரையறைகளை கலைப்பதற்கு இதுவே தகுந்த நேரம் என அப்போது வரையறை செய்யப்பட்டது. இதே விதமான கருத்தே செக்கோஸ்லாவியான் ஜனாதிபதி கவல் கொண்டிருந்தார். அதாவது ஒரு நாட்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிற்குள் ஒன்றாக வாழ்வது கடினமாக இருப்பின் ஒரு அரசமைவு ரீதியான பிரிவினையே தீர்வாக அமைய முடியும்.

ஒரு புதிய தேசத்தின் பிறப்பானது ஒரு ஸ்திர தன்மைக்கான அச்சுறுத்தல் அல்ல ஸ்திர தன்மை என்பது நிலவி வரும் முறையை பாதுகாப்பதற்கான வழிமுறையல்ல. பலாத்காரமாக பேணப்படும் 'நிலவி வரும் அமைவானது' ஒரு ஸ்திரமற்ற தன்மைக்கு தவிர்க்க முடியாது வழிகோலும். ஒவ்வொரு மக்கள் சமூகமும் தமது தேசிய இறையாண்மையை பாதுகாத்தல் என்ற ஒழுங்கு முறையை புதிய உலக அமைவில் வெளிக்காட்டுகின்றன என்பதை சர்வ தேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும். சிறீலங்காவானது ஒரு அரச அமைவு என்ற அரசியல் அடையாளத்தில் இருந்து முறிவடைந்து வருகின்றது என்பதை உலக சமூகம் அங்கீகரிக்க வேண்டும். இது கேட்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்குமான காலகட்டம் என்ற ஜனாதிபதி கவல் அவர்களின் கூற்றை நாம் இங்கு நினைவு கூரலாம்.

சிறீலங்காவின் வடக்கு கிழக்கு பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனமான ஆளுமையின் கீழ் இருக்கின்றது. சிங்கள அரசாங்கத்தின் உத்தரவுகள் அங்கு செல்லுபடியற்றவை. தமிழீழ குடியரசு உருவாகுமா இல்லையா என்பது இப்போதைய கேள்வி அல்ல மாறாக இறுதி வெற்றிக்காக எத்தனை உயிர்கள் இழக்கப்படும் என்பதும் எவ்வளவு தூரம் ஸ்திரத் தன்மை உருவாகும் என்பதே கேள்வியாகும். ஒரு தேசிய இன முரண்பாட்டை சுமூகமாகவும் நாகரிகமாகவும் தீர்க்க முடியாத அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகள் அவமானத்தைச் சுமக்க வேண்டும் என ஜனாதிபதி கவல் குறிப்பிடுகின்றார். அமைதி முறையிலான நோர்வே, சுவீடன் பிரிவினையானது ஒரு உயரிய வழிகாட்டலாகும். துரதிஸ்டவசமாக சிங்கள அரசியல்வாதிகளிடம் அந்த நாகரிகமோ அல்லது ஞானமோ அல்லது சுவீடன் அரசாங்கத்திற்குரிய அந்த தலைமைத்துவமோ இல்லாத சூழ்நிலையில் சர்வதேச சமூகமானது இங்கு தலையிட்டு ஐ.நா. சாசனத்தின் பிரிவு – VII இன் கீழ் அமைதியையும் நியாயத்தையும் வழங்க வேண்டும். இவ்வாறு செயற்படாத சர்வதேச சமூகம் வரலாற்றின் குற்றவாளிக் கூண்டில் நிற்க நேரிடும். கடந்த 40 ஆண்டுகால வரலாறானது ஒரே நாட்டு அமைவுக்குள் இன சமத்துவம் என்பது சாத்தியமற்றது என்பதை தேவையிலும் மேலாக வெளிக்காட்டியுள்ளது. இப்போது தேவைப்படுவது சத்திரசிகிச்சையே. சொலவெனியாவினதும், குரோட்டியாவினதும் தேச உரிமைக்கான அங்கீகாரத்தை ஆரம்பத்தில் எதிர்த்த லோட் கரிங்டன் இந்த அங்கீகாரம் செரூபியாவை 15 வது போர் நிறுத்த உடன்பாட்டிற்கு கொண்டுவந்துள்ளது என ஒத்துக்கொள்கிறார்.

இத்தகைய முன்னுதாரணங்கள் குறிப்பாக அண்மைக்கால நிகழ்வுகள் சர்வதேச சமூகமானது தமிழர்களின் நாட்டுரிமைக்கான போராட்டத்தை அங்கீகரித்து ஒரு தொடர்ச்சியான விடயபூர்வமான ஒழுங்கு முறையைப் பேணல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. ஐ.நா. சாசனத்தின் பிரிவு; VII சர்வதேச சமூகத்தை தமிழர்களின் நாட்டுரிமைக்கான உரிமையை அங்கீகரிக்கக் கோருகின்றது. இதன் மூலம் புதிய ஒழுங்குமுறையின் கீழ் மக்கள் சமூகங்கள் உணர்ந்து வரும் தேசிய இறையாண்மை உரிமைக்கு வாய்ப்பு வழங்குவதுடன் உலக அமைதிக்கும் பாதுகாப்பிற்குமான அச்சுறுத்தலைக் குறைக்கின்றது. கோட்பாடுகளுக்கான உடன்பாட்டின் கீழ் சுமூகமான உறவைப் பேணும் நாடுகளின் சட்டம் கடமையின் கீழ் சர்வதேச சமூகம் தமிழர்களின் நாட்டுரிமையை அங்கீகரித்து தமிழர்களின் மரண வேதனையைக் குறைப்பதற்கு உதவவேண்டும்.

- விஸ்வநாதன் உருத்திரகுமார்

(சர்வதேச சட்டங்களுக்கான சட்டவியல் நிபுணர்– அமெரிக்கா)





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓடிப்போனவன்....

குடியரசுத் தலைவர் அவர்களே
இதோ உங்களுக்கு ஒரு கடிதம்
நீங்கள் ஒருவேளை இதைப் படிக்கலாம்
உங்களுக்கு நேரம் இருந்தால்,

இப்போதுதான் கிடைத்தன எனக்கு
இராணுவத்திலிருந்து உத்தரவுக் காகிதங்கள்
புதன் பொழுது சாய்வதற்குள்
போருக்குப் புறப்படச் சொல்லி.

குடியரசுத் தலைவர் அவர்களே
நான் அப்படிச் செய்யப்போவதில்லை.
இந்தப் பூமியில் நான் பிறந்தது
ஒன்றுமறியா மக்களைக் கொல்வதற்கல்ல.


உங்களுக்குக் கோபமூட்ட வேண்டுமென்றல்ல.
ஆனாலும் நான் சொல்லத்தான் வேண்டும்....
என் முடிவு எடுக்கப்பட்டுவிட்டது.
நான் ஓடிப் போகப் போகிறேன்.

பிறந்தது முதல் இன்றுவரை
பார்த்துவிட்டேன் எல்லாம்.
தந்தையின் சாவு சகோதரர்களின் பிரிவு
என் குழந்தைகளின் அழுகை.

இன்று கல்லறைக்குள்ளிருக்கும் என் அன்னை
எவ்வளவு துன்புற்றிருக்கிறாள்.
இன்று அவளுக்குத் துச்சமாகிவிட்டன
குண்டுகளும் கவிதை வரிகளும்.

நான் கைதியாக இருந்தபோது
என்னிடமிருந்து பறிக்கப்பட்டன
என் மனைவி என் ஆத்மா
இனிய என் கடந்தகாலம் முழுவதும்.

நாளை அதிகாலையில்
இறந்த ஆண்டுகளின் முகத்தில்
அறைந்து சாற்றுவேன் என் கதவை.
புறப்பட்டுச் செல்வேன் என் பாதையில்.



பிச்சை எடுத்து வாழ்வேன்
பிரான்ஸ் நாட்டு வீதிகளில்
வடமேற்கிலிருந்து தென்திசை வரை
மக்களிடம் எடுத்துச் சொல்வேன்

"மறுங்கள் அடிபணிய
மறுங்கள் போர் புரியப்
போகாதீர்கள் போருக்குப்
புறப்பட மறுங்கள்.

நாட்டுக்கு இரத்தம் தேவையென்றால்
நீங்கள் போய்த் தாருங்கள்."
தெய்வ தூதராயிற்றே நீங்கள்
குடியரசுத் தலைவர் அவர்களே,
என்னைப் பின்தொடர்வதானால்
சேவகர்களிடம்
சொல்லிவிடுங்கள்
ஆயுதமிருக்காது என்னிடம்
தைரியமாகச் சுடலாம்.

பிரெஞ்சு கவிஞர்
போரிஸ் வியான்
தமிழில்: வெ.சிறீராம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இராணுவ ஆக்கிரமிப்பும் உணவு விநியோகமும்

இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் அந்நிய அரசாங்கமாகிய ஸ்ரீலங்கா தமிழ் மக்களுக்கான உணவு விநியோகத்தை, மருந்துவழங்கலை ஆயுதமாக்கி தனது இராணுவ அரசியல் தீர்வுகளைத் தமிழர்கள் மேல் திணிக்க முற்பட்டு வருகிறது. இந்தச் சர்வதேச யுத்தக்குற்றச் செயலை, மனிதாபத்துக்கு எதிரான குற்றச்செயலை ஸ்ரீலங்கா எவ்வித அச்சமோ தயக்கமோ இன்றிப் பகிரங்கமாகவே செய்து வருகிறது.

இதனால் தமிழ்மக்கள் குறிப்பாக விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் பட்டினிச்சாவு நிலைக்கு, ஊட்டச் சத்தில்லாத வாழ்வுக்கு, நோய்களால் பலியாகும் அவலநிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். வைத்தியர்கள் "கையில் ஊமையன் வெண்ணெய் காத்தது" போல மருந்தின்றி சிகிச்சை வசதிகளின்றி தம் கண்முன்னேயே மனித உயிர்கள் கொலையாவதைப் பார்த்துத் தவிக்கின்றனர். இவைகள் ஸ்ரீலங்காவால் ஆக்கிரமிப்பு மூலம் தமிழ்ப்பகுதிகளின் வாழ்க்கையாக மாற்றப்பட்டுள்ளன. இன அழிப்பு என்பது திட்டமிட்ட வகையில் ஒரு இனத்தை படிப்படியாக கொல்வது என்பதற்கு சரித்திர சான்றாக தமிழ்மக்கள் மாறிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அதேவேளை இந்த மக்களின் அவலநிலைக்கு காரணமான தனது நெருக்குதல்கள் எதையுமே சற்றேனும் மாற்றாது மேலும் மேலும் அவைகளை இறுக்கமாக்கும் ஸ்ரீலங்கா இந்த இறுக்கமாக்குவதற்கான வழிவகையாக கப்பல் மூலமான உணவு விநியோகத்தை, மருத்துவ வழங்கலை தனது படைகளுக்கு மேற்கொண்டு வருகிறது. வெளியே தெரியா வகையில் இக்கப்பல்கள் படைகளுக்கான உணவு வழங்கலை மட்டுமல்லாது இராணுவ ஆயுதத் தளபாட வசதிகளையும் பெருக்கவும் செய்கின்றன. இவை ஒருபோதுமே மக்களுக்கான உணவு வழங்கல் அல்ல. மக்கள் மீதான நெருக்குதல்களை மேலும் பெருக்குவதற்கான இராணுவ வழிமுறையாகவே ஸ்ரீலங்காவால் எப்பொழுதுமே கையாளப்பட்டுவருகின்றன.

இந்த இராணுவ விநியோகப் பொறிமுறையை, மக்கள் மீதான யுத்தத்திற்கான தந்திரோபாயங்களை உடைத்தெறிந்து நொறுக்குவதை தமது பொறுப்பாக, கடமையாக கருதும் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா படையினருக்கான கடல்வழி விநியோகப் பாதைகளை அடைப்பதில் பெருவெற்றி கண்டுவருகின்றனர்.

**பற்றிமாகரன்BA.BSC**

இதனை மக்களுக்கான உணவு விநியோகத்தை விடுதலைப்புலிகள் தடுக்கின்றார்கள் என்ற வழமையான நரிக்குரலில் ஸ்ரீலங்கா விளக்கமுற்பட்டுள்ளது. இதனை வன்முறையாக மறுத்துள்ள விடுதலைப் புலிகள் தாம் ஒரு பொழுதுமே மக்களுக்கான உணவு விநியோகத்தைத் தடுக்கமாட்டார்கள் என்பதை வலியுறுத்தியுள்ளதுடன் அதேவேளை படைகளுக்கான விநியோக முறைமைகள் அனைத்தையும் நொறுக்குவதற்கு தயங்கவும் மாட்டார்கள் என்று ஆணித்தரமாக அறிக்கையிட்டு விளக்கியுள்ளனர்.

இந்நிலையில் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களினதும் சர்வதேச அரசாங்கங்களினதும் பொறுப்பு மிக முக்கியமானதாகின்றது. ஸ்ரீலங்காவின் இறைமை என்ற பெயரில் தமிழ் மக்களுக்கான சர்வதேச உதவிகளை நேரடியாக வழங்குவதில் சர்வதேச சமூகம் காட்டும் காலதாமதமே ஸ்ரீலங்காவின் புனைந்துரைகளுக்கும் கடல் வழி இராணுவ விநியோக உத்திகளுக்கும் மூலகாரணமாகின்றது.

இவ்விடயத்தில் தந்திரோபாயப் புள்ளி விபரங்கள் *1992 – 1993* [STRTEGIC SURVEY 92 / 93] கூறியது போல் "சுயநிர்ணய உரிமை என்பது முடிந்து போன ஒன்றல்ல. அது இயக்கத்தன்மையுள்ள ஒரு தொடர்ச்செயற்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாடு. மேலும் சுயநிர்ணய உரிமைக்கு இரண்டு பரிமாணங்கள் உண்டு. ஒன்று உள்ளகப்பரிமாணம் மற்றையது வெளியகப்பரிமாணம். இதில் முதலாவதான உள்ளகப்பரிமாணம் என்பது ஆளுகிறவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடை உறவுகளை ஒழுங்கு செய்வது. இரண்டாவதான வெளிப்பகப் பரிமாணம் என்பது தன்னை சமுதாயமென வரைவிலக்கணப்படுத்தும் சமுதாயத்திற்கும் வெளியுலகுக்குமான உறவுகளை ஒழுங்கு செய்வது. உள்ளகப்பரிமாணமானது மக்களை [குடிமக்கள்] உருவாக்கி அவர்களை அரசாங்கத்தின் சட்ட விளக்கத்தின் மூலங்களாக்கி விடுகிறது. இதற்கு ஜனநாயகரீதியிலான அரசாங்கம் ஒன்று தேவை. இந்த வகையில் சுயநிர்ணய உரிமை என்பது பிரசித்தமான இறைமை என்பதுடன் ஒப்பிடக்கூடியதாக அமைகிறது. ஆனால் இலங்கைத் தீவைப் பொறுத்தவரை 1972–ல் சிங்களப் பௌத்த குடியரசான ஸ்ரீலங்காவாக இலங்கை பிரகடனப்படுத்தப் பட்டது முதல் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் குடிகள் என்பதில் இருந்து தமிழ் மக்கள் விலக்கப்பட்டு தமிழர்களின் பிரசித்தமான இறைமை மூலம் தமிழீழத் தனியரசை மீளவும் அவர்கள் மீட்டுக்கொள்வது என்பது முடிவாக்கப்பட்டது. எனவே ஆளப்படுபவர்களுக்கும் ஆளுபவர்களுக்கும் இடையிலான உறவு விடுபட்டு ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கமும் தமிழ் மக்கள் அந்நிய ஆட்சிக்கு எதிராகப் போராட வேண்டிய தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர். இதனை ஸ்ரீலங்கா ஜனநாயக விரோத நடவடிக்கைகளாலும் பின்னர் ஆயுத ஒடுக்குமுறையினாலும் அடக்கி ஒடுக்க முயற்சிப்பதே இலங்கைத் தீவில் தமிழர் பிரச்சினை [Tamils Question] ஆக உள்ளது. இந் நேரத்தில் தமிழர்களின் வெளியக இறைமை அவர்களை தனியான அரசியல் அலகாக மாற்றியமைத்து வெளிநாடுகளில் உள்ள ஏனைய அரசியல் அலகுகளான அரசாங்கங்கள், இனக்குழுக்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுடன் அவர்களுடைய தொடர்புகளை வடிவமைக்கிறது. தனியான அரசு நிலை என்பது இந்தத் தொடர்புகளின் பல வகைகளில் ஒன்றுதான் என்பது அரசியல் அறிதலின் கருத்து. ஆக எப்பொழுது தமிழீழ மக்கள் வெளியுலகுடன் தனது தொடர்புகளை இறுக்கமாக்க வேண்டிய நிலைக்கு வந்தனரோ அப்பொழுதே அவர்கள் தனியரசாக செயலளவில் செயற்படத்தொடங்கி விட்டனர். எனவே தான் 1996–ம் ஆண்டின் தந்திரோபாயப் புள்ளிவிபரங்கள் [Strategi Survey 95,96] "விடுதலை புலிகளே உண்மையான இறைமையுடன் [Virtual Sovereignty] செயற்படுகின்றனர்.

அவர்களுக்கு இல்லாதது சர்வதேச அங்கீகாரம் ஒன்று மட்டும்தான்'' எனத் தெளிவாகக் கூறியது. இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கான பகீரதப் பிரயத்தனத்தில் சந்திரிகா நடத்தும் போர் வரிசைகள் தமிழீழ மக்களை இனக்கொலைக்கு, இன அழிப்பிற்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறது. ஒன்றல்ல இரண்டல்ல பதின்மூன்று யுத்தங்கள் சந்திரிகாவால் இது வரை பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது. ஆயினும் தமிழீழ மக்களின் மன உறுதியோ தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வலிமையோ எள்ளளவும் மாறவில்லை. புதிய பிரதேசங்களை ஸ்ரீலங்கா ஆக்கிரமிக்கும் பொழுது அதைவிட பலமடங்கு பெரிதான பகுதிகள் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டு வருகின்றன. இதனால் போர் சுழல்கிறது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அசைக்கமுடியாத சிங்கள ஸ்ரீலங்கா ஆக்கிரமித்த அரசாங்கம் தமிழர்களை வதைக்கிறது. இது அப்பட்டமான இன அழிப்பு. இந்த இன அழிப்பிற்குரிய சகல இராணுவ வழிமுறைகளும் விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டேயாக வேண்டும். இதில் ஒரு அம்சம்தான் படைகளுக்கான விநியோகம் நொறுக்கப்படுகிறது. இதனைப் பலவிதமாகக் கயிறு திரிக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா இறங்கி பரப்புரைகளைக் கட்டவிழ்த்துவிடலாம். ஆனால் இவற்றுக்கு விடுதலைப் புலிகள் தகுந்த பதிலை அளித்துள்ளார்கள். படைகளுக்கான விநியோகம் என்றும் எவ்வழிகளிலும் நொறுக்கப்படும் என்பதுதான் அப்பதில்.

இதனை தனக்கு சாதகமாக மாற்ற முயலும் அரசாங்கம் மக்களுக்கு உணவு வழங்கல் தடுக்கப்படுவதாக முதலைக் கண்ணீர் வடிக்கிறது. ஆடு நனைகிறது என ஓநாய் அழும் இக்கதை முடிவுக்கு வருவதற்கு ஒரேவழிதான் உண்டு. அது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும், சர்வதேச அரசுக்களும் நேரடியாகத் தமிழ் மக்களுக்கான உணவு விநியோகத்தை மேற்கொள்வது தான்.

மேலும் தமிழ் மக்கள் தமக்கான உணவு, மருந்துப் பொருட்களைப் பெற முடியாமல் இராணுவ ரீதியாக தடுக்கப்பட்டு வருகின்றனர். இந்த அவல நிலை மாறுவதற்கு ஒரேவழி ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழர் தாயகத்திலிருந்து உடனே வாபஸ் பெறப்பட் வேண்டும்.

இவற்றை வற்புறுத்தி விளக்கி சர்வதேச மக்களுக்கு இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் அமைதியாக பாதுகாப்பாக வாழ்வதற்கு உள்ள ஒரே தடை ஸ்ரீலங்கா இராணுவமே என்ற உண்மையை உரக்கக் கூற வேண்டிய பொறுப்பு உலகெங்குமுள்ள தமிழர்களின் சந்ததிக்கடமையாக உள்ளது.



★★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திறந்த மடல்

**'பந்த் என்கிற சடங்கு' என்ற தலைப்பில் 'ஆனந்த விகடன்' வெளியிட்ட கட்டுரைக்கு பதிலளித்து 'உலக மனித உரிமைகளுக்கான ஆதரவுக்குழுவின்' தலைவர் மு. வரதராசு அவர்கள் எழுதிய திறந்த மடலின் ஒரு பகுதியை இங்கே பிரசுரிக்கின்றோம்.**

திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கட்கு,

திறந்த மடல் வழி மு. வரதராசு எழுதிக் கொள்வது,

கடந்த 8–6–97ல் வெளிவந்த ஆனந்தவிகடனில் "பந்த் என்கிற சடங்கு" என்ற தலைப்பிட்டு, தலையங்கமாக வெளியிட்டிருந்தீர்கள் மிக்க மகிழ்ச்சி. பந்த் எத்தனை என்பது கணக்கிடுவது கடினம் என்ற வாக்கியத்தை மட்டும் குறுகிய நோக்கத்துடனும், தீய எண்ணத்துடனும் முடித்துக் கொண்டீர்கள் 'மெத்த மகிழ்ச்சி'.

ஆனால் அதே செய்தியில் "விடுதலைப் புலி" அமைப்புப் பற்றி குரோத உணர்வுடனும், அரசியல் காழ்ப்புணர்ச்சியுடனும் எழுதியிருப்பது கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

ஆசிரியர் அவர்களே, விடுதலைப் புலி அமைப்பிற்கு விரோதிகள் யார்....? சகோதரர்கள் யார்....? நண்பர்கள் யார்....? என்று புரியாமல் வெறித்தனமாகச் செயல்படும் இயக்கமாக மாறிவிட்டதுபோல் ஓர் தோற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளீர்கள் உங்கள் பத்திரிகையில்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் கடந்த காலங்களிலும் சரி, இப்போதும் சரி, தமிழ்நாட்டின் ஆதரவையும், இந்தியாவின் உதவியையும் கொச்சைப்படுத்தியவர்கள் இல்லை. ஆனால், உங்கள் தலையங்கத்தைப் பார்க்கும் போது எங்கே இந்திய அரசும், தமிழ்நாட்டு மக்களும் புலிகளுக்கு ஆதரவு தந்து விடுவார்களோ என்ற அச்சத்தில் ஆதிக்கச் சிந்தனையுடன் எழுதியுள்ளீர்கள் என்பது புலனாகிறது.

புரட்சிகர இயக்கத்தில் சில முரண்பாடுகள் ஏற்படுவது இயல்பான ஒன்றுதான். உண்மைகளை இப்படியாக, பொய்யாக்கி எழுத்து வடிவில் எழுதுவதுதான் பத்திரிகை தர்மமா...?

இலங்கையில் நடப்பது இன்று தோன்றிய ஒன்றல்ல என்பது உங்களுக்குத் தெரியாததல்ல! கடந்த 40 ஆண்டுகளுக்கு மேல் தமிழின உரிமையைப் பறித்தும் இராணுவத்தை ஏவிவிட்டு படுகொலை செய்தும், பாலியல் வனுமுறைகளில் ஈடுபட்டுவரும் இராணுவத்தை கண்டிக்க திரணியற்ற நீங்கள் புலிகளின் இயக்கத்தைப் பற்றி எழுதுவதற்கு உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்பதை நீங்களே புரிந்து கொண்டால் சரி.....!

தன் இனத்திற்காவும், மொழிக்காகவும் தன்னுடைய சொந்த மண்ணுக்காகவும் தம் உயிரையே பணயம் வைத்து களத்தில் இறங்கி தியாகம் செய்யும் விடுதலைப் புலிகளை கொச்சைப்படுத்தியும், காட்டிக் கொடுத்தும், இலங்கை அரசிடம் சோரம்போகின்ற துரோகிகளை பக்கத்தில் வைத்துக் கொண்டு வெண்சாமரம் வீச வேண்டுமென நீங்கள் நினைக்கிறீர்களா? காட்டிக்கொடுக்கும் துரோகிகளை களையெடுப்பதுதான் முதல் வேலையாக இருக்கும்; ஒரு புரட்சிகர இயக்கத்தில் இதைத்தான் புலிகளும் செய்கிறார்கள்.

உங்கள் கவனத்திற்கு ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன் "வியட்னாம் போரில் 30 லட்சம் வியட்னாமியர் களை படுகொலை செய்த அமெரிக்க ஏகாதிபத்திய அரசைப்பற்றிய நினைவு உங்களுக்கு இல்லையா...? அங்கே நடந்ததென்ன... வியட்னாமியர்களும் தங்கள் மண்ணுக்குத்தானே போரிட்டார்கள். அப்போரில் மைலாய் பகுதியில் நிகழ்ந்த படுகொலைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா....? அல்லது தெரியாதா? ஒரேகுழியில் ஆயிரக்கணக்கான மக்களை ஒருசேர நிறுத்தி படுகொலை செய்தார்களே அமெரிக்க இராணுவம், இவர்களை என்னவென்று சொல்ல விரும்புகிறீர்கள்....? இப்படி எத்தனையோ வரலாற்றில் உண்மைகளை என்னால் விபரமாக எழுத முடியும்.

இந்தியாவிலிருந்து வெளிவருகின்ற பெரும்பான்மையான பார்ப்பண ஆதரவு பத்திரிகைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செய்திகளையும், செயற்பாடுகளையும், துரோகத்தனமான செயல்களில் ஈடுபட்டுவரு வதை கண்கூடாக பார்த்து வருகிறோம். அதன் ஒரு சிறு அங்கம்தான் விகடனில் வெளிவந்த செய்தியாகும்.

நான் உங்கள் நாட்டு அரசியலில் தலையிட விரும்பவில்லை. காரணம் நான் வேறுநாட்டு பிரஜை.

ஆனால் உலகில் எந்த நாட்டிலும் அராஜகமும், சர்வாதிகாரமும் நடைபெற்றாலும், அதைப் பற்றிப் பேசுவதற் கும், எழுதுவதற்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

குறிப்பாக ஏன் தமிழ்நாட்டு அரசியலையே எடுத்துக் கொள்வோம். கடந்த ஐந்து ஆண்டுகளாக நாட்டைய குட்டிச்சுவராக்கி, மக்களின் வரி பணத்தில் குபேர வாழ்க்கை நடத்தி இன்று உலகமே சிரிக்கும் அளவுக்கு ஆட்சி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்திய முன்னாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை பற்றி தங்களுக்கு ஏதாவது தெரியுமே....? கூவம் ஆற்றிலிருந்து வெளிவரும் துர்நாற்றம் வீசுகின்ற அரசியல்தான் தமிழ்நாட்டு அரசியல்.

தமிழ்நாட்டில் கோடானகோடி மக்களுக்குச் சொந்த வீடு கிடையாது; வேலை இல்லை; ஒரு வேளைக்கு ஒழுங்கான உணவு இல்லை; சென்னையைச் சுற்றி பல லட்ச மக்கள் பிளாட்பாரத்தில் வாழ்க்கை நடத்தும் இழிநிலை; இவை மட்டுமா இன்னும் எத்தனையோ.

ஆனால் உங்கள் நாட்டு ஆளும் வர்க்கம் எப்படிப்பட்ட உல்லாச வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்துவிடுவோம்" என்று உங்கள் நாட்டு கவிஞன் பாடினான்! நடந்ததென்ன.....! பிள்ளையே இல்லை என்று சொன்ன செல்வி ஜெயலலிதா திடீரென்று ஒரு வளர்ப்புப் பிள்ளைக்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் பொதுமக்கள் பணத்தை கொள்ளையடித்து திருமணம் செய்து வைத்தார்களே, உங்கள் முன்னாள் முதலமைச்சரைப் போலவா விடுதலைப் புலிகள் செய்கிறார்கள்....?

இந்தியாவிலுள்ள சில சக்திகள் தமிழீழம் உருவாக வேண்டும் என்பதில் எள்ளவும் விருப்பமில்லை. காரணம் தமிழீழம் ஒன்று உருவானால் தமிழ்மொழி ஐ.நா ,சபையில் அங்கீகரிக்கப்படும்; உலகில் வாழும் தமிழர்கள் பெருமைப்படக்கூடிய அளவில் தமிழ்மொழி சிறக்கும்; தமிழரின் தன்மானம் தழைக்கும்; இதையெல்லாம் எப்படி இந்தியாவில் உள்ள எம்மின எதிரிகள் பொறுத்துக் கொள்வான். இவர்களுக்கு அடிமையாக வாழவேண்டும் என்பதுதானே இவர்களதுகொள்கை....!

சமீபத்தில் தமிழ்நாட்டில் சாதியின் பெயரால் நூற்றுக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டார்களே.... உலகத்தில் வேறு எந்த நாட்டிலாவது இப்படி நடந்ததுண்டா? உங்கள் நாட்டில்தான் இப்படிப்பட்ட மனிதனை அடிமைப்படுத்தும் ஜாதி அமைப்பு முறை சட்டத்தில் உள்ளது. இந்த அவலநிலை பற்றி உங்கள் பத்திரிகையில் விஞ்ஞான பூர்வமாக தாங்கள் கண்டித்ததுண்டா...?

புரட்சிகள் நடந்த நாடுகளில் சாதியைப் பற்றிப் பேசமுடியுமா.... ஆனால் தமிழ் நாட்டில் நடப்பதென்ன? பேருந்தில் பயணம் செய்தால் சாதி; சாப்பாட்டுக் கடைக்குப் போனால் சாதி; நடைப்பாதையில் நடந்தால் சாதி; சுடுகாட்டுக்குப்போனால் சாதி; திருமணம் செய்துகொள்ள வேண்டுமா அங்கும் சாதி; தமிழ்த் திரைப்படங்களில் சாதியின் பெயரால் பெரிய கவுண்டர், சின்னக் கவுண்டர், தேவர் மகன் என்று சாதி அடையாளம். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைச் சேர்த்தால் என்ன சாதி என்று அவசியம் குறிப்பிடவேண்டும்; என்ன கொடுமை, அறிவை வளர்க்க வேண்டிய இடத்தில் சாதியை வளர்க்கும் உங்கள் நாட்டு அரசியல்வாதிகளைப் போல் அல்ல விடுதலைப் புலிகள்.

விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் சாதியைப் பற்றி பேசினால் என்ன தண்டனை என்று தெரியுமா உங்களுக்கு! சாதியற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்கி செயல்படுகிறார் தலைவர் பிரபாகரன். இவரல்லவா தலைவர்; உங்கள் நாட்டில் இப்படிப்பட்ட தலைவரைப் பார்க்க முடியுமா?

தமிழ்நாட்டு குரலை விடுதலைப் புலிகள் காதில் போட்டுக் கொள்வதில்லை என்று எழுதுவது ஓர் நயவஞ்சக எண்ணத்துடன் எழுதப்பட்டவையாக உள்ளது. பாம்பின் சீற்றத்திலிருந்து வெளிவரும் விசம்போல் உள்ளது உங்கள் எழுத்து. இதிலிருந்து எனக்கு ஓர் உண்மை புலனாகிறது. தமிழ்நாட்டு பார்ப்பன ஆதரவு பத்திரிகைகள் விடுதலைப்புலிகளுக்கு எவ்வாறு எதிராக செயல்படுகின்றன என்பது வெட்டவெளிச்சமாகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழீழம் பிறப்பது என்பது உறுதி செய்யப்பட்டவையாகும். உலகமுழுவதுமுள்ள தமிழர்கள் இன்று தமிழீழம் உருவாக வேண்டுமென்று பல வகைகளில் ஆதரவும், பொருளாதார ஒத்துழைப்பும் பெரிய அளவில் செய்து வருகிறார்கள் என்பது தங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

இன்று தமிழீழத்தில் மக்கள் நிலைமை மிக படுமோசமாக உள்ளது. குறிப்பாக உணவில்லை, மருந்தில்லை, இருப்பிடமில்லை, விமானக் குண்டு வீச்சால் குழந்தைகள் பலி, அப்பாவித் தமிழ் மக்கள் பலி, இராணுவத்தினரின் பெண்கள் மீதான பாலியல் வன்முறை போன்றவை அன்றாட நிகழ்வுகளாக நடந்த வண்ணமாகவே உள்ளன. இந்த அநீதிகளைப் பற்றி எழுத உங்களுக்கு மனிதாபிமானம் கிடையாதா? அல்லது எழுத எண்ணமில்லையா? உங்கள் வீட்டிலுள்ள பெண்களை யாராவது பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினால் நீங்கள் என்ன செய்வீர்கள்? கையைக் கட்டிக்கொண்டு அமைதியாக இருப்பீர்களா? கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். உங்களிடம் பத்திரிகையும் பேனாவும் இருப்பதாக நினைத்துக் கொண்டு விடுதலைப் புலிகள் மீது விசமப் பிரச்சாரத்தை செய்ய வேண்டாம் என வேண்டுகின்றேன்.

ஆசிரியர் அவர்களே, இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டில் தமிழின மக்களுக்காக நடைபெறும் "பந்த்" நிகழ்வுகளைப் பற்றி விமர்சனம் செய்ய உரிமை உண்டு. ஆனால் கொச்சைப்படுத்தவோ, அவமானப்படுத்தவோ உங்களுக்கு எந்த தகுதியும் இல்லை என்பதை திறந்த மடல் வழியாக தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மு. வரதராசு (தலைவர்)**

**உலக மனித உரிமைகளுக்கான ஆதரவுக் குழு – சிங்கப்பூர்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தந்தையில் இருந்து மகள்வரை....

# தமிழ் படும்பாடு

## பாதை தெரியாத "பாதைதிறப்பு"

— சுப்பு

தற்போதைய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தந்தையாரும் தற்போதைய சிறீலங்காப் பிரதமர் திருமதி சிறீமாவோ அம்மையாரின் கணவருமான, பண்டாரநாயக்கா ஆட்சிபுரிந்த காலத்தில், 1956–இல் சிறீலங்காவில் தனிச் சிங்களச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. சிறீலங்காவின் ஆட்சி மொழியாக, அதிகார மொழியாக சிங்களத்தை அவர் பிரகடனப்படுத்தினார். பிரித்தானியர் இலங்கைத் தீவிற்கு சுதந்திரத்தை வழங்கியபோது விட்டுச் சென்ற அரசியலமைப்புச் சட்டத்தை மீறி அவரால் தனிச் சிங்களச் சட்டம் அறிவிக்கப்பட்டது. தீவில் இன முரண்பாட்டை மேலும் கூர்மையாக்கி, இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு பாதையமைத்துக் கொடுத்த நடவடிக்கைகளில் இதனை முக்கியமாகக் கொள்ளலாம்.

இதன் பிரதிவிளைவுகளாக பல போராட்டங்கள், பல ஒப்பந்தங்கள் உருவாகின. கலவரம் என்ற பெயரில் தமிழர்கள் வேட்டையாடப்பட்டனர். சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன. தமிழர் அகதிகளாக விரட்டியடிக்கப்பட்டனர். இன அழிப்பு வரலாற்றின் தொடர்ச்சி, இதன்போதே தீவிரமாக தன்னை இனங்காட்டிக்கொண்டு புறப்பட்டதெனலாம்.



1961–இல், தற்போதைய சிறீலங்காப் பிரதமர் சிறீமாவோ அம்மையாரின் தலைமையிலான ஆட்சியில் நீதிமன்றங்களில் சிங்கள மொழிப் பிரயோகம் பற்றிய சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1972–இல், சிறீமாவோ அம்மையாரின் தலைமையிலான அரசு, இலங்கைத் தீவைக் குடியரசாக்கி, பிரித்தானியாவின் பிடியில் இருந்து முழுமையாக விடுவித்துக் கொண்டு, தமிழர்களை தமது பிடிக்குள் கொண்டு வந்தனர். தமக்குத்தாமே சட்டமியற்றும் அதிகாரத்தை முழுமையாகப் பெற்றுக்கொண்ட சிறீமாவோ தலைமையிலான சிங்கள அரசு, பௌத்தத்தை அரச மதமாக்கியது. சிறீலங்கா அரசால் பேணிப் பாதுகாக்கப்படவேண்டிய உயரிய மதம் என்ற அந்தஸ்த்து பௌத்தத்திற்கு வழங்கப்பட்டது. சிங்கள மொழிக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் உயரிய சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது.



இவை எல்லாம் கடந்தகால வரலாறுகள். தமிழ்மொழியைச் சிதைத்து அழிக்கவும், தமிழினத்தை இல்லாதொழிக்கவும் சிங்களத் தலைமைகள் போட்ட கணக்குகள் ஏராளம். 1987–ஜூலை மாதம் சிறீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிற்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையே கைச்சாத்திட்டப்பட்ட ஒப்பந்தத்தில் தமிழ் மொழியும் ஆட்சி மொழியாதல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

ஆனால் ஆண்டுகள் நீளக்கால் பாய்ச்சலில் சென்று கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகள்தான் தீர்ந்தபாடாய் இல்லை.

இந்த நிலையில், தற்போதைய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின்அண்மைய அறிவித்தல், நூதனமானதொன்றாகவே கொள்ளப்படுகின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்டோபர் மாதத்திற்கு முன்னர் தமிழ்மொழிப் பிரயோகம் பூரணமாக அமுல்படுத்தப்பட வேண்டும் என, தனது அமைச்சர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா பணிப்புரை வழங்கியிருக்கின்றார்.

அவர் கூறியிருக்கும் இதற்கான காரணம் இன்னமும் நூதனமானதொன்றாகவே உள்ளது. "புரியாத மொழியில் கடிதங்களைப் பெறும் மக்களின் நிலைமையை நினைக்கும்போது அச்சமாக இருக்கின்றது." இதுவே அம்மையார் உதிர்த்த அற்புத வரிகள்.

ஆட்சிப் பொறுப்புக்கு வந்து மூன்று வருடங்கள் ஆகும் நிலையில் இந்த ஞானோதயம் எப்படி வந்தது? ஏன் வந்தது?

மொழி புரியாத கடிதங்களையும் ஆவணங்களையும் பெறும் மக்கள் என்ன செய்வார்கள்? எப்படி முடியாதவர்களாய் அலைக்கழிவார்கள் என்பதை உணர்ந்து கொள்ளவே சந்திரிகா அம்மையாருக்கு மூன்று வருடங்கள் சென்றிருக்கின்றனவா?

அப்படியானால் உணவின்றித் துடிக்கும் மக்களினதும், மருந்தின்றித் தவிக்கும் மக்களினதும் துன்பங்களை நினைத்துப் பார்ப்பதற்கே அம்மையாருக்குப் பல ஆண்டுகள் எடுக்கக்கூடும். ஏதுமே அறியாமல் உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கையில் இராட்சத விமானங்களின் நொடித் தாக்குதலில் உடல்சிதறி உயிர் துறக்கும் தமிழ்மக்களின் நிலையை அவர் எண்ணிப்பார்க்க மிக நீண்ட காலம் இருக்கிறதென்றே கொள்ள வேண்டும்.

மொழிபுரியா கடிதத்தைப் பெறும் மக்களின் நிலையை நினைக்கவே அச்சமாக இருக்கின்றது என கலக்கமடையும் சந்திரிகா அம்மையார், சிங்களப்படையின் செல்வீச்சுக்கும், துப்பாக்கிக் குண்டுக்கும் உயிர்தப்பி ஓடி, ஓடி.... உருக்குலைந்து போகும் தமிழ் மக்களை எப்போது நினைத்துப்பார்க்கப்போகின்றார்.

அரசியல் என்பதே வெறும் சினிமாவாகப் போய்விட்டது. ஏதோ... முக ஒப்பனை செய்து ஒய்யாரமாய் வந்திறங்கி அழகான சட்டைகளில் ஆடிப் பாடிவிட்டுச் செல்லும் நடிகை பத்திரிகைப் பேட்டியளித்தது போல், ஒரு தேசத்தின் ஜனாதிபதி பேசுவதை எப்படி ஏற்றுக்கொள்வது.

அதை வரவேற்கும் அறிவிலிகளினதும் அடிவருடிகளினதும் நிலையை எண்ணி சிரிக்கவே முடியும்.

மூன்று மாதங்களை நெருங்கிக் கொண்டிருக்கும், சந்திரிகா அரச படையினரின் வெற்றி நிச்சயம் என்னும் பொருள்தரும் "ஜெயசுக்குறு" இராணுவ நடவடிக்கை எதிர்பார்த்தது போன்று, விடுதலைப் புலிகளின் கிடுக்கிப் பிடிக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. மே மாதம் 13–ம் திகதி, மிகுந்த ஆரவாரத்துடன், பெரும் எடுப்பில் ஒரு வரலாற்றுக்கே பாதை போடுவது என்ற கம்பீரத்துடன் புறப்பட்ட ஜெயசுக்குறு படையணி, விடுதலைப்புலிகளின் சளைக்காத தாக்குதல்களால் களைப்படைந்து நொந்துபோய் முடங்கிக் கிடக்கின்றது. ஆட்பற்றாக்குறை, ஆயுதப் பற்றாக்குறை என்பவை பெரும் பிரச்சினையாக உருவெடுக்க, கௌரவப் பிரச்சினையாக முனைப்புப் பெற்றுள்ள இந்தத் தரைப்பாதை திறக்கும் நடவடிக்கை திரிசங்கு சொர்க்க நிலையில் அந்தரத்துக்கு உள்ளாகியுள்ளது.



யாழ். குடாநாட்டைக் கைப்பற்றி, சிங்களத்துக் கொடியேற்றி, வெற்றிப்பட்டோலையை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து ஒப்படைத்த போது சிங்களவர் மத்தியில் ஒரு கதாநாயக அந்தஸ்தில் உயர்த்தப்பட்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை, இன்று சிங்கள மக்களின் பழிச்சொல்லுக்கும் இழிசொல்லுக்கும் உள்ளாகியுள்ளார்.

வன்னிக் காட்டில் விரிக்கப்பட்டுள்ள யுத்தம், ரத்தவத்தையின் நிலைமையை மட்டுமல்ல சந்திரிகாவின் நிலையையும், சிறீலங்காவின் அரசியல் இராணுவ நிலைகளிலும் பெரும் மாற்றத்தை உண்டுபண்ணப் போகின்றது என்பது வெளிப்படையானது.

காடுகளிலேயே தமது ஆரம்பப் பயிற்சிகளை ஆரம்பிக்கும் கரந்தடிப் படை கட்டுமானத்தை அடிப்படையாகக் கொண்ட விடுதலைப் புலிகளிற்கும், மரபுப்போர்முறைப் பயிற்சிகளை திறந்தவெளியரங்கில் நடத்திவிட்டு வரும் சிறீலங்காப் படைக்கும் இடையே, விடுதலைப் புலிகளின் சாதகமான நிலப்பரப்பில் யுத்தம் நடைபெறுகின்றது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஆட்பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய சிறீலங்கா அரசு இரண்டு வழிகளில் முயற்சி செய்தது. ஒன்று புதிதாக ஆட்களைத் திரட்டுவது. மற்றையது ஓடித் தலைமறைவாகிவிட்ட படையினரை, பொதுமன்னிப்பு வழங்கி படையில் சேரவைப்பது. இவ் இரண்டு செயற்பாட்டிற்கும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் செய்யப்பட்டன. தேசப்பற்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றூட்டும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. யாரையும் கவர்ந்து இழுக்கும் வண்ணம் சலுகைகள் விளம் பரப்படுத்தப்பட்டன. ஆனாலும், சிறீ லங்கா அரசின் ஆட்சேர்ப்பு முயற்சி தோல்வி கண்டது.

இந்த நிலையில், சிறீலங்காவிற்கு சிம்பாவேயில் இருந்து ஆயுதங்களை ஏற்றிப் புறப்பட்ட கப்பல் ஒன்று காணாமல் போயுள்ளது. ஜூலை 10–ம் திகதியே கொழும்பை வந்தடைந்தி ருக்க வேண்டிய இக்கப்பல் இன்னமும் வந்துசேரவில்லை என்பதுடன், அக் கப்பல் சகல தொடர்புகளையும் இழந் துள்ளது.

சிறீலங்கா அரசாங்கத்திற்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ள இக் கப் பல் விவகாரம் பல ஊகங்களைக் கிளப்பிவிட்டுள்ளது. ஒன்று விடுதலைப் புலிகளின் கைகளில் அவை சென்ற டைந்திருக்கலாம். அல்லது இயற்கையின் சீற்றத்தால் அது கடலில் மூழ்கியோ அல்லது அள்ளுண்டோ சென்றிருக்க லாம். அல்லது ஆயுத முகவர் சிறீலங்கா அரசை ஏமாற்றியிருக்கலாம்.

இயற்கையில் கப்பல் காணாமற் போயிருக்கும் என சொல்லும் நிலை யில், காலநிலை இருக்கவில்லை என வும், அதற்கான தகவல் எதுவும் கப்பல் கப்டனிடம் இருந்து தரைக்கு அறிவிக் கப்படவில்லை எனவும் சொல்லப்படு கின்றது.

சிறீலங்கா அரசை, சிறீலங்காவிற்கு ஆயுதம் விநியோகிக்கும் ஆயுத முகவர் கள் பல வழிகளில் ஏமாற்றியுள்ளனர் என்பது தெரிந்த விடயம். பழுதடைந்த இராணுவச் சாதனங்கள், ஆயுதங்கள், பாவனைக்கு உதவாத வாகனங்கள், விமானங்கள் கூட சிறீலங்காவிற்கு விற் கப்பட்டுள்ளன. அந்த வகையில் இது வும் ஒரு மோசடியாக இருக்கலாம் என சிறீலங்கா அரசு யோசிக்கின்றது. அதனை இல்லை என நிரூபிப்பதற் காக, அனுப்பிவைக்கப்பட்ட ஆயுதங்க ளின் விபரங்களுடன், சிம்பாவேயில் இருந்து ஒரு குழு கொழும்பு வந்து விளக்கம் கொடுத்துள்ளது குறிப்பிடத் தக்கது.

சிறீலங்காவைப் பொறுத்தவரை பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ள இக்கப்பல் விவகாரம் தொடர்ந்து பெரும் மர்மமாகவே இருந்துவருகிறது.

★★★

# சிங்களக் குடியேற்றங்களும் தமிழ் மக்களின் பூர்வீக

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீவிரமாக்கிய முதன்மைக் காரணிகளில் ஒன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற் றங்களாகும்.

ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களது வீதாசாரத்தைக் குறைக்கும் நோக்கில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 1983–ம் ஆண்டில் போராட்டம் வலுப் பெற்று வடக்கு–கிழக்கு தமிழர் தாய கம் என்ற கருத்தியல் வலுப்பெற்றது. அதன்பின்னர் இருந்தே வடக்கு மாகா ணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் பிரிக்கும் நோக்குடனும், கிழக்கு மாகா ணம் தமிழர்களின் தொடர்ச்சியான பிரதேசமென்ற நிலையை மாற்றுவதற் காகவும் மாவட்ட எல்லைப்புறங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் 1827–ம் ஆண்டு முத லாவது குடிசனக் கணக்கெடுப்பு மேற் கொள்ளப்பட்டது. அவ்வேளை தற் போதைய அம்பாறையை உள்ளடக் கிய மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங் களவர் எவரும் இருக்கவில்லை. திரும லையில் 250 சிங்கள மக்களே வாழ்ந்த னர்.

சுதந்திரம் பெறுவதற்கு முன் இறுதி யாக மேற்கொள்ளப்பட்ட குடிசனக் கணக்கெடுப்பின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 102264 தமிழர்கள், 85805 முஸ்லிம்கள், 11850 சிங்களவர் கள் வாழ்ந்தார்கள். திருமலையில் 33795 தமிழர்கள், 23219 முஸ்லிம்கள், 11606 சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள்.

சுதந்திரத்தின் பின் திருமலை மாவட்டத்தில் பார்வதிபுரம் என்ற இடம் பதவியாவாக மாற்றப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கல் லோயா குடியேற்றத்திட்டமும் தீவிர மாக்கப்பட்டு பெருந்தொகையான சிங் கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள். 10.04.61 அன்று மட்டக்களப்பு மாவட் டத்திலுள்ள கணிசமான நிலப்பரப்பு பிரிக்கப்பட்டது. அம்பாறை மாவட் டம் உருவாக்கப்பட்டு குடியேற்றத் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டது.

இதன் பின் 1963–ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணிப்பீடுகள் குடியேற் றத் திட்டங்கள் எவ்வாறு தீவிரமாக இடம்பெற்றன என்பது புலனாகும். இக்கணிப்பீட்டின்போது திருமலை மாவட்டத்தில் 60120 சிங்கள மக்களும், அம்பாறையில் 40950 சிங்கள மக்க ளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 6680 சிங்கள மக்களும் வாழ்ந்ததாக மதிப்பிடப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் 1921–ம் ஆண்டு 53.5 வீதமாக இருந்த தமிழ் மக்கள் 1963–ம் ஆண்டு 45.1 வீதமாகக் குறைந்தது. 4.5 வீதமாகவிருந்த சிங்கள மக்கள் 10.5 வீதமாக அதிகரித்தனர். 1981–ம் ஆண்டு இறுதியாக மேற் கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்போது கிழக்கு மாகாணத்தில் 41.9 வீதம் தமி ழர்களும், 24.9 வீத சிங்கள மக்களும், 32.2 வீத முஸ்லிம்களும் வாழ்வதாகக் கணிப்பிடப்பட்டது.

இதிலிருந்து, தமிழ் மக்களது வீதம் கிழக்கில் திட்டமிட்டு குறைக்கப்படுவ தற்கு டி. எஸ். சேனாநாயக்கா, எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா போன்ற தலைவர்கள் செயற்பட்ட மையை அறிந்து கொள்ள முடிகிறது.

விவசாய அபிவிருத்தி, விவசாயப் புரட்சி என்ற போர்வையில் திட்ட மிட்ட சிங்களக் குடியேற்றத்திட்டங் கள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் 1983–ம் ஆண்டு வடக்கு– கிழக்குத் தமிழர்களின் தாயகம் என்ற



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குடியேற்றங்கள்

கோட்பாட்டை சிதறடிக்கும் வண்ணம் இரு மாகாணங்களையும் கூறாக்கிப் பிரிக்கும் நோக்குடன் மணலாற்றுப் பிரதேசத்தை வெலிஓயா என்ற பெயரிட்டு புதிய குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது.

1988–ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒலிபெருக்கி மூலம் இராணுவத்தினரால் 43 கிராமங்களைச் சேர்ந்த 13,500 தமிழ் மக்கள், 24 மணி நேரத்தில் குடியகலுமாறு அறிவிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்த 24 கிராமங்களைச் சேர்ந்த 3631 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 17 கிராமங்களைச் சேர்ந்த 1410 குடும்பங்களும், தென்னை மரவாடி போன்ற திருமலை மாவட்டக் கிராமங்களிலிருந்து எஞ்சிய குடும்பங்களும் அச் சமயம் இடம்பெயரலாயின.

மேற்படிக் கிராமங்களில் ஒன்பது தலைமுறைகளுக்கு மேலாக தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தபோதிலும் 24 மணி நேரத்தில் அப்புறப்படுத்தப்பட்டே மணலாறு பிரதேசத்தில் 'வெலிஓயா' உருவாக்கப்பட்டது.

1988 ஏப்ரல் 15–ம் திகதியே விசேட வர்த்தமானி அறிவித்தலில் கபடநோக்குடன் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இச்சிறப்பு பிரதேசமாக மணல் ஆறு பிரதேசம் பிரகடனப்படுத்தப்பட்டது. பாதுகாப்புப் போர்வையில் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர். பாரிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வெலிஓயா பிரதேசம் நிர்வாக ரீதியாக தற்போது அநுராதபுர மாவட்டத்துடனேயே இணைக்கப்பட்டுள்ளது.

1987–ம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை – இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு வடக்கு – கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பின் பின் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென்ற அறிவிப்பின் பின்பே வெலிஓயா குடியேற்றத் திட்டம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இதைவிட போர்ச் சூழலையும், இராணுவ நடவடிக்கைகளையும், சாட்டாக வைத்தே தற்போதைய குடியேற்றங்கள் தந்திரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடியேற்றத்திட்டங்களை உருவாக்க முன்னர் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு தமிழர்களுக்குத் தடைசெய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்படுகிறது. அதன்பின்னரே நடவடிக்கைகள் தொடரப்படுகின்றன.

தற்போது மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களையும், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களையும் ஊடறுத்து தமிழர்களின் தொடர்ச்சியான குடியிருப்புக்களைத் துண்டாடும் வண்ணம் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாதாரண தமிழ் மக்கள் சென்று வரமுடியாத பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட குடிசன வீதாசாரத்திற்கேற்ப மகாவலி 'பி' வலயத்தில் குடியேற்றம் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டது. எனினும் இங்கு தமிழர்கள் எவருமே குடியேற்றப்படவில்லை. பெயரளவில் நிதி தென்னவில் 300 முஸ்லிம் குடும்பங்களும், ஓமடியமடு என்ற இடம் ஜெயந்தியாய என பெயர்மாற்றம் செய்யப்பட்டு 175 முஸ்லிம் குடும்பங்களும் குடியேற்றப்பட்டன.

ஆனால் ஏனைய இடங்களில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களே அறியாத வகையிலும் திட்டமிட்ட முறையில், பாதுகாப்பு வலய போர்வையில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

"ரிவிரச", "ரிவிஜய", "ஜெயசிக்குறு" போன்ற இராணுவ நடவடிக்கைகளின் தாக்கங்களை நாம் விமர்சித்தாலும் இவற்றைவிட நீண்டகால நோக்கில் நேர்த்தியான திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படும் குடியேற்றங்களே மிக ஆபத்தானவை.

திட்டமிட்ட சிங்கள மக்கள் குடியேற்றங்கள் மூலம் வடக்கு – கிழக்கு மாகாணம் புவியியல் ரீதியாக தமிழ் மக்கள் பரந்து வாழும் பகுதி இல்லை என்பதை தெரிவிக்கத் தூண்டும் நோக்கில் குடியேற்றுதல்; கிழக்கு மாகாணத்தின் மாவட்ட எல்லைகளில் குடியேற்றுவதன் மூலம் விகிதாசார ரீதியில் தமிழ் மக்களின் குடித்தொகையை கட்டுப்படுத்தல்; நிலப்பரப்புக்களைக் குறைக்கும் வண்ணம் தமிழர் பாரம்பரியப் பிரதேசங்களில் குடியேற்றிய பின்னர் ஏனைய மாகாண மாவட்டங்களுடன் இணைத்தல் போன்ற நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

## பிரதேசங்கள் துண்டாடப்படுகின்றன

வடக்கு – கிழக்கிலுள்ள யுத்த சூழல் நன்கு பயன்படுத்தப்பட்டு தாயக கோட்பாடு வலுவிழக்கும் வண்ணம் திரைமறைவில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் உள்ளவரை சமாதானம் மலருமா? என்பது சிந்திக்க வேண்டியதாகும்.

★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய - தமிழீழ உறவுகள்

இந்திய சிறீலங்கா உடன்பாடு ஒரு பத்தாண்டு காலத்தைக் கடந்து விட்டது. தமிழ் மக்களின் விடுதலைக்கான— சமத்துவமாக வாழவேண்டும் என்ற உரிமைக்கான — போராட்டத்தினைத் தீர்த்து வைப்பதற்குரிய வழிமுறை எனக் கூறப்பட்டு இவ் உடன்பாட்டில் இந்தியா தன்னை சிறீலங்காவின் பங்குதாரராக இணைத்துக் கொண்டது. தமிழர்களின் எவ்வித சம்மதமும் பங்களிப்புகளும் அற்ற இவ் உடன்பாடு, இன்று ஒரு தோல்விகரமான துன்பியல் நிகழ்வாக வரலாற்றில் பதியப்பட்டுவிட்டது.

இந்திய தமிழீழ உறவுகளில் ஒரு பாரிய மாற்றத்திற்கு வழிகோலிய சம்பவத்தின் பத்தாவது ஆண்டுப் பகுதியில் இருந்தவாறு 'உறவுகள்' தொடர்பாக ஆராய்வது காலத்தின் தேவையாகும்.


இந்தியா தென்னாசியாவின் பலம் மிக்க ஒரு அரசியல் இராணுவ பொருளாதார சக்தியாகும். அதனது நிலப் பரப்பு — பிரமாண்டமான சனத் தொகை — பொருளாதார எத்தனங்கள் — பாரிய இராணுவ அமைவு என்பன தென்னாசியவின் தலைமைச் சக்தியாக இந்தியாவை முன்னிலைப்படுத்துகின்றது. சூழவுள்ள நாடுகள் அனைத்தும் தமது சர்வதேச உறவுகளை இந்தியாவுடனான உறவுகளின் பிடியில்தான் வகுத்து வருகின்றன. இந்தோ—பாக் உறவு பகை முரண்பாடாகவே தொடர்ந்தும் பேணப்படும் அதே வேளை நவீன இந்தியா, பிற அயல்நாடுகளுடன் நேச உறவை பேணப்போவதாக அறிவிக்கின்றது. 'குஜ்ரால் கோட்பாடு' எனக் குறியிடப்பட்டுள்ள அயல் நாடுகளுடனான நேச உறவு என்பது, இந்திய நலன்களை பாதுகாக்கும் அதே வேளை அயல்நாடுகளுடன் உறவைப் பலப்படுத்தல் என்பதே என இந்தியத் தகவல்தொடர்பு சாதனங்கள் வரையறை செய்கின்றன.

ஆயினும் அயல் நாடுகளுடனான நல்லுறவு என்பது இந்திய நலன்கள் என்ற கண்ணாடியூடாகவே உருவாக்கப்பட வேண்டிய கோட்பாடாகும்.

## இந்திய நலன்கள் என்பது என்ன?

இந்தியாவைப் பொறுத்தவரை சர்வதேச ரீதியாக அது ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமைக்காக ஜேர்மனி, ஜப்பான், பிறேசில், மலேசியா ஆகியவற்றுடன் போட்டி போடும் நாடாகும். ஒரு பாரிய பொருளாதார சக்தி என ஏற்றுக்கொள்ளப்படா விட்டாலும், அதனது பிரமாண்டமான சனத்தொகை இயல்பாகவே ஒரு பாரிய பொருளாதார நடவடிக்கைகளுக்கான தளமாகும். இராணுவ ரீதியாக, இந்தியா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை உருவாக்கவும்— பாதுகாக்கவும் — முயலும் பார்வையைக் கொண்டுள்ளது. அரசியல் கோட்பாட்டு ரீதியாக எதுவித பிரதான அரசியல் அமைவையும் முன்னிலைப்படுத்தாவிட்டாலும் அது தனது அரசியல் ஆதிக்கத்தை தென்னாசியாவில் பிரதிபலிக்க விரும்புகின்றது.

இந்த வரையறையுடன்தான் இந்தியாவின் 'குஜ்ரால் கோட்பாடு' செயல் வடிவம் பெறமுடியும். மாறாக, சர்வதேச நோக்கங்களைக்கொண்ட உலக வல்லரசுகள்— குறிப்பாக அமெரிக்கா தனது பொருளாதார இராணுவ அரசியல் நலன்களுக்காக தென்னாசியா மீது வரையறை செய்யும் கொள்கை எதிர்பார்ப்புக்கள், இந்திய எதிர்பார்ப்புக்களில் இருந்து முரண்படும்போது அங்கே அயல்நாடுகளை தனது அரசியல் ஆதிக்கத்தில் வைத்திருக்கவும், பிற சர்வதேச சக்திகளின் பிடிகளில் அவை விழாமல் 'பாதுகாக்கவும்' இந்தியா முனைந்தே ஆக வேண்டும். அப்போது, அவ்வயல்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளின் இறைமை இந்தியாவினால் அச்சுறுத்தப்படும். மீள முரண்பாடுகளும் அச்ச உணர்வும் உருவாக்கப்பட்டு 'குஜ்ரால் கோட்பாடு' செல்லுபடியற்றதாகிவிடும்.

நீண்டகால நோக்குடனான ஆய்வில் இந்தியா எப்போதும் ஒரு பிரச்சினைக்குரிய அயல் உறவுக் கொள்கைகளையே கொண்டிருக்க வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது. ஒருபுறம் பாக் தலைமை தாங்கும் வெளிப்படையான பகை முரண்பாடுகள், சீனாவுடனான அரசியல்– இராணுவ– பொருளாதார முரண்பாடுகள், அமெரிக்கா மற்றும் வல்லரசுகளுடனான பொருளாதார மற்றும் அரசியல் முரண்பாடுகள், கண்களுடனேயே பார்க்கின்றது. மூன்றாம் உலக நாடுகளுக்கான தலைமைத்துவத்திற்காக இந்தியா, பிறேசில், மலேசியா, எகிப்து போன்றவற்றுடன் போட்டி போடுகின்றது. இத்தகைய கொள்கை வகுப்பு வரையறைக்குள் இருந்தவாறே இந்தியாவின் அயல் உறவுக் கொள்கைகள் அயல் நாடுகளை அழைத்துச் செல்வதா அல்லது இழுத்துச் செல்வதா என்பதை முடிவு செய்யும்.

* * *

இந்தோ – லங்கா உறவு என்பது அடிப்படையில் இந்தியா, தமிழீழம், சிறீலங்கா என்பனவற்றுக்கு இடைப்பட்ட உறவேயாகும். சிறீலங்காவைப் பொருளாதார அரசியல் நலன்களை பாதுகாப்பதற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை சிறீலங்காவை, அது தன் தென்னெல்லை 'காவலரணாக' இருக்க வேண்டும் என விரும்புகின்றது. பங்களாதேஸ் விடுதலைப் போரின் போது, பாகிஸ்தான் விமானங்கள் தரித்துச் செல்ல உதவி வழங்கிய சிறீலங்காவை இந்தியா அங்கீகரிக்காது. பீக்கிங் சார்பு அல்லது வோஷிங்டன் சார்பு அணிகளில், சிறீலங்காவின் அயல் உறவுக் கொள்கைகள் இடம்பிடிப்பதை இந்தியா தனக்கான அச்சுறுத்தலாகவே பார்க்கும்.

இவற்றின் இடையே தமிழீழம்



இந்து சமுத்திரம் தொடர்பான பார்வை என்பன போன்ற விடயங்கள் சார்ந்ததே இந்திய அயல் உறவுக் கொள்கையாகும். அமெரிக்க இந்திய உறவுகள் பலமானது என விபரிக்கப்பட்ட போதிலும், இந்தியாவின் அணுகுண்டு நிகழ்ச்சிநிரலை அமெரிக்கா அங்கீகரிக்கவேயில்லை. உலக அணு ஆயுதத் தடுப்பு தொடர்பான *NPT* உடன்பாட்டை, இந்தியாவின் எதிர்ப்புக் குரலே இடைநிறுத்தியது. பர்மா ஊடாக சீனாவில் வங்காள விரிகுடா திறந்துள்ள கடற்படைப் பாதையை இந்தியா அங்கீகரிக்கவில்லை. அவுஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியாவின் ஆழ்கடல் கடற்படை *(Blue Water Navy)* நகர்வுகளை இந்தியா சந்தேகக் பொறுத்தவரை அது இந்தியாவின் பிரமாண்டமான அமைவினால் அச்சுறுத்தப்பட்ட ஒரு தேசமாகும். தனது வெளிவிவகார கொள்கை வகுப்பை இந்தியாவின் விருப்பு வெறுப்புக்களைக் கருத்தில் எடுக்காது சிறீலங்காவினால் மேற்கொள்ள முடியாது. இது சிறீலங்காவின் இறைமையைப் பாதிக்கின்றது; இறைமை அச்சுறுத்தப்பட்ட சூழ்நிலையைக் கொடுக்கின்றது. மாறாக இந்தியாவின் தேவைகளுக்கு ஏற்ப வகுக்கப்படும் அயல்உறவு நிகழ்ச்சிநிரல் பாகிஸ்தான், சீனா போன்ற பிராந்திய ஈடுபாடு கொண்ட சக்திகளினதும் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளினதும் தேவைகளுடன் முரண்படும்போது அது, சிறீலங்காவின் தனது விடுதலைக்காகப் போராடுகின்றது. இந்தோ–லங்கா உறவுகள் என்ற தனித்த பார்வையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்தியாவின் கைகளில் உள்ள தடி; தேவைப்படும்போது– சிறீலங்கா முரண்படும்போது– அது சிறீலங்காவுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்டது / பிரயோகிக்கப்படும். அதற்கு மேல் அங்கு தமிழர்களின் விடுதலைப் போருக்கு எதுவித 'மதிப்பும்' கிடையாது. இன்று சிறீலங்கா எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை தமிழர்களின் சுதந்திர ஆகர்ஷிப்பை நசுக்கி தமிழர்களின் ஆயுதந்தரித்த தேசிய விடுதலை இயக்கத்தை தோற்கடித்தலே ஆகும். இதற்கு இந்திய உதவி அவசியமானதும், தேவையானதுமாகும். விடுத



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லைப் போராளிகளுக்கான இராணுவ விநியோகத்தைத் தடை செய்தல். இந்தியாவின் சர்வதேசப் பலத்தை விடுதலைப் போராளிகளுக்கு எதிராகப் பயன்படுத்துதல், தமிழ் மக்களுக்கு மனோரீதியான அச்சுறுத்தலைத் தோற்றுவித்தல் என்பன இந்தியா ஊடாக சிறீலங்காவினால் சாத்தியமாக்கப்படக்கூடிய தேவைகளாகும்.

இதன் அடிப்படையில் இந்திய–லங்கா உறவுகள் இன்று கட்டியெழுப்பப் படுகின்றன.

★★★

தமிழீழம் இந்தியாவை என்றுமே பகை முரண்பாட்டுடன் பார்க்கவில்லை. இரண்டுக்கும் இடையிலான அனைத்து முரண்பாடுகளும் நட்புறவு முரண்பாடுகளே. இது அடிப்படையில் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக எழுந்த முரண்பாடே ஆகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது சர்வதேசத் தொடர்பு இந்தியாவே ஆகும். ஒவ்வொரு இந்தியக்



கொள்கை இட மாற்றங்களின்போதும் தமிழர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளுமே பாதிக்கப்பட்டனர். ஆயினும் இதனை பகை முரண்பாடாக தமிழர்கள் உருமாற்றவில்லை. இந்திய நோக்கங்களை விடுதலைப் புலிகள் தெளிவாக அறிந்திருந்தனர். தமிழர்களது அரசியல் இலட்சியத்தை நேரடியாக பாதிக்கும் விடயங்களில் மட்டும் எதுவித விட்டுக்கொடுப்புகளும் இன்றி எதிர்த்து நின்ற தலைவர் பிரபாகரன், இந்த முரண்பாட்டை முழுமையான இந்திய பகை முரண்பாடாக உருவாக்குவதற்கு அனுமதிக்கவில்லை. இந்திய இராணுவத்தை வெளியேற்றி, இந்தியாவுடனான உறவை மீளச் சீரமைக்கவே பிரேமதாசா அரசுடனான பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகள் இராஜதந்திர ரீதியாக பயன்படுத்தினர் என்பது ஒரு தரப்புக் கருத்தாகும்.

இந்திய ஆளும்வர்க்கம், தமிழர்களின் விடுதலைப் போர் தனது எல்லைக்குள் வாழும் தேசிய இனங்களை அச்சுறுத்துவதாகக் கருதுகின்றது. தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் எல்லை வரை தமிழர் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்த இந்தியா, அந்த எல்லைக்கு அப்பால் அல்லது தேவைக்கதிகமாக வளர்ந்துவிட்ட தமிழர் விடுதலைப் போராட்டத்தை தட்டி வைப்பதில் எதுவித பாரிய ஆட்சேபங்களையும் கொண்டிருக்காது என்பது பொதுவான அவதானிப்பாகும்.

ஆயினும் பலமாக, அதேவேளை சாத்தியமாகக் கூடிய விதத்தில் கட்டியெழுப்பப்படும் தமிழர்களின் விடுதலைப் போரும், தமிழ்நாட்டின் மனநிலையும், சிறீலங்கா தொடர்பான எதிர்காலச் சந்தேகங்களும் இந்தியாவின் அயல் உறவுக் கொள்கை வகுப்பில் கணிசமான பாத்திரம் வகிக்க உள்ளன.

தமிழீழ–இந்திய உறவுகளுக்கான பிரதான அடித்தளம் தமிழ்நாட்டுடனான தமிழீழத்தின் உறவுகளே. இது இராஜதந்திர உறவல்ல. உணர்வுபூர்வமான, பிரக்ஞைபூர்வமான உறவு. பொதுவானமொழி, பண்பாட்டு வரைமுறையுள்ள தமிழ் தேசியங்களுக்கிடையேயான உறவு. தமிழீழப் போராட்டத்தின் நியாயத்திற்காக மட்டுமல்ல, அதன் வெற்றிக்காகவும் உணர்வுபூர்வமாக உழைக்க வேண்டிய தார்மீகக் கடமை தமிழகத்துக்கு உள்ளது. இது பரஸ்பரம் இரு தரப்புகள் சம்பந்தப்பட்டது. இந்திய அயல்உறவு இராஜதந்திர நடவடிக்கையின் கயிறுகள் இதற்குள் பிணைக்கப்படவில்லை. மாறாக, தமிழ்நாட்டின் உணர்வு, விழிப்பு, மனோநிலை என்ற விடயங்களை கவனத்தில் எடுக்கவேண்டிய தேவை இந்திய அயல் உறவு கொள்கை வகுப்பாளர்களுக்கு உண்டு. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இரு பிரதான திராவிட அரசியல் கட்சிகளும் உணர்வுபூர்வமான–நியாயபூர்வமான விடயத்தில் 'அரசியல் சாயம் பூசி' விடயத்தை திசைதிருப்பும் சதிக்குப் பலியாகியுள்ள போதிலும், கட்சி அரசியலுக்கு அப்பால் பிரக்ஞைபூர்வமான உறவுப் பாலமொன்றை தமிழீழ விடுதலைப் போர் தமிழ்நாட்டுடன் ஏற்படுத்தலாம். அந்த ஆதரவு எரிமலை அனைத்து தமிழர்களையும் பண்பாட்டால் ஒன்றிணைத்து, தமிழீழம் எமது நேசநாடு என இந்திய மத்திய கொள்கை வகுப்பாளர்களுக்கு எடுத்தியம்பும். இதனைக் கட்டியெழுப்பும் பணி தமிழ்நாட்டின் சகல அரசியல், சமூகத் தலைவர்களுக்கும், இயக்கங்களுக்கும் உரியதாகும்.

இந்த தமிழ்நாட்டு ஆதரவு என்ற விடயத்தை, தமிழீழத்திற்கு எதிரான சக்திகள், தமிழ் தேசியங்களுக்கு இடையேயான தொடர்பு, இந்திய ஒருமைப்பாட்டிற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என்ற கோட்பாட்டை உருவாக்க முயல்கின்றனர்; அல்லது உருவாக்கியுள்ளனர். இது இந்திய இராஜதந்திர வட்டாரத்தில் மிக ஆழமாக ஆராயப்படும் விடயமாகிவிட்டது. ஆயினும் செயற்பாட்டளவில் இக் கோட்பாடானது நியாயபூர்வமான தளமற்றதாகும்.

நவீன உலகில் தேசிய இனங்களின் போராட்டம் என்பது உள்ளே இருந்து உருவாகி வளர்ந்து வருவது. பொருளாதாரப் புறக்கணிப்புகள்– கலாச்சார அச்சுறுத்தல்கள்– சமூக உறவுகளுக்கான அச்சுறுத்தல்கள் என்பன அகக் காரணிகளாக அமையவேண்டிய ஒரு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய இனத்தின் யுத்தத்தை அயல் தேசத்தின் போராடும் சக்திகள் தூண்டி விடுதல் என்பது, நவீன சமூக வியல் கோட்பாட்டின் அடிப்படையில் தவறானதும் சாத்தியமற்றதுமாகும். தமிழீழ விடுதலைப் போர் தனித்துவ மானது. அதற்கான அகப்புற நியாயங் களையும், காரணங்களையும் கொண் டது. இத்தகைய தனித்துவமான போர் தமிழ்நாட்டு அமைவில் தாக்கத்தைச் செலுத்துவது என்பது ஒரு எல்லை வரை மட்டுமே சாத்தியமானதாகும். தமிழீழ விடுதலைப் போரின் புற அம் சங்கள், வெளிப்பாடுகள் என்பன சாதா ரண ஒரு தமிழ்நாட்டு இளைஞனைச் சென்றடைந்து கிளர்ச்சி கொள்ள வைத்தாலும், அதனது போர் முரசிற் குத் தேவையான அக அம்சங்கள் இல்லாதிருப்பின் அது சாத்தியமற்றதா கும். மேலும் இன்றைய நவீன வளர்ச்சி யடைந்த தகவல் தொழில்நுட்ப சாதனங் கள் உலகளவிலான தேசிய இனங்க ளின் போராட்டங்களை ஒவ்வொரு தமிழ்நாட்டு வீடுகளுக்கும் நேரடியாக விபரிப்புக்களுடன் எடுத்துச் செல்வதா னது, தமிழீழ விடுதலைப் போராட்டம் மட்டும் தமிழ்நாட்டின் தேசிய இன உணர்வைத் தட்டியெழுப்பும் என்ற வாதத்தை மலினப்படுத்துகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உருக்குறுதியும், எதிர்காலம் பற்றிய நேரிய பார்வையும், இந்தியா தொடர் பான சீரிய நோக்கும் கொண்ட தேசி யத் தலைவரினால் வழிநடத்தப்படு கின்றது. இங்கே தமிழீழ விடுதலைப் போர் தமிழ்நாட்டைக் 'குழப்பும்' என்ற இந்திய அச்சுறுத்தலை அமைப்பாண் மைப்படுத்தப்பட்ட வடிவில் உருவாவ தற்கான சாத்தியங்கள் முற்றுமுழுதாக இல்லாமல் போயுள்ளது.

இந்திய அரசு இன்று மாநிலக் கட்சி களின் கூட்டு முயற்சியினாலேயே நிறு வப்படுகின்றது. இத்தகைய அமைப்பே எதிர்வரும் காலங்களில் நிலைத்து நிற் கப் போகின்றது என அரசியல் விஞ் ஞானிகள் கருதுகின்றனர். மாநிலக் கட் சிகள் தமிழர் விடயத்தில் திறந்த மனம் கொண்டவை. எதிர்கால இந்திய அர சியலில் தாக்கம் செலுத்தவுள்ள கான் சிராமின் பி.எஸ்.பி. அல்லது முலா யம் சிங் யாதவின் எஸ்.பி. அல்லது பால்தக்கரேயின் சிவசேனா போன்ற கட்சிகள் தமிழர்களின் விடுதலைப் போர் பற்றிய விடயத்தை திறந்த மனத் துடன் ஆராயக்கூடிய அரசியல் சமூக சூழ்நிலையில் உள்ளன. அரசியல் ரீதி யாக அவர்கள் முன்னைய இந்திய அர சின் தவறான கொள்கை வகுப்பில் பங்காளிகளாக இருந்தவர்கள் அல்ல. சமூக ரீதியாக இவர்கள் நிலவிவரும் இந்திய சமூக அமைப்பை மாற்றிய மைக்க வேண்டும் என்ற போர்க்குணம் மிக்கவர்கள். மாற்றம் என்பதை தமது கொள்கையாகக் கொண்டவர்கள். நீண்டகால நோக்கில் இக் கட்சிகளுட னான தமிழர்களின் உறவுகள் ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிக ளுக்கு எதிரான கட்சிகள் எனக் கருதப் படும் தேசியக் கட்சிகளின் பிடியில் இருந்து இந்திய அயல் உறவுக் கொள் கையை விடுவித்து, நியாயபூர்வமான வழிக்கு அதனை இழுத்து வருவர்.

தமிழீழ இந்திய உறவுகளுக்கான பிரதான நெருக்கடி, நீண்டகால நோக் கில் தீர்க்க முடியாத பகை உணர்வுக ளல்ல. மாறாக இந்திய அரசியல் அரங் கில் நிலவிவரும் ஆழும்வர்க்க மனோ பாவம்– விசுவாசம் என்ற பெயரிலான எத்தனங்கள்– ஸ்தாபனமயப்படுத்தப் பட்டு உருவாக்கப்பட்ட கருத்துக்கள் என்பனவே தமிழீழத்திற்கான இந்தியா



வின் உள்நாட்டு எதிர்ப்புக் காரணிக ளாகும். பலம் மிக்க நியாயபூர்வமான எமது போராட்டம் சர்வதேச அங்கீ காரமும் இறுதி வெற்றிக்கான தளத் தையும் அடையும்போது, உண்மை யான இந்திய நலன்கள் தமிழர்களுக்கு எதிரான போலித்தனத்திலிருந்து இந்தி யாவை விடுவிக்கும்.

இந்தக் கோட்பாட்டு விடுதலைக்கு தமிழ்நாடும், மாற்றங்களை நாடி நிற் கும் சக்கிகளும் அரணாக நிற்பர்.

★★★

நீண்டகால நோக்கில் புவி அமைவு காரணமாக இந்தியா தமிழீழத்துடன் வாழ்ந்தே ஆகவேண்டும். இது தரப் பட்ட நியதி. அதேபோல் தமிழர்கள் சுதந்திரம் அடைந்ததன் பின் சிறீலங் காவின் இந்தியா தொடர்பான அச்சம், அதாவது தமிழர்களுக்கு இந்தியா உதவி புரியும் என்ற அச்சம் நீக்கப் பட்டு புதிய சிங்கள அயலுறவுக் கொள் கைகள் உருவாக்கப்படும்.

அந்த நிலைப்பாடு முன்னைய சிறீ லங்காவின் நிலைகளில் இருந்து வேறு பட்டு தமது இறைமையைப் பாதுகாக் கும் தற்துணிச்சல் உள்ளதாக அமையு மாயின், மீள இந்திய நலன்களுடன் அவர்கள் முரண்படவேண்டியிருக்கும். அதேபோல் தமிழர்களின் சுதந்திர எழுச்சியை இந்திய உதவியுடன் சிறீ லங்காவால் நசுக்க முடிந்தால் அதே விதமான தற்துணிச்சல் ஏற்படலாம். மீள சிறீலங்காவைத் தட்டி வைப்ப தற்காக தமிழர்களுக்கு ஆயுதம் வழங் கும் 'தந்திரோபாய அரசியல்' அப் போது சாத்தியமற்றதாகிவிடும். இவ் இருவேறுபட்ட எதிர்காலம் தொடர் பான அமைவுகளுக்கிடையே முழுத் தீவின் ஆதரவினையும் இழக்காது பாதிப்பரப்பையாயினும் தமது கைக ளில் வைத்திருக்க விரும்பின் தமிழீ ழத்தை ஆதரிப்பதே இந்திய நலன்க ளுக்கு நீண்டகால நோக்கில் பலமான தும், புத்திசாதுரியமானதுமான அயலு றவுக் கொள்கையாகும்.

தமிழீழம் நேர்மையான, புத்திசாது ரியமான உருக்குறுதிவாய்ந்த தலைமை யுடன் இயங்குவது. பிரபாகரன் தலை முறை கோட்பாடுகளுக்கு மதிப்புக் கொடுப்பது. தமிழீழத்தின் பாதுகாப்பு, அபிவிருத்தி, எதிர்காலம், இறைமை என்பன போன்ற விடயங்களில் விடாப் பிடியாக இருக்கும் தமிழர் தலைமை இந்தியாவுடனான உறவுகளில் எதுவித மனோரீதியான தடைகளையும் கொண் டிருக்கவில்லை.

இந்தியாவின் புதிய தலைமுறை ஆட்சியாளர்கள் இந்தச் சாதகமான சூழ்நிலைகளைத் தமது கொள்கை வகுப்பில் எடுத்தாராய்வார்களாயின் ஒரு சாத்தியமான உறவு தமிழீழத்திற் கும் இந்தியாவுக்கும் இடையில் உரு வாகும். இரு அயல் நாடுகளின் சமூக உறவுகள் அவ்வவ் நாடுகளில் பொரு ளாதார, சமூக, கலாச்சார வாழ்வுக்கு உரமூட்டுவதுடன், பரிமாற்றங்களும் உறவுகளும் ஒரு பிரிக்க முடியாத பாலத்தை இரு தேசங்களுக்கும் உரு வாக்கும்; இது காலத்தின் தேவையாகும்.

— நாதன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'ஜனசக்தி'யின் அபவாதம்!



ஜூன் 6—ஆம் நாள் தமிழகம் தழுவிய அளவில் முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

சிங்களப் பேரினவாத அரசால் நாளும் சித்திரவதைக்கு ஆளாக்கப்படும் ஈழத்தமிழர்களுக்காகவும் சிங்களக் கப்பற்படையால் காக்கைக் குருவிகள் போல் நாளும் சுடப்பட்டு மடியும் தமிழக மீனவர்களுக்காகவும் தமிழ் நாட்டு மக்களின் உணர்வை வெளிப்படுத்த அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு அது.

அந்தக் கூட்டத்தற்கு இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டும் பிரதிநிதிகள் வராததோடு மட்டுமல்ல; பதிலும் கிடையாது!

போகட்டும்; வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாதது அவர்களின் முடிவு... அதன் வழி உலகம் முழுவதும் உள்ள தமிழர்களும் மனித நேயர்களும் அவர்களைப் பற்றி எடைபோட்டுத் தான் வைப்பார்கள் என்பது வேறு விஷயம்!

அந்த முழு அடைப்பைப் பற்றி இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 'ஜன சக்தி' வார இதழில் [20.06.1997] 'உண்மை விரும்பி' என்பார் எழுதியுள்ள கட்டுரை மனிதத் தர்மத்துக்கும் தேசிய இன உணர்வுக்கும், பொதுவுடைமைத் தத்துவத்திற்கும், உண்மைக்கும் எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள அப்பட்டமான பாசிசப்போக்கு என்பதில் ஐயமில்லை

"வேலுப்பிள்ளை பிரபாகரனின் தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழகத்தை விடக் கூடுதல் அதிகாரம் படைத்த ஒரு மாநிலமாக தமிழர் மிகுந்து வாழும் பகுதிகள் இலங்கைக்கு சுயாட்சி அதிகாரம் படைத்ததாக வடிவெடுக்க வழி கோலும் இலங்கையின் சந்திரிகா குமாரதுங்கா அரசின் யோசனைகளை ஏறெடுத்துப் பார்க்க மறுக்கின்றனர். அந்த ஆலோசனையை அமுலாக்கினால், ஈழத்தமிழர் கையோங்கி விடுமென்று, சிங்களப் பேரினவாதிகளும், பௌத்த மத சன்னியாசிகளும், சீடர்களும் இதரப் பிற்போக்காளர்களும் கூக்குரலிடுகின்றனர். இவர்களின் ஆதரவு பெற்ற அரசியல் எதிர்க்கட்சியினருக்கு இரு தரப்பினரும் ஆயுதமேந்திய போரில் முனைந்திருப்பதால் எப்படி தேசமே நாசமாகிறதென்பதை சந்திரிகா எடுத்துரைத்து சமாதான பாதைக்கு, அவர்களது அரைகுறை சம்மதத்தையும் வென்றெடுத்துள்ளார். இந்த அனுகூலமான சூழ்நிலையை, தக்கவிதத்தில் பயன்படுத்தி, இலங்கையில் இன நல்லிணக்கத்தை உண்டாக்குவதில் , அமைதி மீளச் செய்வதில் புலிகளிடம் மனமாற்றம் இல்லாதது வேதனையளிக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் துன்பம் தொடர்கதையாவதற்கு இலங்கையில் இன்றைய அரசு மட்டுமே காரணமல்ல, பிரபாகரனின் வகையறாவும் தான் என்பதை, தமிழ் இரத்தக் கொதிப்பால் பாதிக்கப்பட்ட தமிழ் நாட்டின் போலித் தீவிரங்கள் ஏற்றுக்கொள்ளாமல் ஏமாறுகின்றனர் அல்லது ஏமாற்றுகின்றனர்'' என்கிறது 'ஜனசக்தி'.

அன்றாடம் வாழ்விற்கும், உரிமைக்கும், மானத்திற்கும், உயிருக்கும் போராடிக்கொண்டிருக்கும் மக்களுக்காகத் தங்களைத் தற்கொலைப் படையாக ஆக்கிக்கொண்டிருக்கும், தேசிய இன வுரிமைக்காகப் போராடிவரும் புலிகளின் செயல்பாட்டை ஆதரிக்கும் நாம் போலித் தீவிரவாதிகள்.

பேரினவாத உணர்வோடு முப்படைகளைக் கொண்டு ஓரினத்தை அழிக்கும் பாசிச வெறியோடு நடந்துகொண்டிருக்கும் சிங்கள அரசும் அதனை எதிர்க்கும் போராளிகளும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி பார்வையில் ஒரே தராதரத்தினர். இது ஒரு 'நவீன நிஜத் தீவிரமாகவே' இருந்து விட்டுப் போகட்டும்!

இலங்கைக்குள் சுயாட்சி அதிகாரம் படைத்த தமிழர்கள் வாழும் பகுதிகளை உருவாக்கிக் கொடுக்க சந்திரிகா





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயன்றதாகவும், அதனை ஏறெடுத்துப் பார்க்க விடுதலைப் புலிகள் மறுத்ததாகவும் — வாய் புளித்ததோ மாங்காய புளித்ததோ என்கிற போக்கில் ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துகிறார் தோழர் உண்மை விரும்பி.

சந்திரிகா குமாரதுங்க பொறுப்புக்கு வந்ததும் — நல்லெண்ணத்துக்கு அறிகுறியாக உடனே 10 நாட்கள் போர் நிறுத்தம் அறிவிப்புச் செய்தவர் தம்பி பிரபாகரன். பல ஆண்டுகளுக்கு முன் விடுதலைப் புலிகள் கைது செய்து வைத்திருந்த 14 சிங்களச் சிப்பாய்களையும் விடுதலை செய்து, சமாதான சகவாழ்வுக்குப் பச்சைக் கொடியை அசைத்தவர்களும் அவர்களே!

போர் நிறுத்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார் வேலுப்பிள்ளை பிரபாகரன். தமிழீழம் தமிழர் என்பதை உயிர் மூச்சாகக் கொண்ட அவர்கள், அதற்கு மாற்றாக தமிழர்களுடைய உரிமைகளை, உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய திட்டத்தை அரசு முன்வைத்தால் , அதனைப் பரிசீலிக்க, ஏற்கத் தயாராக இருக்கிறோம் என்கிற அளவுக்கு அவர்கள் இணக்கமாக வந்தார்களே!

அதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளும் துவங்கின [14.01.95]

கடலுக்குச் சென்று ஈழத்தமிழர்கள் மீன்பிடிப்பதற்கு இருந்த தடை முதலாவதாக நீக்கப்பட்டது. இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர் கையெழுத்துப் போட்ட மை உலரவில்லை.

குதர்க்கம் செய்ய ஆரம்பித்தார்கள். இரவில் மீன் பிடிக்கச் செல்லக்கூடாது என்றனர். மீன்பிடி தொழிலில் ஈடுபடுபவர்கள் இரவில் தான் அந்தத் தொழிலைச் செய்பவர்கள்; பகலில் ஓய்வு கொள்வார்கள். ஆனால் சந்திரிகா அரசோ ஏட்டிக்குப் போட்டி வேலை செய்தது; அடுத்த கட்டமாக 4 கி. மீட்டர் தூரம் தான் மீன்பிடிக்கலாம் என்று அடுத்த முட்டுக்கட்டையைப் போட்டார்கள்.

எரிபொருள், ஆயுதங்கள் தவிர மற்ற பொருள்களை எங்கும் எடுத்துச் செல்லத் தடை இல்லை என்று ஒப்பந்தத்தில் முடிவு செய்யப்பட்டது. ஆனால் நடைமுறையில் எந்தப் பொருளையும் எடுத்துச் செல்ல அனுமதியில்லை; கேட்டால் அது கெஜட்டில் வெளிவரவில்லை என்றார்கள். அதற்கு யார் பொறுப்பு? அரசாங்கம் தானே!

மூன்றைவது கட்டப் பேச்சுவார்த்தையிலே வடக்கு–கிழக்கு மாநிலப் புனரமைப்பு என்பது இடம்பெற்றது.

புலிகள் தரப்பில் 15,000 கோடி ரூபாய்க்கான திட்டமும், அரசுத் தரப்பில் 4,000 கோடி ரூபாய்க்கான திட்டமும் முன்வைக்கப்பட்டது. பத்தாண்டுக் காலத்திற்கும் மேலாக நாசமாக்கப்பட்ட பகுதியல்லவா! அதனால்தான் அவ்வளவு தொகை தேவைப்படும் என்று வாதிட்டார்கள்.

வடகிழக்கு மாகாணத் திட்டம் என்பதை வடக்கு மாநில அபிவிருத்தித் திட்டம் என்றார்கள் – அடுத்த கட்டமாக யாழ் நகர அபிவிருத்தித் திட்டம் என்று அதன் முக்கியத்துவத்தைக் குறைத்தார்கள். வட கிழக்கு அபிவிருத்தித் திட்டத்திற்காக ஜேர்மன் அளித்த 56 கோடி ரூபாவை, வடகிழக்கு மாநிலத்துக்குப் பயன்படுத்தாமல், சிங்களக் குடியேற்றத்துக்குப் பயன்படுத்தினார்கள்.



ஒப்புக்கொண்ட திட்டத்தை நிறைவேற்றுமாறு விடுதலைப் புலிகள் தரப்பில் மார்ச் 28–ம் நாள் வரை கெடு வைத்தார்கள்; அதற்குள் எந்தப் பணியையும் சந்திரிகா அரசு தொடக்கவில்லை. அதன்பின் விடுதலைப் புலிகள் ஏப்ரல் 19–ம் நாள் வரை கெடுவை நீடித்தார்கள். அசைந்து கொடுக்கவில்லை சமாதான உடன்படிக்கையில் கையெழுத்துப் போட்ட சந்திரிகா அரசு.

ஒப்பந்தம் என்பது ஏமாற்று வேலை பேச்சுவார்த்தை என்று காலம்கடத்தி, அந்த இடைவெளியில் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளவும், ஆயுதங்களைப் பெருக்கிக் கொள்ளவும் போட்ட நய வஞ்சகத் திட்டம் என்பதுதான் உண்மை!

சந்திரிகாவின் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி சிறீலங்காத் தொலைக் காட்சி ரூபவாஹினியின் மிகப் பெரிய அதிகாரியாக இருந்த வசந்தராசா கூறியுள்ள கருத்து கவனிக்கத் தக்கது. அவர் ஒன்றும் தமிழரல்ல; அவரது தாயார் சிங்களவர்; மனைவியும் சிங்களவர்; அவர் கூறுகிறார்,

"சமாதான அடிப்படையில் சந்திரிகா அரசு உண்மையான முறையில் தொடங்க முதல் செயற்படவில்லை. பேச்சுவார்த்தைக்கு இரகசியத் திட்டம் ஒன்றும் நுழைக்கப்பட்டது. சமாதானப் பேச்சுவார்தையை ஒரு கவசமாகப் பயன்படுத்திக் கொண்டு புலிகளை ஒழிக்கும் செயற்திட்டத்தை உருவாக்கினார்கள். விடுதலைப் புலிகளின் தலைவர்களைத் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்திவிட்டால் அவர்களை ஒழித்துவிடலாம் என்பதே அந்தத் திட்டம். சந்திரிகாவின் சமாதான முயற்சிகளை – யுத்த தந்திரத்தின் ஒரு அங்கமாகவே மாற்றினார்கள். சந்திரிகா சமாதானக் கொடியை ஆட்டிக் கொண்டிருந்த அதே சமயத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் அனுருத்த ரத்தவத்த என்பவர் யுத்தத்துக்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்தார். யுத்தம் தொடங்கப்படுமானால், நானே இராணுவ உடை தரித்துத் தமிழர்களைக் கொன்றுகுவிப்பேன் என்று அந்த அமைச்சர் பகிரங்கமாகக் கூறினார்" என்று ரூபவாஹினியின் அதிகாரி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வசந்தராசா தெரிவித்தார் என்றால், சந்திரிகா அரசின் நயவஞ்சகத்தை எளிதில் புரிந்து கொள்ளலாமே!

இந்த உண்மை பன்னாட்டுத் தேசியம் பேசும் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கும் புரியாமல் போன மர்மம் என்ன என்பதுதான் புதிராக இருக்கிறது.

ராஜீவ் காந்தியும் — ஜெயவர்த்தனாவும் சேர்ந்து போட்ட ஒப்பந்தத்தின் படி விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தனர். ஆயுதங்களை எல்லாம் ஒப்படைத் பின்னர் ஜெயவர்த்தனா எப்படி நடந்துகொண்டார்?

ஒப்பந்தம் முடிந்த நிலையில் தமிழ் நாட்டிலிருந்து தங்களது அலுவலகப் பொருட்களைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு இலங்கை திரும்பிய புலேந்திரன் உட்பட 13 விடுதலைப் புலிகளை ஒப்பந்தத்துக்கு விரோதமாக சிங்கள இராணுவம் கைது செய்யவில்லையா?

அந்த 13 வீரர்களும் சயனைடு உண்டு வீரமரணம் அடையவில்லையா? ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது — அதன் முன் — பின் நடப்புக்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாமா?

உலக நாடுகளின் விடுதலைப் புரட்சிகளை எல்லாம் வாயும் வயிறுமாக வரவேற்கும் கம்யூனிஸ்டுக்கள், ஈழப் பிரச்சினையில் மட்டும் பேரினவாத சக்திகளுக்கு ஆலவட்டம் சுழற்றுவதும், போராளிகளைக் கொச்சைப் படுத்துவதும் ஏன்?

"ஈழத் தமிழர் இலங்கையின் பொறுப்பு; அவர்கள் 'தமக்குள் பேசித் தீர்த்துக் கொள்வது அவர்கள் கடமை. நாம் தலையிடுவது, இன்னொரு நாட்டு விவகாரத்தில் மூக்கை நுழைப்பதற்கு ஒப்பாகும்" — இப்படியொரு 'கருத்தை' வைக்கிறார் தோழர்.

அப்படியென்றால் தென்னாபிரிக்காவில் கறுப்பர்களுக்காக் குரல் கொடுத்தோமே... அது குற்றந்தானே.... கியூபாவுக்கு அதே 'ஜனசக்தி' பக்கம் 9—ல் கட்டுரை தீட்டப்பட்டுள்ளதே — அது இன்னொரு நாட்டு விவகாரத்தில் மூக்கை நுழைப்பதாக ஜனசக்திக்குப் படவில்லையா?

வங்களாதேசப் பிரச்சினை என்ன? அது எப்படி மலர்ந்தது? வங்காள தேச மக்களின் சொந்தப் புரட்சியாலா — அல்லது இந்திய இராணுவத்தின் தோள்வலியாலா? அப்பொழுதெல்லாம் இந்தியக் கம்யூனிஸ்டு இந்த மூக்கு நுழைக்கும் "தத்துவத்தை" எல்லாம் பேசியதுண்டா? 10 இலட்சம் பாகிஸ்தானியர் இந்தியாவில் அகதிகளாக வந்தபோது, ஐந்து காசு தபால் தலைகளைக் கூடுதலாக ஒட்டினோமே நினைவிருக்கிறதா, காம்ரேட்?

கம்யூனிஸ்டுகளின் பன்னாட்டுத் தேசியம் என்பதே — இன்னொரு நாட்டுப் பிரச்சினையில் மூக்கை நுழைப்பதுதானே?

அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றிப் பேசும் கம்யூனிஸ்டுக்கள் ஈழத் தமிழர் பிரச்சினையில் மட்டும் இதைக் கைவிட்டுவிட்டதேன்?



அமெரிக்க இராணுவத்தின் 'கிறீன் பெரேட்ஸ்' என்னும் சிறப்புப் பிரிவு சிங்கள இராணுவத்துக்குப் பயிற்சி அளித்ததே! இந்த உண்மையை அமெரிக்க வெளியுறவுத்துறைத் துணை அமைச்சராக இருந்த ராபின்ராபெல் ஒப்புக் கொண்டாரே.

இந்தச் செய் நன்றிக்கு கை மாறாக இலங்கையில் வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா வானொலி நிலையம் செயற்பட இலங்கை அனுமதி அளித்ததே!

கிழக்கு கரிபீயனில் உள்ள மிகச் சின்னஞ்சிறிய நாடான கிரனடாவில் மாரிஸ் பிஷப் தலைமையில் ஏற்பட்டு இருந்த புரட்சி விடுதலை அரசை வீழ்த்த அமெரிக்கா 'ஆன்டிகுவா' தீவில் வானொலி நிலையம் அமைத்து அவதூறு பிரச்சாரங்களை அள்ளி வீசியதை இந்த இடத்தில் கவனித்துக்கொள்ள வேண்டும். அதன்பின் 1983—இல் ஒக்டோபர் 25—ம் நாள் கிரனடா மீது அமெரிக்கா தாக்கியதை கம்யூனிஸ்டுக்கள் மறந்துவிட்டனரா?

பாகிஸ்தானுக்கு இராணுவத் தளவாடங்களையும் பயிற்சியையும் அளித்த தன் விளைவை இந்தியா அனுபவிக்கவில்லையா... இப்பொழுது அமெரிக்க ஒட்டகம் இலங்கைக்குள் நுழைந்துள்ளதே — அங்குள்ள இனப்பிரச்சினையை மையமாக வைத்து — இதனால் தென்னாசியப் பகுதியின் குறிப்பாக இந்தியாவின் அமைதிக்குப் பங்கம் விளையும் என்று கம்யூனிஸ்டு மூளைகளுக்குப் பட்டென்று தெரிந்திருக்க வேண்டுமே! கனடா நாட்டில் வாழ்ந்த பிரெஞ்சு மொழி பேசும் மக்கள் சிறுமைப்படுத்தப்பட்ட போது, அது உள்நாட்டுப் பிரச்சினை என்று பிரான்சு மூக்கை உள்ளே இழுத்துக் கொண்டதா? பிரான்சு நாட்டு மக்களும், பத்திரிகைகளும் தங்கள் இனவுணர்வை வெளிப்படுத்தவில்லையா? அதன் காரணமாக 1980—ல் கனடா வாழ் பிரெஞ்சு மக்கள் புது வாழ்வு பெற்றனரே.

சைப்ரசில் துருக்கியர் கொடுமைப் படுத்தப்பட்டபோது துருக்கி, சைப்பிரஸ் மீது படையெடுத்ததே — அதற்கு என்ன பெயர்?

உலகத்துக்கெல்லாம் ஒரு நியாயம் — தமிழனுக்கு என்றால் மட்டும் இன்னொரு அளவுகோலா?

**நன்றி.**
**விடுதலை**
**(கவிஞர் கவி. பூங்குன்றனின் கட்டுரையிலிருந்து)**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போரும் வாழ்வும்

## போர்க்கால நெருக்கடியும் புதிய கட்டுமானமும்

போரின் இடிமுழக்கம் உலகின் சகல திக்குகளிலும், வேர்கள் ஈடாடுமளவிற்கு அதிரவைத்துக்கொண்டிருக்கின்றது. இடிந்து விழும் மாடமளிகைகளும் உதிர்ந்து விழும் கூட கோபுரங்களும், எரிந்து சாம்பலாகும் குடிசைகளும், அழிந்து போகும் உயிரினங்களும் யுத்த கொடூரத்தின் சாட்சியாக எங்கும் கோலம் காட்டுகின்றன. வாடையும் சோழகமும் வந்து விளையாடும் வான்பரப்பு, கெந்தகநெடி நிறைந்து, நுரையீரல் சுவர்களை கீறிக் கிழிக்குமளவிற்கு அசுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக ஆசிய, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் இன்று யுத்தப் பேய் அகோர வடிவில் நடனமாடித்திரிந்து பிணம் தின்னும் மேடைகளாகி விட்டன. மேற்குலகக் கனவான்களும், மூன்றாம் உலக நாடுகளின் ஒடுக்கு முறையாளர்களும் எழுதப்படாத ஒப்பந்தங்கள் மூலம் ஒன்றிணைந்து இக்கொலை வெறி நாடகத்தை நடத்தி வருகின்றனர். உயிர் முதல் கொண்டு உழைப்பு வரை இந்தக் கூட்டம் உறுஞ்சிச் சுவைக்கும் வெறும் ஜடப்பதார்த்தங்களாக மாற்றப்பட்டு விட்டன. தனிமனித விருப்பு வெறுப்புகளும், அபிலாசைகளும் திருகி அழிக்கப்பட ஏதோ ஒரு கண்ணுக்குத் தெரியாத கயிற்றால் பிணைக்கப்பட்டு மனித குலம் அழிவை நோக்கி வேகமாக இழுத்துச் செலுப்படுகின்றது.

அரசுகளை ஏற்றவும், இறக்கவும், அழிக்கவும் ஆக்கவும் வல்லவையாக ஆட்சியிலிருப்போரை ஒரு குறுகிய



வட்டத்தின் நலன்களைப் பேணவைக்கும் வகையில் செயற்படவைக்குமளவிற்கு இன்று பல்தேசிய நிறுவனங்கள் பலம் பெற்றுவிட்டன. பல்தேசி நிறுவனங்கள் தமது நலன்களையும் ஒடுக்குமுறையாளர்களின் நலன்களையும் ஒன்றிணைப்பதன் மூலம் முழு உலகையுமே பெரும் சந்தையின் நுகர்வோராகவும், உழைப்பை மலிவான விலையில் விற்போராகவும் மாற்றி விட்டன. இடம்பெறும் சுரண்டலுக்கெதிராக பாதிக்கப்படும் பெரும் எண்ணிக்கையான மக்கள் விழிப்படைந்து, எச்சரிக்

**நா.யோகேந்திரநாதன்**

கையடைந்து விடாமல் நிறுத்த இன்று தேசங்களுக்கிடையிலான பூசல்களும், இனங்களுக்கிடையிலான மோதல்களும் திட்டமிட்டமுறையில் கூர்மைப் படுத்தப்படுகின்றன. ஒடுக்குமுறையாளர்களும், இந் நிறுவனங்கள் சிந்தும் எலும்புத் துண்டுகளில் சுகம் காண்பதற்காக, தமது அடக்கு முறைகளைப் பரந்துபட்ட பொதுமக்கள் மேல் கட்டவீழ்த்து விடுகின்றனர். மிகத் தந்திரமாகவே ஒடுக்குமுறையாளர்கள் தமது நலன்களைப் பேண, இனவெறி மத வெறி என மென்மையான உணர்வுகளைத் தூண்டி ஏனைய இனக்குழுக்களின் தனித்துவத்தைச் சிதைக்கவும், பௌதீகரீதியாக அழிக்கவும் தாம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சார்ந்திருக்கும் இனத்தைத் தம் பின்னால் அணிதிரட்டிக் கொள்கின்றனர்

காலங்காலமாகத் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து கடந்த சிங்கள தேசமும் தமிழ்மண்ணும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் தேவை கருதி இலங்கை என்ற ஒரு நாடாக இணைக்கப்பட்டது. நிர்வாக ரீதியில் ஒரு நாடாக இது கருதப்பட்ட போதிலும் பொருளாதாரம், மொழி, பிரதேசம், பண்பாடு என்ற அடிப்படையில் இரு தேசங்களும் இணைந்துகொள்ள முடியவில்லை. பெயரளவிலான இலங்கையின் சுதந்திரம் பெரும்பான்மையினரான சிங்களப் பேரினவாதிகளிடம் போகவே தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை மறைமுகமான வழிகளில் மெல்லமெல்லத் தலையெடுத்தது. ஆனால் 1956ன் பின் இரகசிய வடிவங்களையே தாங்கி நின்ற இன ஒடுக்கு முறை தனது அசிங்கமான உருவத்தை நிலப்பறிப்பாகவும், இனக்கலவரங்களாகவும், மொழியுரிமை அழிப்பாகவும் பகிரங்கமாகவே வெளிக்காட்ட ஆரம்பித்தது. இதற்கெதிரான தமிழ் மக்களின் போராட்டம் சமாதான பூர்வமாக, அஹிம்சாரீயில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அதற்கு வன்முறைகள் மூலம் வழங்கப்பட்ட பதில்கள் தமிழ் மக்களையும் ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தள்ளியது.

பல்தேசிய நிறுவனங்களின் ஆயுத வியாபாரமும், சிங்களப் பேரினவாதிகளின் மேலாதிக்க வெறியும் இன்று இலங்கைத் தீவையும் ஏனைய மூன்றாம் உலகநாடுகளைப் போன்றே யுத்த சகதிக்குள் தள்ளி விட்டன. ஸ்ரீலங்காவினதும், தமிழீழத்தினதும் மக்களின் ஒவ்வொரு அசைவிலும் போர் கலந்து விட்டது. எங்கும் போரின் சர்வ வியாபகத்தன்மை பரந்து செறிந்து நிற்கிறது. அழிவும், குருதியும் இரு இனங்களுக்குமே நிர்ணயிக்கப்பட்ட விதியாகிவிட்டன. போராயுதங்கள், போர்தளபாடங்கள் இவற்றை இறக்குமதி செய்யவும் தரகர்கள், போர் சம்மந்தப்பட்ட ஏனைய தேவைகளின் விநியோகஸ்தர்கள் போன்ற ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய குறிப்பிட்ட குழுவினரை விட ஏனையோர் அனைவரும் போரின் கொடூரத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய அவலம் இங்கே அரங்கேறுகின்றது.

யுத்தம் கொடியது. மனித வாழ்வில் கொடூரங்களை விதைக்கும் ஒரு பயங்கரம்: அழிவுகளும், அவலங்களுமே வாழ்வாகிப்போன தவிர்க்க முடியாமை: நிரந்தர விடிவைப்பெற தற்காலிகமாக இதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டிய கொடிய நிலை.

சிங்களப் பேரின வாதிகளும், சிங்களப்பேரின வாதிகளின் அரசியல் சக்தியான ஸ்ரீலங்கா அரசும் யுத்தத்தை முன்னெடுக்கின்றனர். அதே வேளையில் தமிழீழ மக்களும், தமிழீழ மக்களின் முன்னணிப் படையான விடுதலைப் புலிகளும் யுத்தத்தை யுத்தத்தால் எதிர்கொள்கின்றனர்.

யுத்தம் என்பது நாகரிகமானதோ, அழகானதோ, நாசூக்கானதோ அல்ல. மாறாக கொடூரமான, அழிவுகள் நிறைந்த, இரத்தம் சிந்தும் ஒரு நடவடிக்கை. யுத்தத்தின் நேரடி விளைவுகள் என்றுமே பரந்துபட்ட மக்களுக்கு நன்மை பயப்பதாக இருந்ததில்லை.

ஆனால்—

யுத்தம் என்பது இரு முகங்களைக் கொண்டது.

ஒன்று—ஒடுக்கு முறையையும், குறுகிய வட்டத்தின் நலன்களையும் இலக்காகக் கொண்டது. மற்றது ஒடுக்கு முறையிலிருந்து விடுபடுதலையும் பரந்து பட்ட மக்களின் நலன்களையும் அடிப்படையாகக் கொண்டது. முதலாவது வகையை சிங்களப் பேரின் வாதம் கையெடுக்க, இரண்டாவது முறையான யுத்தம் தமிழீழ மக்களால் முன்னெடுக்கப்படுகின்றது.

அநீதியான ஒரு யுத்தத்திற்கு நீதியான ஒரு யுத்தத்தினால் பதில் கொடுக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா அரசு இன்று தமிழீழ மக்கள் மீது தொடுத்திருக்கும் யுத்தம் ஒடுக்குமுறையை, இன ஒழிப்பை அடிப்படையாகக் கொண்ட போதிலும் இதன் பலாபலன்கள் எப்படி உருவாகி வருகின்றன ?

இன்று பேரினவாத அரசு பொருளாதார ரீதியாக சிங்கள தேசத்தை படுபாதாளத்திற்குள் தள்ளிக்கொண்டிருக்கிறது. தேசிய அபிவிருத்திக்குச் செலவிட வேண்டிய நிதி யுத்த தளபாடங்களைக் கொள்முதல் செய்யவும், யுத்தத்தின் ஏனைய செலவுகளை ஈடு செய்யவும் பயன்படுத்தப்படுகின்றது. திறந்த பொருளாதாரம் என்ற போர்வையில் தேசிய மூளவளங்களும் மனித உழைப்பும் மிக மலிந்த விலையில் அந்நிய முதலீட்டாளர்களால் அள்ளிச் செல்லப்படுகின்றன. போர் அரக்கனின் வயிற்றை நிறைவு செய்ய இவையனைத்துமே போதாக நிலையில் தேசிய உற்பத்தியின் பிரதான ஊற்றுகளாக விளங்கும் கைத்தொழில் நிறுவனங்களும் ஏனைய அரச உடமையான ஸ்தாபனங்களும் பல்தேசிய நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன. ஒட்டு மொத்தத்தில் சொல்லப்போனால், ஒரு இனத்தை அடிமை கொள்ளவும், அதன் தனித்துவத்தை சீரழித்துச் சின்னாபின்னப் படுத்துவதற்குமாக, இன்னுமொரு தேசம் தன்னைத் தானே விற்று ஒரு மீள முடியாத அடிமை நிலைமைக்கு ஆட்பட்டுக் கொண்டிருக்கிறது

இதே வேளையில்—

தமிழீழ மக்களும், தமிழீழ மக்களின்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமைச் சக்தியான விடுதலைப் புலிகளும் எம்மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட யுத்தத்தை எதிர் கொள்ளுகிறோம். நாம் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம். எமது யுத்தமும் உயிரிழப்புகளைச் சந்திக்கிறது. பெரும் பொருளாதார இழப்புக்களைச் சுமக்கிறது. காலம் காலமாக நாம் வாழ்ந்த பிரதேசங்களை விட்டுக் கூட தற்காலிகமாக வெளியேறும் நிலைமையும் ஏற்படுகின்றது. வறுமையும், பட்டினியும், வசதியீனங்களும் வாழ்வாகி விடுகின்றது. ஆனால் எமது யுத்தம் விடுதலைக்கானது, நிரந்தர விடிவுக்கானது: சுதந்திரமும், சுபீட்சமும் மிளிரும் ஒரு சொந்தத் தாயகத்தை நிறுவுவதற்கானது.

எனினும் இந்த யுத்தம் இந்த மண்ணைவிட்டு நிரந்தரமாகவே இல்லாமற் செய்யவேண்டும் என்பது இத்தேசத்தின் ஒவ்வொரு பொதுமகனின் அபிலாசையுமாகும். நிச்சயம் அது நிறைவேற்றப்பட்டே ஆகவேண்டும்.

ஆனால் அது எவ்வாறு சாத்தியம்?

குருதியின் ருசி கண்ட யுத்தப் பிசாசுகள் ஒரு நாளில் புத்தராக மாறியதாகச் சரித்திரமில்லை. ஒடுக்கு முறையை ஆயுதமாகக் கையிலெடுத்தவர்கள் ஒடுக்கு முறைக்கான எல்லையை வரையறுத்ததாக வரலாறு இல்லை. அடக்க நினைப்பவர்கள் முன் அடிபணிந்து போவது அழிந்து போவதற்கான ஆரம்ப நடவடிக்கையே.

எனவே எமது யுத்தம் எதிரியின் அழிவு ஒன்றையே இலக்காக கொண்டது. எதிரியின் அழிவு என்பது எதிரியை முழுமையில் பௌதீக ரீதியில் அழிப்பது; எமது மண்ணில் நிலை கொள்ளும் சூழ்நிலையை அழிப்பது; எமது எல்லை தாண்டும் சக்தியை இல்லாமல் செய்வது என்பதே அர்த்தமாகும்.

எனவே நாம் எமது யுத்தத்தைத் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும். எமது ஒவ்வொரு நடவடிக்கையும் யுத்தத்தின் வெற்றியை நோக்கி அமைய வேண்டும். யுத்தகாலத்தின் நெருக்கடிகளை, யுத்தத்திற்கான பொறுப்புணர்வுடன் எதிர்கொள்ளவேண்டும்.

"நாம் யுத்தத்தை ஒழிப்பதற்காக வாதாடுபவர்கள். நாம் யுத்தத்தை விரும்பவில்லை, ஆனால் யுத்தத்தை யுத்தத்தின் மூலம் தான் ஒழிக்க முடியும். துப்பாக்கியை ஒழிக்க வேண்டுமானால் துப்பாக்கி ஏந்துவது அவசியம். யுத்தம்; மனிதர் தம்மை பரஸ்பரம் வதை செய்யும் இந்தப் பிசாசு; இறுதியில் மனித சமூதாயத்தின் முன்னேற்றத்தால் ஒழிக்கப்படும். இது ஒழிக்கப்படும் காலமும் வெகு தூரத்தில் இல்லை. ஆனால் இதை ஒழிக்கும் ஒரே ஒரு வழி யுத்தத்தை யுத்தத்தால் எதிர்ப்பது, எதிர்ப்புரட்சி யுத்தத்தைப் புரட்சி யுத்தத்தால் எதிர்ப்பது. தேசிய எதிர்ப்புரட்சி யுத்தத்தைத் தேசிய புரட்சி யுத்தத்தால் எதிர்ப்பது, எதிர்ப்புரட்சி வர்க்க யுத்தத்தை, வர்க்கப்புரட்சி யுத்தத்தால் எதிர்ப்பது ஆகும்."

இது மறைந்த சீனத்தலைவர் மா ஓ சேதுங் அவர்களின் அனுபவத்தில் கிடைத்த தத்துவக் கோட்பாடுகளாகும்.

யுத்தத்தை யுத்தத்தால் எதிர்ப்பது என்பது ஒரு சில ஆயுதந் தாங்கிய போராளிகளின் கடமை எனக்கருதப்படுவது சரியா?

இல்லை; இல்லவே இல்லை.

ஒரு யுத்தத்தில் ஆயுதப்படை பிரதான பாத்திரம் வகிக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் எம் மீது தொடுக்கப்பட்டிருக்கும் யுத்தம் தனியாக ஆயுதங்களால் மட்டும் மேற்கொள்ளப்படவில்லை. பொருளாதார

# தியாகிகளின் விடுதலைப் பயிரை சந்திரிகாவால் அழித்துவிடமுடியாது



தமிழீழம் என்பது கனவல்ல. அது ஒவ்வொரு தமிழரதும் இதயத்திலும் கோயிலாகக் குடிகொண்டுவிட்டது. சுதந்திரப் பயிரென்பது தண்ணீரால் வளர்வது அல்ல. அது விடுதலைக்கு உயிர் கொடுக்கும் தியாகிகளின் செந்நீரால் வளர்வது. அந்தப் பயிரை ஜனாதிபதி சந்திரிகாவினால் மட்டுமல்ல அவரது இராணுவத்தினாலும் அழித்துவிட முடியாது.

இவ்வாறு கனடாவிலிருந்து வெளிவரும் "உலகத் தமிழர்" பத்திரிகை தனது செய்திக் கண்ணோட்டமொன்றில் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தை மூவாயிரம் கோடி ரூபா பணத்தில் புனர் நிர்மாணம் செய்யப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா பெரிய ஆரவாரத்தோடு அறிவிப்பு செய்தார். அதற்காக வெள்நாட்டு இராஜ தந்திரிகளின் மாநாட்டை நடத்தி அவர்களிடம் நிதியுதவி கோரினார். அந்தக் கோரிக்கை அவர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் புனர் நிரிமாணம் என்ற பேச்சையே இப்போது காணோம்.

ஆண்டு ஒன்றுக்கு 5.000 கோடி பணம் போருக்கு செலவிழிக்கும் சிறீலங்கா அரசுக்கு நிதி உதவி செய்ய எந்த நாடும் முன்வராததில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

சந்திரிகா பல கோடி பெறுமதியான ஆயுதத் தளபாடங்களை வாங்கிக் குவித்து படைப்பலத்தைப் பெருக்கி விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து வட, கிழக்குமாகாணத்தில் சிங்கள பௌத்த மேலான்மை ஆட்சியை மீண்டும் நிலைநாட்டுவதையே இலக்காகக் கொண்டுள்ளார். இதனை நூற்றுக்கு தொண்ணூற்றி எட்டு விழுக்காடு சிங்களவரைக் கொண்ட இராணுவத்தினால் சாதித்து விடலாம் என்று சந்திரிகா பகல் கனவு காண்கிறார்.

சிங்கள, பௌத்த மேலாண்மையை தமிழ் மக்கள் 1977-ஆம் ஆண்டே நிராகரித்து விட்டார்கள். தமிழீழம் என்பது கனவல்ல, அது ஒவ்வொரு தமிழரதும் இதயத்திலும் கோயிலாகக் குடிகொண்டுவிட்டது. சுதந்திரப் பயிரென்பது தண்ணீரால் வளர்வது அல்ல. அது விடுதலைக்கு உயிர் கொடுக்கும் தியாகிகளின் செந்நீரால் வளர்வது. அந்தப் பயிரை ஜனாதிபதி சந்திரிகாவினால் மட்டுமல்ல அவரது இராணுவத்தினாலும் அழித்துவிட முடியாது. 'கெடுகுடி சொற்கேளாது' என்பார்கள். ஜனாதிபதி சந்திரிகா இந்தப் பழமொழிப்படி நடந்து கொள்கின்றார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீதியாக, கலாச்சார ரீதியாக எமது சமூக உறவுகளின் இருப்புத் தொடர்பாக யுத்தம் எம்மீது தன்கோரங்களை விரித்து விட்டிருக்கிறது, எனவே ஒடுக்கு முறை யுத்தத்தை விடுதலை யுத்தத்தால் முகம் கொடுப்பது என்பது மேற்கண்ட சகல முனைகளிலும் வீச்சுடன் எமது செயற்பாடுகள் விரிவடைவது என்பதாகும்.

ஆயுதப்படையினரின் தாக்குதல் ஏற்படுத்தும் பாதிப்புக்கு எவ்விதத்திலும் குறைவடையாத தாக்கங்ளைப் பொருளாதாரத்தடை எம்மீது திணித்துள்ளது. பாவனைப் பொருட்கள், மின்சாரம், எரிபொருள் என்பன எமது எல்லைக்குள் புகுந்து விடாமல் தடை செய்யப்படுவதன் மூலம் எமது அன்றாடத்தேவைகளின் நிறைவு சீர்குலைக்கப்படுவதுடன் அபரிதமான விலையேற்றங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆனால் அதற்கு மேலாக எமது உற்பத்திக்கான மூலப் பொருட்கள், விவசாய உள்ளீடுகள் தடை செய்யப்படுவதன் மூலம் எமது பொருளாதார அடித்தளமே ஆட்டம் காணும் நிலை ஏற்பட்டுள்ளது.

வெள்ளையரின் வருகைக்கு முன் எமது ஒவ்வொரு கிராமங்களுமே சுயதேவை நிறைவைக் கொண்டிருந்தவை என்பதை நாமறிவோம். விவசாய மூலப் பொருட்கள், உற்பத்திச் சாதனங்கள் என்பன அவ்வக் கிராமத்திலேயே உருவாக்கப்பட்டன (வட பகுதியில் பாவனையிலுள்ள உள்ளூரில் செய்யப்படும் தோட்ட மண்வெட்டி வேறு எந்த வெளிநாட்டு, ஸ்ரீலங்கா மண்வெட்டிகளையும் விடக்கூடுதலான பெறுபேற்றை குறைந்த சக்திச் செலவீட்டின் மூலம் தர வல்லது என்பது தற்சமயம் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது). ஆனால் அந்நியர் வருகையும் அவர்களின் ஆதிக்கமும் எமது சுயதேவை நிறைவுக் கிராமியக் கட்டுக் கோப்பை உடைத்து. எமது உற்பத்தி முறைகள் அனைத்தையுமே ஒரு சந்தையை நோக்கியதாக மாற்றியமைத்தது. இதன் காரணமாக உற்பத்தியின் சகல அம்சங்களையும் தீர்மானிக்கும் அல்லது மாற்றியமைக்கும் வலுபெரும் நகர வர்த்தகர்களின். தனி உரிமையாக்கப்பட்டது. இன்று சந்தையே சகலவற்றையும் வரையறுக்கும் தீர்க்கமான சக்தியாகி விட்டது.

கிராமியச் சமூகக் கட்டமைப்புச் சிதறிச் சின்னாபின்னமாகி விட்ட இன்றைய சூழ்நிலையில் மீண்டும் சுயதேவை நிறைவுக் கிராமிய அமைப்பு முறைக்கு செல்வது சாத்தியமில்லை. சமூக வளர்ச்சியை பின்பக்கமாக மாற்றுவது இயலாது. ஆனால் அக்கட்டமைப்பிலிருந்து நிறையக் கற்றுக் கொள்ளவும், அதிலிருந்து இன்றைய சமூக நிலைமைகளுக்கு ஏற்ப, அதாவது இன்றைய யுத்த சூழ்நிலைகளுக்கேற்ப எவ்வாறு எமது உற்பத்தி முறைகளையும், உற்பத்தி உறவுகளையும் மாற்றியமைப்பது என்பதையும் பரிசீலனை செய்வது பயனுள்ளதாகும்.



**நாம் யுத்தத்தை ஒழிப்பதற்காக வாதாடுபவர்கள். நாம் யுத்தத்தை விரும்பவில்லை, ஆனால் யுத்தத்தின் மூலம் தான் ஒழிக்க முடியும். துப்பாக்கியை ஒழிக்க வேண்டுமானால் துப்பாக்கி ஏந்துவது அவசியம். யுத்தம்; மனிதர் தம்மை பரஸ்பரம் வதை செய்யும் இந்தப் பிசாசு; இறுதியில் மனித சமூதாயத்தின் முன்னேற்றத்தால் ஒழிக்கப்படும். இது ஒழிக்கப்படும் காலமும் வெகு தூரத்தில் இல்லை. ஆனால் இதை ஒழிக்கும் ஒரே ஒரு வழி யுத்தத்தை யுத்தத்தால் எதிர்ப்பது.**

இன்று தமிழீழ மண்ணில் பாவனைப் பொருட்களினதோ, உற்பத்திப் பொருட்களினதோ விலைகளைத் தீர்மானிக்கும் சக்தியாக கொழும்புச் சந்தை இல்லை என்பது எமக்கு ஒரு சாதகமான விடயம்.

ஸ்ரீலங்காவுக்கான ஏற்றுமதி உற்பத்திகள் (மிளகாய், வெங்காயம், புகையிலை) எமது பொருளாதார வாழ்வில் பெரும் பங்கு வகிக்கும் நிலைமையும் இங்கு இல்லை. இதுவும் எமது உற்பத்தி முறையினை "தேவைக்கான உற்பத்தி" என்ற அளவுக்கு மாற்றியமைக்கும் ஒரு நல்ல நிலைமையாகும்.

எமது பாவனைப் பொருட்கள், உணவுப் பொருட்கள் இவற்றின் உற்பத்தி, விநியோகம் ஆகிய துறைகளில் பங்குகொள்ளும் சக்திகள் எவை? விவசாயிகள், தொழிலாளர்கள், புத்தி ஜீவிகள், சிறுமுதலாளிகள், வர்த்தகர்கள் ஆகியோரின் கூட்டு உழைப்பு இன்றி இந்நெருக்கடிகால உற்பத்திகளை முன்னெடுப்பது சாத்தியமில்லை.

ஒரு யுத்தகாலத்தில் ஒரு பிரதேசம் எமது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதும் யுத்த ரீதியில் எதிர்கால நலன்கள் கணக்கில் எடுக்கப்பட்டு இப்பிரதேசங்களிலிருந்து பின் வாங்குவதும் வேறு சில பிரதேசங்கள் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவதும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதாரண விஷயங்கள். எனவே எமது உற்பத்தி முறைமைகள் வகுக்கப்படும் போது இது கணக்கில் எடுக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய அம்சமாகும்.

எமது உற்பத்தி, யுத்தத்திற்கான உற்பத்தியாக இருக்க வேண்டிய அதே நேரத்தில் யுத்தகால உற்பத்தியாகவும் இருக்கவேண்டும். இது சொந்த நலன்களைத் தேசத்தின் நலன்களுக்கும் லாப நோக்கை மக்கள் நலனுக்கு கீழ்ப் படுத்துவதிலும் மட்டும்தான் சாத்தியமாக முடியும்.

இன்று விவசாய உள்ளீடுகள் கடுமையான முறையில் மட்டுப்படுத்தப் பட்டு விட்டன. இதனால் மாற்றுப் பசளைகளைத் தெரிவு செய்யவேண்டிய தேவை எழுந்துள்ளது. ஆனால் எமது கிராமிய சமூக அமைப்பு நில



விய காலம் இருந்தது போன்று எரு, இலை தழைகள் இடல், பட்டியடைத்தால் போன்ற வழி முறைகள் மூலம் எமது உற்பத்தியைப் பெருக்க முடியுமா? காலமாற்றம் இதற்கு எதிர்மறையான பதிலையே தருகின்றது. சிறு அளவில் விவசாய முயற்சிகள் செய்யப்பட்ட காலம் போய் இன்று ஏக்கர் கணக்கிலேயே உற்பத்தி முறை அமைந்து விட்டது.

இங்குதான் புத்திஜீவிகளினதும் சிறுமுதலாளிகளினதும் பங்களிப்புக்கான தேவை எழுகின்றது. இன்று வரை எமது புத்திஜீவிகள், ஆய்வாளர்கள் பெற்ற கல்வி எரு, குப்பை, இலை தழைகள் போன்றவற்றிலிருந்து தேவையான மூலப்பொருட்களைப் பிரித்தெடுத்து, அவற்றைத் தேவையான அளவில் கலந்து உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்யுமளவுக்கு வரவேயில்லை. இது எம்மீது திணிக்கப்பட்ட பசளைத் தடைக்கு விடுக்கப்படும் தீர்வாக அமையுமல்லவா?

இது ஆய்வாளர்களால் மட்டும் முடிந்த விஷயமல்ல. சிறுமுதலாளிகளின் மூலதன முதலீடு இன்றி இது நடைமுறைச்சாத்தியமில்லை. எனவே இவ் விருசாராரும் கை கோர்க்க வேண்டிய அவசியம் உண்டு. மாறாக இன்றுள்ள நிலைமையோ ஆய்வாளர்கள் இரசாயனப்பசளைகளைத் தேர்வு செய்து சிபார்சு செய்வதும், வர்த்தகர்கள் இவற்றை எப்பாடு பட்டேனும் இறக்குமதி செய்து விற்பதுமாகத் தமது கடமையைக் குறுக்கிக் கொண்டு விட்டனர். உண்மையாகவே இந்த மண்ணின் மேல் எழும் அடிப்படையான பற்றும் யுத்தத்தின் வெற்றிக்காக உழைக்கும் முனைப்பும் மட்டுமே இதைச் சாத்தியமாக்கும். சிறு அளவில் ஆரம்பிக்கப்பட்ட "சில முயற்சிகள்" கூட (உதாரணம் வேப்பம்புண்ணாக்கு உற்பத்தி) இடப்பெயர்வுடன் அற்றுப்போனது துரதிஷ்டவசமானதே. இன்னமும் எமது காட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் அமைந்திருப்பது இம் முயற்சிகளை சுலபமாக்க சில வழிகளைத் திறக்க முடியும்–

"உழைக்கும் கரங்களே
மனித வாழ்க்கையை
இயக்கும் கரங்கள்''
தமிழீழத் தேசியத்தலைவர்
திரு.வே.பிரபாகரன் அவர்கள்

இதே வேளையில் எமது விவசாய உற்பத்தி முறை ஒரு சமாதான காலத்திற்கான வழிமுறைகளிலேயே இன்னும் அமைந்துள்ளன. இது எமக்கும் பெரும் இழப்புகளையும், மீண்டும் தலையெடுக்க முடியாத நிலைமையையும் ஏற்படுத்தலாம். தனியாகவே ஒரு பயிரை மட்டும் உற்பத்தி செய்யும் ஒரு விவசாயி அதன் அறுவடைக்குச் சற்று முற்பட்ட காலத்தில் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படலாம் ஆனால் பன்முகப்படுத்தப்பட்ட உற்பத்தியில் ஈடுபடுவானாயிருந்தால் அவன் ஒன்றில்லா விடில் ஒன்று என்ற நிலைமையூடாகத் தன்னைச் சுதாரித்துக் கொள்ளமுடியும். இதிலும் கோதுமையின் வரவுக்குப் பின் உழுந்து, பயறு, குரக்கன், எள்ளு, ஒடியல் போன்றவற்றின் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது. இந்த மாற்றுப்பயிர்களுக்கான உற்பத்தியில் ஈடுபடுவது என்றோ ஒருநாள் விதிக்கப்படப்போகும் கோதுமைத் தடையை ஈடுசெய்யும் என்பதை நாம் கவனத்திலெடுக்க வேண்டும்.

இங்கே எழக்கூடிய பெரும் பிரச்சினை என்னவென்றால் வெங்காயம், மிளகாய் புகையிலை போன்ற பயிர்களில் கிடைக்கும் லாபம் இவற்றில் கிடைப்பதில்லை. அதிலும் மரவெள்ளி போன்றவை சில நாட்களிலேயே பழுதடையும் தன்மை வாய்ந்தவையாக இருப்பதால் இவற்றில் விலைகள் பெருமளவு உற்பத்தியாகும் காலங்களில் வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாததே.

இங்கு மீண்டும் சிறு முதலாளிகளின் பங்களிப்பு எழுகின்றது. இவ்வாறான பொருட்கள் பதப்படுத்தப்படவும், மா போன்ற வடிவங்களில் மாற்றியமைக்கப்பட்டு சந்தைக்கு அனுப்பும் முயற்சிகளும் நன்மை அளிப்பன மட்டுமல்ல தேசிய நலன்களுக்கு பயனுள்ள விளைவுகளை தோற்றுவிக்கும்.

(தொடரும்)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெளிவாகத் தெரியும் மாற்றங்கள்

இன்றைய உலகில் பரவலாகப் பேசப்படும் பிரச்சினைகளில் 'பெண்ணியம்' முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதுதான் இப்படித்தான் என்றில்லாமல் பலரும் பல விதமாவும் பெண்ணியக் கருத்துக்களை ஆராய முற்படுகின்றனர். இதேவேளை "பெண்களுக்கு என்ன பிரச்சினை? அவர்கள்தான் இன்று எவ்வளவோ வழிகளில் முன்னேறிவிட்டார்களே" எனக் கேள்வி கேட்பவர்களும் உள்ளனர். உண்மையில் பெண்கள் சார்ந்த கருத்துக்களில் இதுவரை சரியான பார்வையோ, முடிவோ ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பெண்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பிரச்சினை தீரும் எனச் சிலரும், பெண்கள் உயர்கல்வி கற்றால் பிரச்சினை தீரும் எனச் சிலரும், ஆண்களுக்குச் சமமாகப் பெண்களின் செயற்பாடுகள் அமைந்தால் அதுவே தீர்வைத் தரும் என இன்னொரு சிலருமாக பல்வேறுபட்ட கருத்துக்களைக் கூறி வருகின்றனர். முடிவில் இப்பிரச்சினையை யாருமே சரியான வழியில் அணுகி ஆராயவில்லையோ என்ற ஐயம்தான் எஞ்சி நிற்கின்றது. எப்படி இருப்பினும் நடைமுறை வாழ்வியலோடு தொடர்புபட்ட ஒரு பொதுவான சமூகப் பிரச்சினையாகவே பெண்ணியத்தை நாம் இனங்கான முடிகின்றது. எனவே இவ்விடயத்தில் ஒரு பக்கச் சார்பான பார்வைகள் எப்போதும் சரியான தீர்வை நிச்சயமாகத் தரமாட்டாது.

பரந்த உலகில் பல்வேறுபட்ட சமூக அமைப்புக்கள் விரிந்து காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் தனித்துவமானவை. தன்னகத்தே பல பட்டறிவுகளையும் அனுபவவாயிலாக வந்த புதுமைகளையும் கொண்டவை. மேற்குலக சமூகத்தைப் பொறுத்தவரை அதன் துரித வளர்ச்சிகளும், அனுபவங்களும், அதன் இன்றைய பிரச்சினைகளும், தேவைகளும் வித்தியாசமானவை. அது போலவே கீழைத்தேச சமூகங்களின் அபிவிருத்திப் பிரச்சினைகளும், காலத்தால் ஏற்பட்ட துன்ப துயரங்களும் தேவைகளும் வேறுபட்டவை. இம்மாறுபட்ட நிலைகளில் இருந்து பார்க்கும் போது மேற்குலகப் பெண்களின் வாழ்க்கை முறையும், குடும்ப அமைப்பும், திருமண உறவுகளும் சுதந்திரமானது என அவர்கள் கருதும் பாலியல் உறவுகளும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும், சமூக சீரழிவுகளும், வாழ்வின் நிம்மதியற்ற தன்மைகளும் எனப் பல் வேறுபட்டதாக அப் பெண்ணின் பிரச்சினைகளும், தேவைகளும் காணப்படுகின்றன. கீழைத்தேய பெண்களைப் பொறுத்தவரை இறுக்கமான் குடும்ப அமைப்பும், ஆரோக்கியமான பண்பாடும் பழக்கவழக்கங்களும் இருக்கின்ற அதேவேளை பழைமையான சமூக ஒழுங்கிற்கூடாக வந்த சில பிற்போக்குத்தனமான சம்பிரதாயங்களும், மூட நம்பிக்கைகளும் இவர்களின் பிரச்சினைக்குரிய காரணிகளாக உள்ளன. எனவே, பெண்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும், அவரவர் சார்ந்த சமூகத்தின் ஒழுங்கிற்கேற்கவே வெவ்வேறுபட்டவைகளாக இனங்காண முடியும்.

பெண்களுக்கான பொதுவான சில பிரச்சினைகளும் இல்லாமல் இல்லை. இதில் 'பாதுகாப்பு' பற்றிய பிரச்சினையே முதலிடத்தைப் பெறுவதாக உள்ளது. வயதுவராத சிறுமிகள் தொடக்கம், குழந்தைகளைப் பெற்றெடுத்த தாய்மார் வரை தமது தேவைகள் பொருட்டு வெளியிடங்களில் சென்றுவரும் பொழுதிலோ, தனித்திருக்க நேரிடும் சந்தர்ப்பங்களிலோ பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. இப்பிரச்சினைகள் இருபாலருக்குமே பொதுவானதாக இருக்கின்ற போதிலும் இதனால் ஏற்படும் உடல், உள ரீதியான தாக்கங்கள் பெண்களையே பெரிதும் பாதிக்கின்றன. இதன் விளைவாகத்தான் பெண்கள் யாரிலும் தங்கி நிற்கவேண்டிய கட்டாய தேவை ஏற்படுவதோடு தனித்துத் தீர்மானம் எடுக்கும் ஆற்றலும் முடக்கப்படுகின்றது.

காலத்திற்குக் காலம் பெண் ஒடுக்குமுறை வடிவங்கள் மாறி வந்திருக்கின்றனவே தவிர முற்றாகத் தீர்ந்தபாடில்லை. இதற்கான காரணம் என்னவெனில் மாறிவரும் சமூகத் தேவைகளுக்கேற்ப புதிய ஒழுங்குகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் எம்மத்தியில் ஏற்படாததே ஆகும். சாத்திரம், சம்பிரதாயம், சடங்குகள், மூடநம்பிக்கைகள் என்பவற்றால் கட்டுண்டு கிடக்கும் கீழைத்தேய சமூகம் புதிய சமூக ஒழுங்குகளை இலகுவில் ஏற்றுக்கொள்வது மிகக் கடிமானதொரு காரியமாகவே உள்ளது. அதற்காகப் புதிய ஒழுங்குகள் உருவாகாமல் இருக்கமாட்டாது. இங்குதான் ஒரே சமூகத்துள் இருவேறுபட்ட எண்ணக்கருத்துகளிடையே பலமான முரண்பாடுகள் ஏற்படுகின்றன. ஆகவே பெண்ணியம் என்பது கருத்தியல் ரீதியான தெளிவை ஏற்படுத்தும் போராட்டமாகவே உள்ளது.

ஆணாதிக்கவாதிகளின் மனதில் பெண்கள் சார்ந்த விடயத்தில் ஆழமானதொரு கருத்து மாற்றம் ஏற்பட வேண்டும் எனப்படுகின்றபோது ஆணாதிக்கவாதிகள் என்ற சொல்லுக்கான சரியான விளக்கமும் தேவையாகவுள்ளது. சமூகத்தின் புதிய தேவைகளைக் கருத்தில் எடுக்காது பழைய ஒழுங்குகளே சரியெனவும், அவை சாகாவரம் பெற்றவையாகப் புதிய உலகில் வாழ வேண்டும் எனவும் அழுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பிற்போக்குவாதிகளே. அதேபோலவே பெண்ணியம் சார்ந்த விடயத்தில் ஆண்களே ஆளுமை உள்ளரார்கள் என்ற கருத்தில் ஊறிப்போய் பெண்களின் இயல்பான ஆளுமைகளைக் கருத்தில் எடுக்கத் தயாராக இல்லாதவர்கள் ஆண்களோ, பெண்களோ யாராக இருந்தாலும் அவர்கள் ஆணாதிக்கவாதிகளே. எனவே,



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களின் மனதில் மாற்றம் ஏற்படும் பொழுதுதான் பெண் விடுதலையும் சாத்தியமாகமுடியும்.

மொத்தத்தில் மனித ஆளுமைகள் மதிக்கப்படவேண்டியவை. ஒவ்வொரு தனிமனிதனும் சகல ஆற்றல்களும் சரிவரப் பெற்றவனாக இருக்கமுடியாது. எனினும் எல்லோருக்கும் ஏதோ ஒரு ஆற்றல் நிச்சயமாக இருக்கும். ஒருவரால் நன்றாகப் பாட முடியும். மற்றொருவரால் நன்றாக ஓடமுடியும். பாடமுடியாதவரை பாடக்கூடியவர் முட்டாள் என்றோ, ஓடமுடியாதவர் ஓடக்கூடியவர் மக்கு என்றோ கூறமுடியாது. இதுபோலவே ஆணுக்கும் பெண்ணுக்கும் இயல்புகள், இயற்கையாய் அமைந்த ஆற்றல்கள் வேறுபட்டவை. அவரவர்கள் தத்தமது இயல்பு நிலை மாறாதிருக்க வேண்டும். ஒருவரது சுயத்தைப் பறித்து அல்லது மழுங்கடித்து அவரின் மேல் தனது கருத்துக்களைத் திணித்து ஆதிக்கம் செலுத்த முயலும்போதுதான் பிரச்சினைகள் உருவாகின்றன. இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின் இருபாலருக்கும் கருத்தியல் ரீதியான விழிப்புணர்வும், பரஸ்பர புரிந்துணர்வுமே தேவையாக உள்ளன. இருபாலரின் ஆளுமைகளும் சமமாக மதிக்கப்படும் பட்சத்தில்தான் சமூகத்தின் தேவைகளும் சரிவரப் பகிர்ந்து கொள்ள முடியும்.

முதலாளிய உலகத்தின் இன்றைய போக்குகளும், பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் வலுவடையக் காரணமாக உள்ளன. பொருண்மிய ரீதியில் முதலாளியம் பெண்களைத் தமது உற்பத்தி சாதனங்களில் ஒன்றாகவே கணிக்கின்றது. பெண்களின் உழைப்பைச் சுரண்டி அவர்களின் ஊதியத்தைக் குடிக்கின்றது. பெண்ணோடு தொடர்பில்லாத உற்பத்திப் பொருட்களுக்கான விளம்பரங்களில் எல்லாம் பெண்களை அரை நிர்வாண அழகிகளாக்கி தமது பொருட்களுக்கான கவர்ச்சிகளைத் தூண்டுகின்றது. கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி உள்ளூர் அழகிப் போட்டிகள்வரை நடத்தப்படுகின்றது. இதனால் ஆரோக்கியமான சிந்தனையோட்டங்கள் கொண்ட இளைய தலைமுறையினரின் கவனங்கள் திசைதிருப்பப்படுகின்றனவே தவிர எவ்வித முன்னேற்றத்தையுமே தரப்போவதில்லை. அதுமட்டுமல்லாமல் பெண் ஒரு போதைப் பொருளாக உருவகிக்கப்படுகின்றாள். அண்மையில் முன்னாள் உலக அழகி ஒருவர் போதைப் பொருள் ஒழிப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டதாகச் செய்திகள் வெளியாகின. ஒரு போதையை ஒழிப்பதற்காக இன்னொரு போதைதான் ஊட்டப்படுகின்றது. அழகுணர்ச்சி என்பது அனைவருக்கும் பொதுவானதுதான். ஆயினும் அழகுபடுத்துவது என்பது அவரவர் இயல்புக்கு ஏற்றதாக இருக்கும்போதுதான் இரசிக்கக்கூடியதாக இருக்கமுடியும். அது அளவுக்கு அதிகமாகி கவர்ச்சியாகும் போது வெறும் மயக்கம் தரும் போதையாகத்தான் இருக்கும். முதலாளிய உலகைப் பொறுத்தவரை இளைய தலைமுறையினரை போதைக்குள் மூழ்கடிப்பதே அவர்களுக்கு இலாபகரமானது. தற்போது ஏற்பட்டுள்ள ஆரோக்கியமான ஒரு மாற்றம் என்னவெனில் உலகின் பல திசைகளில் இருந்தும் பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் பரவலாக எழத்தொடங்கியிருப்பதுதான். உலகப் போர்களில் ஈடுபட்ட படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பல அபலைப் பெண்களின் இத்துப்போன வாழ்க்கையைப் பற்றிய உண்மைகள் வெளிக்கொணரப் பட்டுள்ளன. அண்மையில் பீஜிங்கில் நடைபெற்ற மகளிர் மகாநாட்டில் கீழைத்தேயப் பெண்களின் வாழ்க்கை முறை குடும்ப அமைப்புக்கள், ஆரோக்கியமானவை எனவும் மேற்குலகத்தவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் பின்பற்றவும் விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவேபெண்ணியம் முதலாளிய உலகுக்குத் தலையிடி கொடுக்கும் பல சங்கதிகளில் முக்கியமானதொன்றாக மாறிவருகின்றது.

எது எப்படியோ உலகெங்கும் காணப்படும் பெண்ணியக் கருத்துக்களில் இருந்த எமது தேசம் வேறுபட்ட வளர்ச்சியைக் கொண்டுள்ளது. மிகவும் பிற்போக்கான கருத்துக்கள் நிரம்பி வழியும் சமூக அமைப்பில் இருந்து பல அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமைதான் நிகழ்கால உண்மைகள். தேச விடுதலை என்ற உணர்வோடு சமூக விடுதலைக் கருத்துக்கள் இரண்டறக் கலந்து காணப்படுவதும் சரியான வழிகாட்டலுமே முதலாளியத்தின் கருத்துக்கள் இங்கு படிந்துவிடாமல் அரண் செய்து நிற்கும் காரணிகளாகும். ஒரு விடுதலை அமைப்பு என்ற ரீதியிலும், கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் எவ்வேளையிலும் வலியுறுத்தும் தலைமையின் நேரடி நெறிப்படுத்தலும், அவ்வமைப்பில் உள்ள பெண்களின் ஆற்றல்கள் வளரவும், ஆளுமைகள் வெளிப்படவும் களம் அமைத்துக் கொடுத்தன. இச் செயற்பாடானது அமைப்பிற்கு வெளியே உள்ள பெண்களிற்கும் பலத்த தூண்டுதலாக உள்ளது. விடுதலைப் போரை முன்னெடுப்பதால் முழு மக்களுமே பல இழப்புக்களையும் அசௌகரியங்களையும் சந்திப்பது தவிர்க்க முடியாதது. இச் சூழ்நிலைக்கேற்ப பெண்கள் பல கடமைகளைத் தாமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நிலை உருவாகின்றது. போராட்ட வாழ்வின்சுமை அனைவரையுமே உலுக்குவதால் பழைமைவாதக் கருத்துக்களில் கட்டுண்டு கிடப்போரும் தவிர்க்க முடியாமல் புதிய மாற்றங்களுக்கு உட்படுகின்றனர். சமூகச் சூழலின்அழுத்தம் காரணமாக மாற்றங்களை இயல்பானதாக ஜீரணித்துக் கொள்கின்றனர். உண்மையில் உலகெங்கும் காணப்படும் பெண் இயக்கங்களை விடவும் பெண்ணியக் கருத்துக்களை தமிழீழத்தில், ஒரு ஆரோக்கியமான பெண்ணியக் கருத்து மாற்றம் ஏற்பட்டுவருவதும் விழிப்புணர்வு தூண்டப்படுவதும் மிகவும் பெருமைப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும்.

ஒட்டுமொத்தத்தில் பார்க்கும் போது சமூகங்களின் தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் அவரவர் சூழலுக்கும் ஏற்பவே தீர்வுகளைப் பற்றி ஆராய முற்படவேண்டியது அவசியமானதாகும். எமது தமிழீழத்தைப் பொறுத்தவரை மாறிவரும் சூழலுக்கேற்ப பெண்கள் குடும்ப, சமூகப் பொறுப்புக்களை ஏற்றுத் தமது ஆளுமைகளை வெளிப்படுத்தத் தொடங்கி விட்டனர். எனவே இங்கு மாற்றங்கள் ஏற்படத்தொடங்கி விட்டன. மனங்களும் அதனை ஏற்கத் தயாராகி விட்டன. சமூகமாற்றம் என்பது சட்டென மலர்ந்து மணம்வீசும் என யாரும் எதிர்பார்க்கமுடியாது. ஒருகால இடைவெளிக்கூடாகவே மாற்றங்கள் ஏற்படும். அப்போதுதான் சமூக நடைமுறை வாழ்வியக்கத்தோடு இணைந்து வரமுடியும். அந்த வகையில் தமிழீழத்தைப் பொறுத்தவரை பெண்ணியம் தொடர்பான கருத்தியல் மாற்றங்கள் தெளிவாகத் தெரிகின்றன. ஆண், பெண் இருவருக்குமிடையிலான அன்புறவும் ஆழமான புரிந்துணர்வுமே பெண்களின் பிரச்சினைகள் தீர்வதற்கு வழிவகுக்கும் என்பதே யதார்த்தம்.

– அரூபா.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கணக்கு தீர்க்கும் காலம்

**"விடுதலையை நாடுவோர் என்றோ அதனை அடைந்தே தீருவர் என்பதை இன்று எமக்கு வேண்டும் பூரண விடுதலை என அறைகூவும் சயர் மக்கள் உலகிற்கு நிரூபித்து விட்டனர்."**

உலகிலே இன்னமும் தான் தோன்றித்தனமான சர்வாதிகாரப் போக்கில் ஆளுவோரில் மத்திய ஆபிரிக்காவின் பிரதான நாடான சயரின் ஜனாதிபதி மார்சல்மொபுட்டு செசிசேக்கோவிற்கு எப்போதுமே தனி இடம் உண்டு. 1965 – ம் ஆண்டிலிருந்து 31 ஆண்டுகளுக்கும் மேலாக நீளும் அவரது ஆட்சியின் விளைவு இயற்கை வளமிக்க சயர் நாடு வறுமைமிக்க நாடாக மாறியது தான். ஆட்சி, கட்சி, இராணுவம் எல்லாமே சயரில் மொட்புதான். 31. 7 மில்லியன் மக்களுக்குச் சேரவேண்டிய சயரின் தேசிய வருமானத்தையே தனது சொந்த வருமானமாக மொபுட்டு கருதியதால் உலகில் மிகப் பெரும் செல்வந்தர்களுள் அவரும் ஒருவர் என்கிற சிறப்புத் தகுதியும் அவருக்குண்டு. பலமிக்க இராணுவமொன்றை கட்டி எழுப்பினாலும் அது ஒற்றுமைப்படாமல் இனக்குழு அடிப்படையில் பிளவுபட்டே இருக்கும்படி பார்த்துக்கொள்ளும் தந்திரப் புத்தியும் அவருக்கேயுரியது. இஸ்ரேலியரால் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட உயர் பாதுகாப்புப் படைப் பிரிவு அவரது பாதுகாப்புக்கென விஷேடமாக உள்ளது. காலத்துக்குக்காலம் அமெரிக்க, பிரான்சிய, இஸ்ரேலிய, தென்னாபிரிக்க உதவிகளைப் பெற்று, மேலாண்மை நாடுகளின் நேரடி கவனிப்பில் இருந்தவர், இப்படிப்பட்ட மொபுட்டுவிற்கு அவரது இறுதிக்காத்தில் அபூர்வமான புற்று நோய் வகையொன்று தாக்கி நோய்ப் படுக்கையில் தள்ளிய நிலையில் வரலாறு அவருக்கு வழங்கவிருக்கும் தண்டனை என்ன என்பதே இன்று எழுந்துள்ளவினாவாகும்.

இப்படிப்பட்ட "தகுதிகளை" யுடைய மொபுட்டுவிற்கும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் என்ன சம்பந்தம் இருக்கமுடியும் என வாசகர்கள் நினைக்கக்கூடும். இருவருமே தாம் நடத்தும் அழிவுப் போருக்காக "கூலிக்கு மாரடிக்கும்" கூலிப்படையின் உதவியை பெற்றிருப்பதுதான் இந்த ஒற்றுமை. போராளிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தமது மக்கள் எனக்கூறிக்கொள்வோர் மீதே மிக மோசமான குண்டு வீச்சுக்களை மொபுட்டு இப்போது நடத்தி வருகின்றார். அம்மையாரைப் போலவே மொபுட்டுவும் உக்ரேன் நாட்டிலிருந்து எம்.ஐ.24 தாக்குதல் உலங்கு வானூர்திகளை மட்டுமல்ல அங்கு வேலையற்றிருக்கும் விமானிகளையும் பணத்திற்கு பெற்று போரை நடத்துகின்றார். உலகிலேயே கூலிப்படைகளை பயன்படுத்துவதிலும் மொபுட்டுவிற்கு தனியிடம் தான்.

மிக நீண்டகாலமாகவே மக்களை அடக்கி கொடுமைப்படுத்த கூலிப்படைகளை பயன்படுத்தி முன்னர் வெற்றியும் கண்டவர் மொபுட்டு மிக மோசமான பழைய கூலிப்படையாளர் வரிசையிலே பிரபலமான பெல்ஜிய நாட்டவரான "கிறிஸ்ரியன் ரவேனியர்" (Christian Tavernier) தலைமையில் பிரான்சிய, பெல்ஜிய நாட்டவரைக் கொண்ட கூலிப்படை இப்போதும் மொபுட்டுவிடமுண்டு. இப்போது மேலதிகமாக 200–க்கு மேற்பட்ட சேர்பிய கூலிப்படையினரையும் மொபுட்டு வரவழைத்திருப்பதாக தெரிகிறது. இச்சேர்பியர்கள் முன்னர் குறேசியாவின் கிறைஜினா பகுதியில் குரேசியரோடு போரிட்டு அங்கிருந்து விரட்டப்பட்டவராவார்கள். ஆனால் என்னதான் மொபுட்டு தான் ஈட்டிய செல்வத்தை செலவழித்து கூலிப்படைகளின் உதவியை நாடினாலும் கூலிப்படைகளைப் பயன்படுத்தி மக்களை அச்சுறுத்தும் காலம் மலையேறி விட்டது என்றே ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**மொபுட்டுவிற்கும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் என்ன சம்பந்தம் இருக்கமுடியும் என வாசகர்கள் நினைக்கக்கூடும். இருவருமே தாம் தாம் நடத்தும் அழிவுப் போருக்காக "கூலிக்கு மாரடிக்கும்" கூலிப்படையின் உதவியைபெற்றிருப்பது தான் இந்த ஒற்றுமை.**

21–ம் நூற்றாண்டை உலகம் அண்மிக்கும் இவ்வேளையிலேயே ஆபிரிக்காக் கண்டத்தில் தீர்க்கப்படவேண்டிய பழைய கணக்குகள் பலவற்றைத் தீர்த்துவிடவே வரலாறு முயல்கின்றது. ஏற்கனவே நமீபியா, தென்னாபிரிக்கா, அங்கோலா, மொசாம்பிக் என பல நாடுகளின் முடிச்சுக்களை அவிழ்த்து விட்ட வரலாறு இப்போது மத்திய, கிழக்காபிரிக்கப் பகுதிகளில் கவனத்தைச் செலுத்துகின்றது. எரித்திரிய விடுதலை, எத்தியோப்பிய மாற்றம் றுவாண்டாவின் விடிவு எனத் தொடங்கிய மாற்றத்தின் தொடர்ச்சியே இப்போது சயரிலும் எதிரொலிக்கின்றது. இதேவேளை அருகிலுள்ள சூடானின் தென்பகுதியிலும் நீண்டகால பின்னடைவுகள் பிளவுகளின் பின்னர் Spla எனப்படும் சூடானின் மக்கள் விடுதலை இராணுவம் வெற்றி முகம் நோக்கி நகர்கின்றது. இவையெல்லாம் முன்னர் ஏகாதிபத்தியவாதிகள் விதைத்த வினைகள், வரையறுத்த எல்லைகள் என்பவற்றின் விபரீதங்களை அம்பலப்படுத்துவதோடு புதிய ஒழுங்கில் அதே மேலாண்மை நாடுகள் மேற்கொள்ளும் புதிய உறவுகளின் புதுமைகளையும் விளக்கி நிற்கின்றன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏனெனில் மிக நீண்டகால காத்திருப்பின் பின் காலம் கனிந்த நிலையில் சயரில் விடுதலை அணி வீறுடன் முன்னேறுகின்றது. இன்னும் எத்தனை காலம்தான் மொபுட்டு எம்மை ஏய்ப்பார் என வினா எழுப்பும் மக்கள், போராளிகளை வரவேற்க தயாராகின்றனர். மொபுட்டுவின் இராணுவமோ, கூலிப்படைகளைவிட மோசமான கொலைப்படையாகி கொள்ளையடிப்பதிலும் தப்பியோடுவதிலுமே கவனமாக இருக்கின்றது. இப்போதுள்ள தகவல்களின்படி சயரில் பெரும் பகுதியை விடுதலை அணியான Alliance Of Democratic Forces For The Liberation of Congo Zair எனப்படும் கொங்கோ சயரின் விடுதலைக்கான சனநாயக சக்திகளின் கூட்டணிவசம் வந்துவிட்டதாக தெரிகின்றது. சயரின் தலைநகரான கின்சாசாவிற்கு அடுத்த பெரிய நகரான லுமும்பாசி இப்போது போராளிகளின் கையில். சயரின் கிழக்குப் பகுதியிலுள்ள மூன்றாவது பெரிய நகரான கீசிங்கானியும் போராளிகள் வசமாவது தவிர்க்க முடியாதது என்றே செய்தியாளர்கள் கூறுகின்றனர். இவ்வாறாக செம்பு, கோபால்ட் கனியவளம் மிக்க கிழக்குப் பகுதி முற்றாகவே விடுதலை அணியிடம் வந்துவிட்டது சயரின் போராட்டம். தலை முற்றாக வழிக்கப்பட்ட போராளிகள் அணியாக செல்லும் ஒளிப்படங்களே எங்கும் வெளியாகின்றன. போராட்ட அணியின் தலைவரான லோறன்ஸ் கபிலா (Laurent Kabilla) வின் பெயர் உலகிற்குப் பிரபலமாகிவிட்டது.

ஆனால் கபிலா இன்று நேற்று முளைத்த தலைவரல்ல. அவரின் வரலாறு கொங்கோ சயரின் விடுதலை வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. சயரின் சிக்கலை அறிவதற்கு நாம் ஒரு கணம் பின் நோக்கிப் பயணிக்க வேண்டும். சயர் பெல்ஜியஸ் கொங்கோவாக இருந்த காலகட்டத்திற்குச் செல்ல வேண்டும். 15–ம் நூற்றாண்டளவில் இப்பகுதியில் போர்த்துக்கேயர் காலடி பட்ட போதும் 19–ம் நூற்றாண்டில் பெல்ஜியம் இப்பகுதியை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து 1980ம் ஆண்டு Congofree State என்கிற பெயரில் தன்னோடு இணைத்துக் கொண்டது. 1960–ல் கடைசியாக பெல்ஜியத்திலிருந்து சுதந்திரத்தைப் பெற்றபோது சுதந்திரத்திற்காக முன்னின்று உழைத்தவரும் ஆபிரிக்க முற்போக்கு தலைவர்களில் முதல் முறையை தொடங்கிவைத்தவருமான பட்ரிஸ்லுமும்பா பிரதம மந்திரியானார் ஆனால் மத்திய ஆபிரிக்காவில் இத்தகைய தலைமை தோன்ற விரும்பாத அமெரிக்க மேலாண்மை சி.ஐ.ஏக்கு ஊடாக பல திருவிளையாடல்களை நடத்தி பல்வேறு இனக்குழு மோதல்களை தூண்டி மொபுட்டுவை தூண்டில்போட்டு பிடித்தது. 1961–ம் ஆண்டில் மொபுட்டு லும்பாவை கொலை செய்கின்றார். அதைத்த தொடர்ந்து கொங்கோவில் தோற்றிய குழப்பப் பிளவு நிலையை அடுத்து ஐ.நா. சர்வதேசப்படையொன்றை 1964–வரை அங்கு நிறுத்தியது. பின்னர் ஒருவாறாக 1965–ம் ஆண்டு மொபுட்டு சயரின் தலைமைப் பதவியைதானே சுவீகரித்துக் கொள்கின்றார். அன்றிலிருந்து அவரது நாசகார; ஆபிரிக்காக் கண்டத்தின்சாபக்கேடான ஆட்சி வரலாறு தொடர்கிறது. அன்றிலிருந்து கபிலாவும் தனது எதிர்ப்பைத் தொடர்ந்தார்.

> **இன்னும் எத்தனை காலம்தான் மொபுட்டு எம்மை ஏய்ப்பார் என வினா எழுப்பும் மக்கள், போராளிகளை வரவேற்க தயாராகின்றனர். மொபுட்டுவின் இராணுவமோ, கூலிப்படைகளைவிட மோசமான கொலைப்படையாகி கொள்ளையடிப்பதிலும் தப்பியோடுவதிலுமே கவனமாக இருக்கின்றது**

அன்று அங்கோலா தொட்டு இன்று றுவாண்டா வரை நடைபெற்ற அழிவு வேலைகட்கு சயர் தளமாக பயன் படுத்தப்பட்டது. அங்கோலாவில் மிக மோசமான உள்நாட்டுப் போருக்கு காரணமான சவிம்பியின் யனிற்றா இயக்கத்திற்கு மேற்கத்தய உதவிகளை வழங்கும் ஊடகமாக அண்மையில் பத்து இலட்சம் ருட்சி இனமக்கள் படுகொலைக்கு காரணமாக ருவாண்டில் கூட்பு இன இராணுவ ஆட்சிக்குப் பக்கபலமான தனது நாட்டின் அற்புதமான மிக்க, பெறுமதி மிக்க கனிய வளங்களைப் பல்தேசிய வணிக நிறுவனங்களின் வேட்டைக்காடாக மாற்றியவராக செயற்பட்ட மொபுட்டுவின் கதை மிக நீண்டது. இவற்றிற்கு வெகுமதியாக மேலை நாடுகளின் செல்லப்பிள்ளையாக மொசாத், சி.ஐ.ஏ தென்னாபிரிக்க உளவுத்துறை ஆகியவற்றின் உதவியோடு ஆபிரிக்காவையே அலங்கோலப்படுத்தினார் மொபுட்டு.

ஆனால் இன்றைய நிலையென்ன? அன்று மொபுட்டுவால் கொல்லப்பட்ட லும்பாவின் தோழன் கடும் இடதுசாரி போக்கில் ஈடுபாடுள்ளவர் என முன்னர் கருதப்பட்ட கபிலாவே இன்று சயரின் விடிவின் நாயகன், அவருக்கு ஆபிரிக்காவின் குறிப்பாக மத்தியகிழக்காபிரிக்காவின் புதிய தலைமுறை துணை நிற்கினது. றுவாண்டா பக்கபலமாக உள்ளது. உகண்டாவும் உதவுகிறது. எப்போதும் ஆபிரிக்காவை தனது செல்வாக்குள்ள பகுதியாக கனவு காணும் பிரான்சோ விலகி நிற்கின்றது. விடுதலை அணியோடு தொடர்பு வைக்க முயலும் அமெரிக்காவின் தந்திரபுத்தி கண்டு அதிர்ச்சியடைகிறது. 1970–களில் படை அனுப்பி தனது நண்பரை காப்பாற்றிய மொரக்கோ மன்னரோ மொபுட்டுவை மறந்துவிட்டார். எல்லாவற்றையும்விட அமெரிக்காவோ வழமையாக கடைசி நேரத்தில் தவிர்க்க முடியாத போது சரிவாதிகாரர்களை கைகழுவி விடும் பணியில் மொபுட்டுவை பதவி விலகி நாட்டைவிட்டு வெளியேறுமாறு அறிவுரை இறுதியாக கூறிவிட்டது. இனிவரும் நாட்களில் சயரில் பெரும் மாற்றங்கள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவை எல்லாம் மாற்றமுறும் புதிய உலகின் வியப்பூட்டும் புதிய கோலங்கள், மாறாதது எதுவுமில்லை என்பதை உணர்த்தும் எமக்கான பாடங்கள் எனவே விடுதலையை நாடுவோர் என்றோ அதனை அடைந்தே தீருவர் என்பதை இன்று "எமக்கு வேண்டும் பூரண விடுதலை" என அறை கூவும் சயர் மக்கள் உலகிற்கு நிரூபித்துவிட்டனர்.

***

**வே. பாலகுமாரன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓவியக் கலை



கட்புலனாகும் பொருட்களையும், கருத்திற்படும் எண்ணங்களையும் கவினுறத்தீட்டும் கலையே ஓவியக் கலையாகும். இக் கலை மனித நாகரீகம் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்தின் முன்பே, மனிதன் குகையில் வாழ்ந்த காலத்திலேயே, தோன்றி விட்டது.

குகைகளில் அவன் வரைந்த ஓவியங்கள் இதற்குச் சான்றாகும்.

சிந்துவெளி நாகரீக காலத்தில் இக் கலை சிறந்த நிலையில் வளர்ந்திருந்ததை அங்கு அகழ்ந்தெடுக்கப்பெற்ற பொருட்களில் காணப்பெறும் ஓவியங்கள் காட்டுகின்றன என்பர்.

கண்ணிற்பட்டவற்றை கோடுகளால் தொடக்கத்தில் புலப்படுத்திய மனிதன் காலப் போக்கில் கருத்திற்பட்டவற்றையும் கவினுறத் தீட்டக் கற்றுக் கொண்டான். அவற்றை அழகு படுத்த வண்ணங்களையும் கண்டுபயன்படுத்தினான்.

பழந்தமிழ் நூல்கள் ஓவியம் பற்றிக் கூறுகின்றன. ஓவு, ஓலம், ஓவியம், படம், படாம், சித்திரம், வட்டிகைச் செய்தி எனப் பல பெயர்களால் இக் கலை அழைக்கப்பெற்றது. இதனைத் தீட்டுபவர் ஓவ மாக்கள், ஓவியமாக்கள் ஓவியப் புலவன், ஓவியர், கண்ணுள் வினைஞர் எனப்பலவாறு அழைக்கப் பெற்றனர்.

குகைகளில் முதலில் எழுதப் பெற்ற புனையா ஓவியங்கள் பின்னர் ஓவியங்களாக மலர்ந்த பொழுது, அரண்மனை மண்டபங்களிலும், வளமனை மாளிகைகளிலும், ஆடல் அரங்குகளிலும், கோவிற் சுவர்களிலும், ஆடையணிகளிலும், சேலைத் திரைகளிலும், தந்தங்களிலும் வரையப்பெற்றன.

வண்ணம் தீட்டும் கோல் துலிகை, தூரிகை, எனவும்; வண்ணம் குழைக்கும் பலகை வட்டிகைப் பலகை எனவும் வழங்கப்பெற்றன.


மக்கள் போலவே மன்னரும் இக் கலையைப் போற்றினர். பல்லவ மன்னர் முதலாம் மகேந்திர வர்மன் சித்திரக் காரப் புலி எனப் புகழ் பெற்றான். பல்லவர் கால ஓவியங்களுக்கு எடுத்துக் காட்டாகப் பனைமலைக் கோவிலிலும், திருமலைக் கோவிலிலும், மாமல்லபுரக் குடைவரைக் கோவிலிலும், மாமண்டூர்க் கோவிலிலும், காஞ்சி கைலாச நாதர் கோவிலிலும் தீட்டப் பெற்றவற்றைக் கூறுவர். பல்வர் கால ஓவியங்களில் தெய்வ உருவங்கள் சிறப்பிடம் பெற்றன.

இவர் போலவே பாண்டியரும் ஓவியக்கலையை வளர்த்துப் பெருமைப் பட்டனர். இவர் கால ஓவியங்களில் இயற்கையும், மனிதனும் தெய்வமும் போற்றப்பட்டன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரர் காலத்தில் இக்கலை போற்றப் பெற்றதை திருவள்ளரா திருநந்திக்கரைக் குகை கோவில் ஓவியங்கள் காட்டுகின் றன.

சோழர் கால ஓவியங்கள் புராணக் காட்சிகளை மிகுதியாகக் கொண்டி ருந்த பொழுதும் ஆடல் மகளிர், அவர்தம் அணிமணிகள், இசைக்கருவி கள் போன்றவற்றையும் சித்தரித்துக் காட்டுகின்றன.

இக்கலை காலமாற்றத்துக்கேற்ப வளர்க்கப் பெற்று வருகின்றது. மேலை நாட்டுத் தொடர்பு ஏற்பட்டுள்ள இக் காலத்தில் ஓவியக்கலையிலும் காலத் தின் கோலத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இக்கலையானது இன்று கல்லூரி களிலும் போற்றப் பெறுகின்றது. வரை கோட்டுச் சித்திரங்களும் வண்ண ஓவியங்களும் இன்று சிறப்பிடம் பெறு கின்றன. இயற்கைக் காட்சிகளைக் காட்டும் ஓவியம், இயற்கைப் பொருட் களைச் சித்தரிக்கும் ஓவியம், கருத்து வெளிப்பாட்டு ஓவியம், உயிரோவியம், அணியோவியம் எனப் பலவகை ஓவி யங்கள் உண்டு. இவற்றிற்கு நீர் வண்ண மும், நெய் வண்ணமும் பயன்படுத்தப் படுகின்றன.

ஓவியங்கள் மூலம் எண்ணங்களை யும் உணர்ச்சிகளையும் புலப்படுத்தும் ஓவியன் தன் ஆளுமையையும் அவற் றுடன் வெளிப்படுத்தும் பொழுது அவனுடைய தனித்தன்மை மிளிர்கின் றது.

— ரஜனி

# புதுமை படைப்போம் தோழா!

என் இனப் போராளிகளே!

உலகின் நாகரீகத்தின் முன்னோடியாக வாழ்ந்து வந்த தமிழினம் இன்று உலக நாடுகளுக்கெல்லாம் அடிமையினமாக்கப்பட்டு சொந்த நாட்டிலும் அடிமையாக வாழும் நிலைமையே நம் இனம் பெற்றுள்ளது. இந்த இழிநிலையை போக்க தமிழனுக்கென்று தனிநாடு ஏற்பட வேண் டும். 3 கோடி தமிழ் மக்களைக் கொண்ட நம் இனம் ஒரு மாநிலத்தைக்கூட தனக்கு சொந்தம் கொண்டாட உரிமை இல்லாமல் தமிழ் இனம் இருந்து வருகிறது. என் விலங்கிட திறமைகளையும், பெருமையையும் பெற்றி ருக்கும் நம் இனம் அழிவுண்டுபோவதை தடுக்க தனிநாடு அவசியம்.

உலகில் முதல் தமிழ்நாட்டை அமைக்க போராடும் அரிய வாய்ப்பு உங்களுக்கு கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பு நம் முன்னோர்க்குக் கிடைக்கவில்லை. நம் சந்ததியினருக்கும் கிடைக்கப்போவதில்லை. ஏனெனில் அதற்குள் நம் கொடி ஐ.நா.சபையில் பறக்கும். இந்த வாய்ப்பு நமக்கு மட்டுமே கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை தவறவிடாதீர்கள். தமிழர்களின் வரலாற்றில் தலையங்கம் எழுதப் போகிறவர்கள் நீங்களே.

தமிழ்நாட்டுத் தமிழர்களாகிய எங்களுக்கு இது போல் விடுதலைக்கு போராடும் வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லையே என ஏங்கிக் கொண்டி ருக்கிறோம்.

பிறப்புக்கும், இறப்புக்கும் இடைப்பட்ட போராட்டமே வாழ்க்கை. இப்படிப்பட்ட போராட்டம் காதலுக்காவும், காமத்துக்காவும் இல்லாமல் இலட்சியத்திற்காக அமைவது தான் நம் இனத்திற்கு பெருமை.

தமிழ்நாட்டு விடுதலை போராட்டத்தை திசை திருப்பவே இங்கு, இருக்கும் செய்தித்தாள்களும், திரைப்படங்களும், கல்விக்கூடங்களும் அரசு கைகூலிகளான காவல்துறையும் [போலீஸ்], இராணுவமும் செயல்பட்டுவருகிறது. சிந்திப்பவர்களை தீவிரவாதி, என்றும் சிந்திக்க வைப்பவர்களை தேசதுரோகி என்றும் சிறையில் அடைக்கிறது. அடக்கு முறைகள் ஆயிரம் வந்தாலும், தமிழீழவிடுதலை போராளிகளுக்கு எப்போதும் நாங்கள் துணை நிற்போம்.

அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கும். தமிழ் சகோதர, சகோதரி களே பயந்து வாழ நாம் பூனைகள் அல்ல, புலிகள்..உடனே புறப்படுங்கள். தமிழ் வரலாற்றில் உங்களுக்காக ஒரு பக்கம் காத்திருக்கிறது. தவற விடாதீர்கள் ஈக்கு தலையாய் இருப்பதைவிட புலிக்கு வாலாய் இருந் தால் கூட பெருமைதான்.

மரணம் நேருரதைத் தவிர்க்கமுடியாது. கற்களைப் போலவும்ஙல கட்டைகளைப் போலவும் செத்துமடிவதைவிட வீரர்களாக இறப்பது மேலானதல்லவா? நிலையில்லாத இந்த உலகில் இரண்டொரு நாள் அதிகமாகவே வாழ்ந்துவிடுவதால் பெற போகி பயன் தான் என்ன? வாழ்க்கை என்னும் கத்தி துருப்பிடித்து அழிந்துபோவதைவிட, தேய்ந்து அழிவதே மேலானது. அதிலும் குறிப்பாக நம் இன இழிநிலையை போக்கும் விடுதலை போரில் அழிந்து போவது மிகவும் பெருமை.

**பொங்கி எழு!**
**புதுமை படைப்போம்!**

**அன்பு சகோதரன் இலங்கோஸ்வரன்**
**செ.நா. பாளையம்.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இயற்கையில் மீறல்

மனிதனின் அறிவுக்கும் – ஆய்வுக்கும் எட்டிய படி உயிர்ப்பான ஒரே உலகம் உயிரிழந்து வருகின்றது. உயிர்கள் உருவாக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை பலகோடி ஆண்டுகளின் முன் (கார்ல சாகனின் கருத்துப்படி உயிரின உற்பத்தி 400 கோடி ஆண்டுகளின்முன் நிகழ்ந்தது.) உயிரினங்கள் உற்பத்தியாகக் கூடிய சூழ்நிலை பெற்றிருந்த ஒரே உலகம் பூமி. சுயாதீனமாக ஒரு வளிமண்டலத்தைப் பெற்று ஒடுக்கம் மூலம் கடல்கள் உருவாக – கடலின் ஆழத்தில் முதல் உயிர் பிறப்பெடுத்தது. பரிணாமங்கள் பல நிகழ்ந்து இன்றைய நவ உலகம் உருவாகி நிற்கின்றது.



இந்த உலக உருவாக்கம் இயற்கையின் கட்டமைவினால் ஏற்பட்டதே அன்றி மனித சிந்தனையால் ஏற்படவில்லை. பூமியைப் பொறுத்தமட்டில் இதன் இடத்துக்கிடம் தனித்தன்மை கொண்ட, உயிர்கள் உருவாகின. இந்த உருவாக்கம் சூழல்நிலையைப் பொறுத்து அமைந்தது. மனிதனின் பரிணாமம் நிகழ்ந்தபோது காலநிலை சூழல் ஆகியவற்றிற்கு இசைவாக வாழும் தகவுடன் தனித்துவ இனங்கள் உருவாகின. மத்திய கோட்டுப் பகுதியில் வெப்ப நிலையைத் தாக்குப் பிடிக்கக்கூடியதாக நீக்ரோ இனம் போன்ற கறுப்பின மனிதர்களும் – மங்கோலிய வகை மனிதர், அவர்கட்குரிய காலநிலைக்கிடாகவும் – வெள்ளையர்கள், அவர்கட்குரிய சூழலுக்கமைவாகவும் பரிணமித்தனர். தத்தம் சூழல் காலநிலைக்கேற்றதாகவே இன மனிதரின் வாழிடம், வாழ்வு முறைமை – கலை – பண்பாடு என்பன அமைந்தன. இந்த இயற்கை மாறுதல் அடையும் போது தனித்துவ இனங்கள் வாழ்வு முறையில் மாற வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. வாழ்வு முறைமை மாற்றம் அவனது தனித்துவங்களை அழிக்கின்றது. அல்லது இழக்கச் செய்கின்றது. வாழ்வு முறைமை மாற்றம் ஒரு கட்டத்துக்கு மேல் இயலாது போகவே இன அழிவே ஏற்படும் ஆபத்து நிலைமையும் உண்டு.

இந்த ஆபத்து நிலமைக்கு அடிப்படை சுற்றுச் சூழலில் ஏற்படும் மாற்றம்தான். பூமியின் உயிர்ப்புக்கு அது கட்டமைந்த இயற்கைச் சூழலே காரணம். இந்த இயற்கையின் மாற்றம் ஏற்படுத்தப்படுவது அழிவுக்கான அடிப்படையாகின்றது.

அபிவிருத்தி என்ற போர்வையில் பசுமை அழிக்கப்பட்டு வருகின்றது. பசுமையே பூமியின் உயிருக்கு ஆதாரம். உயிரின வாழ்வுக்கு ஆதாரமான நீரை வடித்தெடுத்து வழங்குவது பசுமை மரங்கள்தான். எப்படிப்பட்ட மரங்களானாலும் அது தன் சூழலுக்கு உயிர் வழங்கும் தகவமைப்பைக் கொண்டதாகும். உதாரணமாக இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் , வறள், உலர் வலயங்களைக் கொண்டது. உலர், வறள் வலையங்களானாலும் பாரம்பரிய காலமாக இந்தச் சூழலுக்கு ஈடாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தச் சூழலுக்கு பங்கம் வரும்போது மனிதர்கள் வாழமுடியாத நிலை ஏற்படுகின்றது. இதுதான் சுற்றுச் சூழலின் இயற்கைக் கட்டமைப்பின் பெறுமதி.

மனிதன் வளர்ச்சிப் போக்கு என்கிற பெயரில் இயற்கையை அழித்து வருகின்றான். இந்த அழிப்பு உயிரினங்களின் வாழ்வுச் சுழற்சியை பாதிப்படையச் செய்யும் ஒன்று. பூமியின் சகல உயிரின வாழ்வும் ஒன்றுக் கொன்று தொடர்பு கொண்ட பொருத்தப்பாடுடையதாகும். இயற்கையின் ஒரு கட்டத்தில் ஏற்படுத்தப்படும் ஊறு முழுக்கட்டத்தையும் வீழ்த்துவதாக்கி விடுகின்றது. மக்கள் தொகை அதிகமாகின்றது. தேவைகள் அதிகமாகின்றன. இதன் விளைவு அதிகளவு இயற்கையில் கை வைக்க வேண்டியதாகிறது என்பது விருத்தி நாடும் மனிதனின் நிலைப்பாடு.

மரங்களுக்கு உயிர் உண்டு
என்ற போதிலும்
அவை வெட்டப்படக்கூடாதென்று
நான் சொல்லமாட்டேன்.
இலைகள்
இயற்கைக்கு எழில் கூட்டுகின்றன
இருந்தாலும்
அவை கிள்ளப்படக்கூடாதென்று
நான் சொல்லமாட்டேன்.
கிளைகள்
மரங்களின் கரங்கள்தான்
என்ற போதிலும்
அவை முறிக்கப்படக்கூடாதென்று
நான் சொல்லமாட்டேன்
ஏனெனில்
எனக்கு ஒரு குடிசை வேண்டும்

இந்தக் கவிஞன் கூறும் நிலைதான்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழினத்திற்கும் என்பது ஒருபுறமிருக்க ஒட்டுமொத்தமான உயிரினப் பாதிப்புக்கு இதுவே காரணமாகின்றது என்பது முக்கிய விடயம்.

வட தமிழீழத்தில் இரு பாரிய குளங்களின் நிலை இன்றைக்கு சிக்கலாகி விட்டிருக்கிறது. நீண்டகால மழை வீழ்ச்சி அவதானிப்பின் கணிப்பின்படி முத்தையன் கட்டுக்குளம், வவுனிக்குளம் என்பன கட்டப்பட்டன. இயற்கை அழிவால் எதிர்பார்க்கப்பட்ட மழைவீழ்ச்சி தற்போது இல்லை. குறித்த சில ஆண்டுகளில் பெரு மழை பெய்தால் மட்டுமே இவை நிரம்பும். இல்லாவிடினின் இவை நிரம்புவதில்லை. இந்தக் குளங்களை ஆதாரமாகக் கொண்டு வாழ் நிலையை அமைத்த மக்களுக்கு இது அபாயமான ஒன்று. இந்தக் குளங்கள் நிரம்ப மாற்று ஒழுங்குகள் செய்யப்படாதவிடத்து வாழ்விழப்பு அபாயம் ஏற்படும். நமக்கு சூழல் பாதிப்பால் ஏற்பட்ட கசப்பான விடயத்திற்கான ஒரு உதாரணமாதான் இது.

இதுபோல் உலகம் எங்கும் இத்தகைய அபாயங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணத்தால்தான் இன, மொழி, மதங்களுக்கு அப்பால் நின்று சகலரும் சூழலைப் பாதுகாக்க மனித நேயத்தின் பால் குரலெழுப்புகின்றனர்.

ஏனென்றால் கலை, இலக்கியம் என்பவற்றுக்கு மேலாக மனித உயிர் வாழ்வின் இருப்பையே இது தீர்மானிப்பதாக இருக்கின்றது.

இயற்கையின் மீறல் மாற்றீடு:—

இயற்கை மீறல் தவறான செயலே. பெரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தேவைகள் அதிகமாகும் வேளையில் தேவைகளுக்கான ஈடுசெய்தல்களுக்காவே இயற்கை அழிவுக்கு உட்படுத்தப்படுகின்றது. மனிதத் தேவையா இயற்கை மீறலா என்ற தர்க்கம் உள்ளது. காடழிப்பு, தொழிற்சாலைக் கழிவுகளை சூழலில் பரவவிடுதல், காபனீர் ஒக்ஸைட் பிறப்பித்தல், பூமியின் உயிர்ப்பைக் காக்கும் ஓசோனை இளக்கும் வகையில் உற்பத்திகளை மேற்கொள்ளுதல் என்பவற்றால் சூழல் மாசாகின்றது. பூமியின் ஆயுள் குறைக்கப்படுகின்றது.

சூழல் மாசடைதலில் முக்கிய நிலையில் காடழிப்பு உள்ளது. ஏனைய விடயங்களை மட்டுப்படுத்தலாம். ஜேர்மன் நாடு மட்டுமே ஓசோனைப் பாதிக்கும் உற்பத்திகளை மேற்கொள்வதை நிறுத்தி விட்டது. ஏனைய நாடுகள் மக்கள் தேவைக்கெனக் கூறி உற்பத்திகளை விருத்தி செய்துள்ளன. இவற்றுக்கான நோக்கம் விற்பனையே (இலாபமே) தவிர உலக நன்நோக்கல்கள் அல்ல. ஜப்பான் நாடு தனக்குத் தேவையான மரங்களை தன்நாட்டில் வெட்டுவதில்லை. அயல் நாடுகளில் வாங்குகிறது. அதுதான் சூழல் பாதுகாப்பிற்கு தன் பங்களிப்பு என ஜப்பான் கூறிக்கொள்கின்றது. இப்படியாகத்தான் உலக முதலாளிய சக்திகளின் சூழல் பேணல் நிலை உள்ளது. சூழல் பாதுகாப்பு என இயக்கங்கள் செயற்பட்டு வரும் போதிலும் அவை சுறுபான்மையாகவே கருதப் படுகின்றன. இவற்றின் மனிதாபிமான நோக்கு எவராலுமே கருத்தில் எடுக்கப்படுவதில்லை.

சிறுதுளி பெரு வெள்ளம் என்பது போல பூமியின் ஒவ்வொரு சிறு துண்டுமே அதன் உயிர்ப்புக்கு ஆதாரமானது. ஒவ்வொரு சிறு பகுதியும் தம் தம் சூழலை பாதுகாக்க வேண்டியது அவசியம்.

தேவைக்காக இயற்கையை அழித்தல் கூட வாழ்வியலுக்கு முரணானதே. இதற்கான மாற்றீடு என்பது அதன் தன் சூழ்நிலைக்கேற்றதாகவே இருக்கும். குறிப்பாக இதுதான் மாற்றீடு எனக்கூற முடியாது. யாவரும் மனித நேயத்தின்பால் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் உணர்வுடன் சூழல் பேணலில் ஈடுபடவேண்டும். அதற்கு கல்வி முறைமையும் பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்படவேண்டும். சூழல் பேணலுக்கான ஒரு முழு ஆய்வு குறித்து இடத்தினை அடிப்படையாகக் கொண்டு தீர்வு காணப்படவேண்டும்.

★★★

# தமிழ் பெயர்களே சிங்களத்தில் மாற்றப்பட்டன

## சிங்கள ஆணைக்குழுவில் உண்மை திரிக்கப்படுகின்றது

இலங்கையில் இன்று பல ஆணைக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் சிங்கள ஆணைக்குழுவும் இடம் பெறுகின்றது. இன்று இக் குழு முன்னிலையில் 'சிங்களப் பெயர்கள் தமிழ் பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன' என்பது பற்றியும் சாட்சியம் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான திரிபுகள் வரலாற்றுத் தவறுகளாகும். தமிழ் முஸ்லீம் மக்கள் மிகவும் விழிப்படைவதோடு தங்கள் பாரம்பரியங்களையும், கலை, பண்பாடுகளையும் பேணிக் காப்பதில் மிகவும் கவனமாய் இருப்பதும் கடமையாகும்.

இலங்கையில் போர்த்துக்கேயர் வருகைக்கு முன் [1505] வடமேல் மாகாணக் கரையோரப் பகுதிகள் முழுவதும் தமிழ் முஸ்லீம் மக்களின் குடியிருப்புக்களாகவே இருந்துள்ளன என்பதைச் சரித்திர வாயிலாக அறிய முடிகின்றது. பல நூற்றாண்டுகளாக இப்பிரதேசத்திலுள்ள பல இடங்களின் பெயர்கள் தூய தமிழ் மொழியிலேயே அழைக்கப்பட்டுள்ளன.

1948, இலங்கை சுதந்திரம் அடைந்த பின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரமல்ல ஏனைய முஸ்லீம் மக்களின் சொந்த நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு, விவசாய கைத்தொழில் மீன்பிடி, அபிவிருத்தி எனக் கூறி சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து இம் மாவட்டத்திலுள்ள பல ஊர்களின் பெயர்களும் காலப்போக்கில் மாற்றி அமைக்கப்பட்டன. இதற்கு முன்னுதாரணமாக புத்தளம், கொழும்பு வீதியிலுள்ள, பழம்பெருமை பெற்ற 'ஐயனார் கோவில்'— 'ஐய நாயக்க கோவில்' என்று பெயர் மாற்றப்பட்டுள்ளதைக் காணலாம்.

புத்தளம் மாவட்டத்தில் திரிபுபடுத்தப்பட்ட சில ஊர்களின் உண்மையான பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| **கல்ப்பிட்டி** | _ | கல்பிடிய |
| **கண்டல் குளி** | _ | கந்த குளிய |
| **தலைவில்லு** | _ | தலவில |
| **ஏத்தாலை** | _ | எத்தாலே |
| **இலந்தையடி** | _ | இலந்தடி |
| **நாவல்காடு** | _ | நவக்கடுவ |
| **கரைத்தீவு** | _ | கரதுவ |
| **இலவங்குளம்** | _ | எலுவன் குளம |

இவ்வாறு திரிபுபடுத்தப்பட்ட பெயர்களையே அரச அலுவலகங்களிலும் ஏனைய அறிவிப்புப் பலகைகளிலும் காணக்கூடியதாக வுள்ளது. தமிழ் பேசும் மக்களுக்கு இவ்விவகாரம் நீண்ட கால வடுவை ஏற்படுத்தியுள்ளது..



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வைகறையின் வசந்தம்

அடித்து வைத்து நாய் குரைக்கும் சத்தமும் எங்கேயோ ஷெல் விழும் சத்தமும் அயர்ந்து கொண்டு போன அன்னம்மாவின் தூக்கத்தை விரட்டியடிக்க சுருட்டு பற்ற வைத்தால் கொஞ்ச நேரத்திற்கு நித்திரை கொள்ளாது இருக்கலாம் ஆனால் பொருட்கள் விலை ஏற்றத்தில் புகையிலையும் தப்பவில்லை. அப்பா..... முருகா..... இப்படியே போனால் சனம் எப்பிடிச் சீவிக்கிறது..... நீளமாக ஒரு பெருமூச்சை இழுத்துவிட்டாள் அன்னம்மா.

அப்பா இன்னும் வரவில்லையே மஞ்சு கேட்டாள்.

'இல்ல பிள்ளை இடம் பெயர்ந்து இரவல் வீட்டில் வந்திருக்கிறம் எண்ட எண்ணம் இந்த மனுசனுக்கு இருந்தால் இப்பிடிக் குடிச்சுப் போட்டு குஸ்தி போடுமே...... சே....

மனம் வெறுத்துப் புலம்பும் தாயை பரிதாபத்துடன் பார்த்தபடி வந்து அருகில் இருந்தாள் மஞ்சு

"அம்மா....... மெதுவாக அழைத்த மஞ்சு; அம்மா இந்த நாய்க்குட்டி இருக்கல்லே அது வெளியில குளிரில கிடந்து முனகுதம்மா உள்ளுக்குள்ள கொண்டு வந்து விடட்டே........."

"என்ன பிள்ள பகிடி விடுகிறாய் நாங்கள் படுக்கவே இடம் காணாது அதுக்குள்ள நாய்க்குட்டியும்"

"அம்மா பாவம் அம்மா நான் படுக்கிற ஓரமா விடுகிறேனே அம்மா, கெஞ்சும் மகளைச் சிரிப்புடன் பார்த்தாள் அன்னம்மா."

அன்னம்மாவிற்கு மகள் மஞ்சுவின் பல நடவடிக்கைகள் புதிராக இருக்கும். மஞ்சுவுக்கு மூத்த மூன்று பிள்ளைகளுக்கும் லண்டன், ஜேர்மனி, கனடா என்று கல்யாணம் கட்டி அனுப்பி இருந்தாள். மஞ்சுவுக்கும் அவள் படிக்கும் போது விரும்பிய பெடியன் சுகந்தன் ஜேர்மனி போய் ஆறு வருடமாகினாலும் மறக்காமல் இருந்து அவன் தாய் வந்து கேட்டு மகளையும் கொழும்புக்கு அழைத்துச் சென்று கதைக்கவிட்டு கூட்டி வந்திருந்தாள் அன்னம்மா ஆனால் சுகந்தன் தனி வீடு எல்லாம் எடுத்து வைத்திருந்தாலும், தன் அக்காமாரின் முன் காதலித்த மஞ்சு இளப்பமாக பேசப்படக்கூடாது என்ற கௌரவப் பிரச்சினைக்காக இரண்டு லட்சம் காசு மட்டும் தரும்படி கேட்டிருந்தான். ஆனால்... அளவெட்டியில் அன்னம்மா குடும்பம் இருந்த போது ஐந்து ஏக்கர் தென்னங்காணியோடு நெல், எள், உழுந்து என்பவை விதைப்பதால் கஸ்ரம் தெரியாமல்தான் வாழ்ந்தார்கள். இடம்பெயர்ந்து வந்த இடத்தில் என்ன செய்வது என்பதுதான் அன்னம்மாவின் தற்போதைய பிரச்சினை. வீட்டுச் செலவுகளுக்கே தற்போது கொழும்பு சென்று மகன்மாரிடம் கலோவில் கதைத்தாலும் கிலோவில் வாங்கி வரமுடியாமல் அல்லலப்பட்டுக் கொண்டிருந்தாள். எப்படியாயும் இரண்டு லட்சம் புரட்டி மஞ்சுவை விரைவில் அனுப்ப வேண்டும். இங்கே நின்றால் இயக்கத்திறக்குப் போய்விட்டால்?......... கடைசியாக பிறந்த மஞ்சு அதிர்ந்து நடக்கவே கதைக்கவோ தெரியாத அழகும் வனப்பும் நிறைந்தவள். ஆனால் வேறு பெண்கள் போல் வெளிநாட்டுச் சிந்தனையில் மூழ்குவதோ அதற்கேற்ற பகட்டோ இல்லாமல் தானுண்டு தன் வேலையுண்டு என உணர்ந்து; போகும் எறும்பில் தொடங்கி ஓடும்பாம்பு வரையிலும் பாவம் பார்ப்பாள்.

அளவெட்டிக்குப் பிறகு பாஷையூரில் இருந்து பின் சாவகச்சேரியில் இருந்து சூரியகதிர் இரண்டு நடவடிக்கையில் இடம்பெயர்ந்து வரும் போது வழியில் ஷெல் தாக்கி ஓர் நடுத்தர வயது ஆணும் பெண்ணும் விழ துடித்துப் போனாள் மஞ்சு – கூடவே மழையும் பெய்து கொண்டிருப்பதால் போன வருடம்தான் மகள் லண்டனிலிருந்து அனுப்பிய புதிய "காப்பெற்றால்" மூடிக்கொண்டு நடந்துவா மஞ்சு எனக் கொடுத்திருந்தாள் அன்னம்மா"

"ஐயோ ஒருத்தரும் இவர்களைத் தூக்காமல் போய்க்கொண்டிருக்கிறார்களே...... என்று அங்கலாய்த்தவள் ஷெல் பட்ட பெண்ணைத் தூக்க அவள் தண்ணீ....தண்ணீ... என்றவாறு மஞ்சுவின் மடியிலேயே உயிரை விட்டாள்.

"ஏய் மஞ்சு எல்லோரும் ஓடுகிறார்கள் வா அடுத்த ஷெல் குத்தப்போறாங்கள்."

"இல்லை..... மற்றவர்கள் போல என்னால வர ஏலாது. ஐயோ ஆரும் அந்த அண்ணனை தூக்குங்கோ அண்ணா பிளீஸ் தூக்குங்கோ..... இஞ்ச..... நில்லுங்கோ.

போவோர் எல்லோரிடமும் மஞ்சு கெஞ்சி களைத்துப்போக அந்த ஆணும் உயிரைவிட சீ... இது என்ன உலகம்...... அன்னம்மா இழுக்காத குறையாக இழுத்து "மஞ்சு வாடி உனக்கு என்ன விசரே பிடிச்சிட்டுது"

"ஓம்........ எனக்கு விசர்தான்.... விடுங்கோ என்னை..... அன்னம்மாவின் பிடியில் இருந்து வெடுக்கென தன்னை விடுவித்தவள் "அம்மா நீங்களாவது யோசியுங்கோ நாளைக்கு எங்களுக்கும் இப்பிடி நடக்க..... நாங்களும் தெருவில் தண்ணீ... தண்ணீ.... என அலறிச் சாகப் போறம்..... விக்கி விக்கி அழும் மஞ்சுவையும் கையைப் பிசைந்துகொண்டு நிற்கும் அன்னம்மாவையும் அருகே இரத்த வெள்ளத்தில் கிடக்கும் பிணங்களையும் பார்த்துக் கொண்டு செல்பவர்கள் இவர்கள் செத்துப் போய்க் கிடப்பவர்களின் உறவினர்கள் போலும் என நினைத்துக் கொண்டார்கள். அடுத்த ஷெல் குத்த "ஐயோ மஞ்சு வாடி" அலறும் அன்னம்மாவை நிமிர்ந்து பார்த்துவிட்டு உடுத்த உடுப்புகள் அலங்கோலமாகக் கிடக்க இறந்து கிடக்கும் அவர்கள் மேல் தான் மழைக்கு மூடி வந்த வெளிநாட்டுக் "காப்பெற்றால் மூடி விட்டு தாயைப் பின்தொடர்ந்தாள்."

"அட பிள்ள இன்னும் நித்திரை கொள்ளவில்லை"

ஆம் மஞ்சுவுக்கு எப்படித் தூக்கம் வரும் நெஞ்சுவருத்தமுடன் நெடுகிலும் கொழும்பு சென்று கெஞ்சிக் கூத்தாடி காசு வேண்டிவரும் அம்மா, குடிகாரத்

ஜெனிற்றா கரேஸ்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தந்தை, சுயநலம் பிடித்த காதலன் சுகந்தன் ஆனாலும் மஞ்சுவிடம் கூறுவார்கள் "மஞ்சு நீ எவ்வளவு குடுத்து வச்சவள் பள்ளிக் காதல் படலை மட்டும் என்பது உன்னிலை பொய்யாய்ப் போச்சே ஆறு வருஷம் அதுவும் ஜேர்மனியில வீடுகூட வாங்கியாச்சாம்..... ம்....? அவர்கள் கேட்க ஆனந்தத்தில் பூரித்துப் போகும் அன்னம்மா வெளிநாட்டுக் கதைகளிலே அளக்கத்தொடங்கி விடுவாள்.

ஆனால் மஞ்சு வெறுமையாகச் சிரிப்பாள். "ஐயோ இது காதல் இல்ல. சிலரது சுயநல வெறி. தான் விரும்பியவள். தான் எப்படி வாழ்ந்தாலும் அவள் எனக்கே வேணும் என நினைத்து கட்டுவது தான். ஆனால் உண்மைக் காதல் என்றால் ஒரு சதமும் வாங்காமல் கைப்புடிக்கலாம்தானே?

ம்....... மாமியும் கொழும்புக்கு அழைத்து வீடியோ எடுத்து சுகந்தனுடன் கதைக்கும் படி விட்டாலும் எல்லாம் ஏனோதானோ என்ற விதத்தில் செய்தாள். முதல் நாள் சுகந்தன் பேசிய ரெலிபோன் பேச்சே அவளுக்கு தலையில் இடி இறங்கியது போல் இருந்தது.

என்ன மஞ்சு பேசாமல் இருக்கிறாய் எதையாவது பேசு என்று கேட்டான் சுகந்தன் மறுபக்கம்.

டேய்....சொந்த நாட்டிலேயே சுதந்திரம் இல்ல அன்னிய நாட்டில அடிமைச் சீவியத்தில சுதந்திரம் என்கிறாயே...... பூனைக்கு விளையாட்டு எலிக்கு உயிர் போகிறது என்பதுபோல உங்கள் மாதிரி சில சுயநலக்காரருக்காக, அவர்கள் உல்லாசத்துக்காக எங்களினம் படும் துயரமும் வேதனையும் தொடர வேண்டும் என்கிறாயே நீ எல்லாம் ஒரு தமிழ் மகன்....." கத்த வேண்டும் போல் இருந்தது மஞ்சுவுக்கு...... "மஞ்சு.... என்னப்பா பேசு மன்.....ம்" ஓ – அதுக்குள்ள ஜேர்மனி யோசனையோ எதிர்பார்ப்புடன் கேட்டான் சுகந்தன்.

"இல்ல உங்களைப் போன்ற ஜென்மங்களில் பரிதாபப் படுகிறன். என்ர கற்பனை எல்லாம் சுதந்திர மண்ணில சுலபமாக சுவாசிக்கும் காலம் எப்ப என்பதை பற்றித்தான்......" என சொல்ல நினைத்தாள். ஆனால் சொல்லவில்லை. ரெலிபோன் பேச்சு முடிந்து அவர்கள் பகட்டுக்கெல்லாம் சிவனே...... எனத் தலையாட்டி விட்டு முள்ளில் நிற்பது போல் நின்று விட்டு ஒருமாதத்தால் கொழும்பிலிருந்து ஓடி வந்துவிட்டாள் மஞ்சு.

தாண்டிக்குளம் தாண்டிய பின்தான் ஏதோ சுதந்திர உணர்வு தோன்றியது போல் இருந்தது. இது என் மண். என்ர மக்களின்ர மண். இனி என்ன நடந்தாலும் சரிதான். இந்த மண்ணைவிட்டு அசைவது கிடையாது. என உறுதி எடுத்துக் கொண்ட பின்பே நிம்மதியாக இருந்தது.

எங்கேயோ ஒலித்த மணிக்கூடு பன்னிரண்டு மணி என்றது..... ஏற்கனவே எழுதி வைத்த கடிதத்தை எடுத்து தலையணை மேல் வைத்தவள் மெதுவாக எழுந்து வந்தாள். அம்மா கையை தலைக்கு அணையாக வைத்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள்.

"அம்மா....இயக்க அக்காமாரைப் பார்த்து நீ கூறுவாய் அடக்கமா, அம்சமா இருக்காமல் ஏன் ஆண்கள் போல் உடுப்பும் – எடுப்பும்––

"ம்..... அம்மா ஆணுக்கு அடிமையாகி அடுப்பை ஊதிக் கொண்டு அடங்கிக் கிடப்பதுதான் பெண்களின் அடக்கம். இல்லையம்மா – இல்லை அந்தக் காலம் மலை ஏறி விட்டது இன்று தம்பி வழி நடந்து, தலை நிமிர்ந்து, எதிரி தலை தெறிக்க ஓட விரட்டியடிப்பது தான் எங்களின் புதிய பரணி.

அம்மா இனி உனக்கு கவலை இருக்கக் கூடாது. அதர்மம் செய்யும் அநியாயப் பிசாசுகள்முன் பெண்களாகிய எங்கள் நிமிர்வுகள் ஒவ்வொன்றும் எதிரிகளின் போக்குகளுக்கு ஆப்பு வைக்கும் கருவிகளாக மாறவேண்டும், மாற்றுவோம். இனி மேல் எனக்காக இரண்டு லட்சம் சேர்க்கும் உபத்திரமும் உனக்கு இல்லை வருகிறேன் அம்மா..... உன்னைப் பார்க்க முற்றும் புதியவளாக..... போராளியாக..... வருவேன்......

பூனைபோல் இப்போது மெதுவாக நடந்தாள் மஞ்சு.

## மண்ணை மறந்த மைந்தர்களே...

உங்கள்
நெஞ்சினைக் கேளுங்கள்
எங்கள் தேசத்தின்
கிடுகு வேலியையும்
கிராமத்து வாசனையையும்
நாம்
இழப்போமா என்று.

இன்று அங்கே
குடியுரிமை கிடைத்து விட்டதால்
குடியிருப்பையே
உறுதிப்படுத்தி விட்டீர்கள்.
கவனம்
நாளை



உயிரிருப்புக்கே
உலை வைத்து விடுவார்கள்.

என்றோ ஒரு நாள்
உங்கள்
குழந்தைகளின் குழந்தைகள்
குரல் வளைகள் நெரிக்கப்படும்.
அப்போது
வரலாற்றைப் படைத்து நிற்கும்
என் தேசத்துக்கு
வந்தாரை வரவேற்கும்
தேவை அவசியம் தானா?

'காதோடு சொல்லிவிடு' - மேஜர் பாரதி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உறுதி

வானம் பொத்துக் கொண்டது போல பெய்துகொண்டிருந்த அடை மழை விடுவதாய் இல்லை. அந்த புதிய குடியிருப்புக் கிராமத்தைச் சுற்றி கண்ணுக்கெட்டிய தூரம்வரை வெள்ளம் படர்ந்திருந்தது. உயர்ந்த வயல் வரம்புகள் மட்டும் சில இடங்களில் தலைகாட்டின. பாதைக்கு குறுக்காக ஓடும் வாய்க்கால்களில் வெள்ளம் வேகமாக ஓடுவது சலசலத்துக் கேட்கிறது.

மழை பெய்யும் ஒருவாரமாக அந்தப் புதிய கிராமம் 'மௌனித்து' கிடந்தது. சுருட்டைப் பற்றவைத்து புகையை உள்ளிளுத்தால் வரும் மெல்லிய தற்காலிக சுகானுபவத்தில் மூழ்கியிருந்தார் நாகமணியர். எனினும் விழிகளிலே ஏக்கம் தொனித்தது. வாழ்க்கை அனுபவங்கள் வருங்காலத்தைத் தீர்மானித்து விட்டன. மழை இன்னும் நீடிக்கும் என்பது அவரது அனுமானம்.

இடம்பெயர்ந்து வன்னிக்கு வந்த ஒருவருடத்தில் மலேரியா நோய்க்காக இருபது இருபதாக நூறு குளிகைகளை இதுவரை விழுங்கி முடித்துவிட்ட நாகமணியரின் உடலில் அரைவாசி கரைந்துபோய் விட்டது. நடையில் இருந்த மிடுக்கும், முகத்தில் இருந்த சோபையும் இழந்த நிலைக்கு நாகமணியர் மாறியிருந்தார். அந்த சிவந்த மண்; அதுதான் செம்பாட்டு மண் கொடுத்த வாழ்வை எண்ணி, அதை இழந்த போது உணர்ந்து கொண்ட அருமைத் தன்மையை எண்ணி எண்ணி பெருமூச்சு விடுகிறார்.

...... நடு நடுங்கியபடியே அந்த தனியார் வைத்தியசாலைக்குள் நுழைந்தபோது.... சனம் முட்டியிருந்தது. ஒழுங்காக ஆசனத்தில் அமர்ந்து உள்ளே செல்வதற்கிடையில் மலேரியா ஒரு முறிப்பு முறித்து விட்டிருந்தது.

நாகமணியரின் முறை வந்தது.

"என்ன ஐயா என்ன பிரச்சினை...."

"குளிரோடை காய்ச்சல்.... ந... நடுக்கம்... விட்டுவிட்டு...." வைத்தியர் பரிசோதித்து முடிய வைத்தியரோடு உதவிக்கு நின்றவர் 'கிளாஸ்' ஒன்றில் நீரும் இரு நிறங்களில் ஆறு குளிகைகளையும் கொண்டுவந்து கொடுக்க.... மிண்டிவிழுங்கி தண்ணீரையும் குடித்துவிட்டு கட்டிலிலே படுக்கிறார்.

காய்ச்சல் நெருப்பாகக் கொதிக்கிறது. வாய் ஏதோ எல்லாம் பிதற்றியது. இன்னும் ஒரு மணித்தியாலத்தில் வியர்க்க எழுந்து வீடு செல்லலாம் என்பது இப்போது ஒரு வாய்ப்பாடு போல ஆகிவிட்டது.

"தம்பி, ஐயாவுக்கு நல்ல நல்ல செவ்விளநீர் வாங்கிக் குடும் காய்ச்சல் சூடு தணியும்"

வைத்தியர் சொன்னது, காய்ச்சலில் நடுங்கிக்கொண்டிருந்த நாகமணியருக்கும் கேட்டது.

செவ்விளநீர்....

அவரது வளவுக் கிணற்றை அண்டி செழித்து வளர்ந்து குலை குலையாக காய்த்துக் கொண்டிருந்த செவ்விளநீர் மரங்களை நினைத்துப் பார்க்கிறார் நாகமணியர். ஆளளவு உயரத்திற்கு எப்போதும் நீருள்ள கிணறு. ஊசி ஒன்று விழுந்தால்கூட, தெளி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாகத் தெரியும் துப்பரவான நீர். தினமும் தோட்டத்துக்கு இறைக்கும் போது, செவ்விளநீர் மரங்களினூடே பாய்ந்து செல்வதால் செழிப்பாக வளர்ந்து நின்றன அம்மரங்கள்.

சன்னாகம் சந்தையிலே வாழைக் குலைகளை விற்றுவிட்டு மனநிறை வோடு வருகிறார் நாகமணியர். வெய் யில் கொழுத்திக் கொண்டிருந்தது. தலைவியர்த்து பிடரியில் வழிந்து கொண்டிருந்தது. தலைப்பாகையை கழட்டி துடைத்தபடி வேகமாக வந்த அவரது வாயிலே சுருட்டு புகைந்து கொண்டிருந்தது. அவ்வூரைச் சேர்ந்த அருணாசலம் தனது பேரனை மொட் டாக்கு மூடியவாறு கைவாறாக அழைத்துச் செல்வதைக் கண்டார்.

"என்ன அருணாசலம் துலை யாலே......

"சண்முகப் பரியாரியிட்ட போட்டு வாறன்...."

"ஏன் ஆருக்கு வருத்தம்"

"என்ர பேரனுக்குத்தான். கண் ணெல்லாம் மஞ்சல் பத்திப் போட் டுது. அதுதான் கொண்டுபோய்க் காட்டினனான். செங்கமாரிக் குணம்... எண்டு சொன்னார்.

"செங்கமாரியோ........ அருணாச லம் வலுகவனமாக இருக்க வேணும்... வெய்யில் கொஞ்சமாயே எறிக்குது...."

"ஏறு மேன சைக்கிளில கொண்டு போய் வீட்டில விட்டு விடுறன்...." பக்குவமாய் சிறுவனை ஏற்றிவிட்டு சைக்கிளில் ஏறியபடியே....

"வரட்டே அருணாசலம்...." என் றார். சைக்கிள் புறப்பட்டது.

வீட்டுக்கு வந்த நாகமணியர் முதல் வேலையாக பதமான இளநீர்க் குலை ஒன்றை வெட்டி தன் சைக்கி ளில் கட்டி, அருணாசலம் வீடுநோக்கி புறப்பட்டார்.

.....கோராத உதவிகள், இப்படி எத்தனையோ.....

பேரிரைச்சலாக மழை பொழிந்தது. வயல் நிலத்தில் அமைந்த வீட்டு நிலம் பொதபொதத்தது. குளிர்காற்றும் ஊதிக் கொண்டிருந்தது. தள்ளாத வயது; பலவீனம் என்பன நாகம ணியருக்கு உதறலைக் கொடுத்தது. வீட்டோடு அனைவரும் ஓரங்களில் ஒதுங்கிக்கொண்டனர். ஒன்றுவிட் டொருநாள் சமைத்த அடுப்பில் இன்று தீ ஏறவில்லை. பெருமூச்சுகள் அன லாய் கொதித்துக் கொண்டிருந்தன....

.....சுற்றிவர மதிற் சுவர்கள், மூன்று அறைகளைக் கொண்ட பெரிய விசால மான வீடு, தோட்டத்து விளை பொருட்கள் மற்றும் இயந்திர உபகர ணங்கள் வைப்பதற்காக ஒரு பெரிய கொட்டில். எப்பொழுதும் விளை பெருட்களின் மணமும் எண்ணெய் மணமும் கலந்த அந்த மணத்தை சுமந்து வரும் சுவாசத்தை அனுப விக்கும் சுகம்... அந்தக் கொட்டிலுக் குள்ளே எப்போதும் விரித்தபடி கிடக்கும் சாக்குக்கட்டில். தலைமாட் டில் தலையணைக்குக் கீழே புகையி லைக் கீற்றுக்கள். உண்டபின் வரும், ஏவறையைத் தொடர்ந்து, புகையிலை யைக் கிழித்து, சுருட்டு ஒன்றை அதன் மணத்தை நுகர்ந்தபடியே சுற்றி நெருப் புத் தணல் ஒன்றினால் பற்றவைத்து புகைத்தவாறே சிந்தனையைத் தூண்டி மகிழும் சுகானுபவம். இரவு பத்து மணி வரை பேரப்பிள்ளைகளோடு கதைத்து மகிழ்ந்து, கட்டி நிற்கும் ஆடு, மாடுகளுக்கு தீன்போட்டு, கேற் பூட்டி, நாய் அவிழ்த்துவிட்டு, கதவுகள் எல் லாம் பூட்டி, தலைமாட்டிலே தீப் பெட்டி, 'ரோச்லைற்' என்பன எடுத்து வைத்துக் கொண்டு, "சிவ சிவ" என்று தலை சாய்த்து.....

வாழ்ந்த அந்த வாழ்வு....

இப்போ, நான்காவது இடப்பெயர் வாக கட்டிய கொட்டில்களின் அளவு கள் குறைந்து, விளையாட்டுப் போட் டிக்காக மைதானங்களில் போடும் பந்தல்கள் போன்று சேலைகளைச் சுற்றி மறைவு கட்டிவாழும் வாழ்வு.....

நெஞ்சை முட்டியது நாகமணிய ருக்கு.

மழை வீறாப்பாக பெய்து கொண்டி ருந்தது. கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த போது, சுமார் பத்து மைல்கள் நடந்து கடந்து இந்த இடத்தை தேர்வு செய்தார் நாகம ணியர். கிளிநொச்சியில் வசித்த வீட் டில் பிடுங்கக்கூடியதை பிடுங்கிக் கொண்டு வந்து அவசர அவசரமாக அமைத்த அந்த வீட்டில் குடிபுகுந் தார் நாகமணியர். பிள்ளை பெற்றி ருக்கும் தன் மகளை, கைக்குழந்தை யைக் கொண்டு இன்னும் அலைய முடியாதென்ற வேளையில் தான் அந்த இடத்தை அவசரமாக தேர்வு செய்திருந்தார். வரப்போகும் நாட்க ளைக் கணக்குப் பார்த்து மனதில் தீர்மானித்தபோது, அன்றைய சூழ் நிலை பள்ளக்காணி என்ற போதும் கொட்டில் போட தீர்மானித்தது. முடிந்த அளவு கொட்டிலை வேய்ந்து, சுற்றிவர சேலைகட்டி குடியிருப்பை அமைத்த போதும் மனம் அவருக்கு திருப்திப்படவில்லை...... நோய்......, வறுமை... வசதியீனம் என்பன அவரை வேதனைப்படுத்தின. மனைவி, பிள் ளைகள் சலிப்படைந்த போதும் அனை வரையும் தேற்றிக்கொண்டே வாழ்க்கை நடத்தினார்.

மனச்சாட்சியே இல்லாமல் மலே ரியா குடும்பத்தோடு கொடுமைப் படுத்தியபோது எல்லாமே வெறுத் தது. குடும்ப அங்கத்தவர் எத்தனை பேரை மலேரியா காவுகொள்ளுமோ என்று மனம் சஞ்சலப்பட்டது. வயது போன வேளையில் கூட குடும்பத் தின் கொழுகொம்பு அவர்தானே.

காற்று வீசிக்கொண்டிருந்தது.

மழையோடு சேர்ந்து காற்று வீசிக் கொண்டால் மரங்கள் வேரோடு பிடுங்கப்படும்.

வீட்டு தென்னை மரங்கள், வாழை மரங்கள், உயர்ந்த கமுக மரங்களை எண்ணிப் பார்த்தார் நாகமணியர்.

பெருமூச்சு நீண்டு வந்தது.

அணைந்து போன சுருட்டை பற்றவைக்கிறார் நாகமணியர்.

"என்ன ஐயா இண்டைக்கு வலுவா யோசிக்கிறியள்?" நாகமணியரின் மூத்த மகள் மலர் கேட்டாள்.

"...... ம்.... நான் பெரிய பிழை விட்டிட்டன் பிள்ளை...." நாகம ணியர் புகையை வெளியே ஊதிய படியே சொன்னார்.

ஐயா எதைச் சொல்லுறார். ஏன் ஒரு நாளும் உப்பிடிக் கதைக்காதவர் இண்டைக்கு உப்பிடிக்கதைக்கிறார்.

மனதுள் கேள்வியைப் போட்டாள் மலர்....

மழை தன் வேகத்தை குறைத்தது.

....ம் காத்தடிச்சது இதுக்குத்தான் தலையை மேலுங் கீழுமாக ஆட்டிய வாறு தனக்குள் கூறிக்கொண்டார் நாகமணியர்.

மலர் கேட்டாள்... "என்னய்யா ஏதோ பிழை விட்டிட்டன் எண்டி யள்..."

பெருமூச்சொன்றை விட்டபடியே "மழை விடட்டும் இந்தக் கொட்டி லைப் புடுங்கிப் போட்டு, கொஞ்சத் தூரம் தள்ளிப்போனால் ஒரு மேட் டுக்காணி கிடக்கு அதில போடுவம்" என்றவரின் வாயில் எரிந்து கொண் டிருந்த சுருட்டில் இருந்து வந்த புகை உள்ளே சென்று வெளிவந்த போது அவர் தேகம் புல்லரித்தது.

– நடராசா இராமநாதன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அச்சுப் பதிப்பு: வாசன் அச்சகம் இலண்டன் Tel: 0181 646 2885

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்